கல்கி



"என்ன மென்மையான, மனோகரமான நறுமணம்!"

என்கிறார்


ஜமுனா



"லக்ஸ் டாய்லட் சோப்பிலுள்ள புது மலர்போன்ற நறுமணத்தை நான் விரும்புகிறேன்."

உலகத்திலுள்ள அழகிய பெண்மணிகள் செய்வதைப் போல் நீங்களும் செய்யுங்கள் — சுத்தமான, வெண்மையான லக்ஸ் டாய்லட் சோப்பை உங்களுடைய தினசரி அழகு சாதனங்களில் ஒன்றாகச் செய்து கொள்ளுங்கள். மிருதுவான, நறுமணமுள்ள அதன் நுரை உங்களுடைய வதனத்தை சுத்தம் செய்து, மென்மையாக்கி, புத்துணர்ச்சியையளித்து, உங்களுடைய வனப்பை அதிகப்படுத்தட்டும்.

மேனி அழகிற்கு பெரிய சைஸ் சோப்பை உபயோகியுங்கள்.



லக்ஸ்
டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 432-50 TM

இந்தியாவில் தயாரித்தது

கல்கி

மலர் 15
இதழ் 7

மன்மத ௵ புரட்டாசி 2

பொருளடக்கம்

1955 செப்டம்பர் 18

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


குதூகலமான
50
வது
நாள்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
குலேபகாவலி
டைரக்ஷன்
ராமண்ணா
வசனம், பாடல்கள்
கஞ்சை ராமையாதாஸ்
சென்னை
ஸ்ரீ கிருஷ்ணா · கெயிட்டி · ராஜகுமாரி · உமா
மற்றும் தென்னாடெங்கும்



மலர் 15 இதழ் 7

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —*பாரதியார்*

மன்மத ௵ புரட்டாசி 2

புண்ணிய புருஷருக்குப் பாராட்டு

பாரத நாட்டின் அரசியல் அமைப்பில் மகாத்மா காந்தி உண்டாக்கிய மகத்தான புரட்சியைக் கண்டு உலகமே வியந்தது. நமது தேசத் தந்தை நடத்திய அறப் போர், உலக நாடுகள் அனைத்தும் அதிசயிக்கும் வண்ணம் பூரண வெற்றியைத் தந்தது.

அதே அற வழியைக் கடைப்பிடித்து, அன்பின் சக்தியினால் இன்று நம் தாய்த் திருநாட்டின் பொருளாதாரத் துறையில் இதற்கு முன் எங்கும் கண்டறியாத மாபெரும் புரட்சியை உண்டாக்கி வருகிறார் ஆச்சார்ய வினோபா பாவே.

அந்த மகா புருஷரின் 61-வது ஜெயந்தி வைபவம் சென்ற வாரம் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. இந்தியாவின் தலைநகரிலே நடந்த அவ்விழாவில், ஜனாதிபதி ராஜேந்திரபிரசாத் பேசும்போது, "வினோபாஜியின் பூதான இயக்கத்தை ஆதரிப்பது, நம் நாட்டுக்கு மாத்திரமல்ல, மானிட வர்க்கத்துக்கே அரும் தொண்டு புரிவதாகும்" என்று குறிப்பிட்டார்.

துவேஷம் ஒழிந்து அன்பு நிலவ வேண்டும் என்ற வினோபாஜியின் உபதேசம் கைமேல் பலனைக் கொடுத்திருக்கிறது என்ற உண்மை ஹைதராபாத்தில் நிகழ்ந்த வினோபா ஜெயந்தி விழாவின் போது வெளியாயிற்று.

நாலு ஆண்டுகளுக்கு முன் பொருளாதாரப் பூசல்களை அடிப்படையாகக் கொண்ட கலகங்கள் ஹைதராபாத்தைச் சேர்ந்த தெலுங்கானா பிரதேசத்தில் வெறி நடனம் புரிந்து வந்தன அல்லவா?

அந்த அராஜக வெறியைத் தணிப்பதற்கே வினோபா பாவே 1951-ம் ஆண்டில் தமது புனித யாத்திரையைத் தொடங்கினார். அந்த இடத்தில்தான் அராஜக இருளை அகற்றக் கூடிய அருள் ஒளியை வினோபா பாவே கண்டார். அந்த ஒளியே பூதான இயக்கமாக உருப்பெற்றது. முதன் முதலாக வினோபாஜியின் பூதான வேள்வி அங்கு ஆரம்பமாயிற்று.

அக்காலத்தில் கம்யூனிஸ்டுக் கலகங்களுக்கு எந்தக் கிராமம் தலைமை ஸ்தானம் வகித்ததோ, அதே போச்சாம்பள்ளி என்ற கிராமத்தில் இப்பொழுது வினோபா பாவேயின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார அமைப்பை நிர்மாணிக்கப் போகிறார்களாம்.

அப்பிரதேசம் வினோபாஜியின் ஆத்ம சக்தி காரணமாக அன்பு வழிகாட்டும் பிரதேசமாக மாறி யிருக்கிறது!

புண்ணிய சீலரான வினோபா பாவே மானிட வர்க்கத்தை அல்லல்படுத்தும் பெரும் பொருளாதாரப் பிரச்னைகளை அன்பு வழியினால் தீர்க்க முடியும் என்பதை உலகத்துக்கு நிரூபணம் செய்து காட்டியுள்ளார்.

காந்தி மகானின் தலைமையில் பாரத நாடு சுதந்திரம் அடைந்தது போலவே, ஆச்சார்ய வினோபா பாவேயின் தலைமையில் பாரத மக்கள் சுதந்திரத்தின் இலட்சியமான சுபிட்ச வாழ்வு பெறுவார்கள் என நம்பலாம்.

பாரத அன்னை பெற்றெடுத்த அத்தகைய தவப் புதல்வர் நீடூழி வாழ்ந்து பாரத மக்களுக்கு மாத்திரமல்ல, மானிடவர்க்கத்துக்கே அறநெறியையும் அன்பு வழியையும் காட்ட இறைவன் அருள் புரிவாராக!

பாரதியார் விழா

சென்ற செப்டம்பர் மாதம் 11-ந் தேதி தமிழ் நாடெங்கும் தமிழ் நாட்டுக்கு அப்பால் பம்பாய், கல்கத்தா, புது தில்லி முதலிய இடங்களிலும் பாரதியார் தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டிருப்பது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

சென்னை பாரதியார் சங்கத்தில் குன்றக்குடி அடிகளார் விழாவைத் தொடங்கி வைத்திருக்கிறார். மதுரையில் சென்னை முதன் மந்திரி ஸ்ரீ காமராஜர் தொடங்கி வைத்திருக்கிறார். பாரதியாரின் ஜன்ம பூமியான எட்டையபுரத்தில் டாக்டர் ஏ. சிதம்பரநாதச் செட்டியாரின் தலைமையில் 'ஜாம் ஜாம்' என்று விழா நடந்திருக்கிறது. இதெல்லாம் அறிந்து நமது தமிழ் அன்பர்களோடு சேர்ந்து நாமும் எல்லையற்ற ஆனந்தம் அடைகிறோம்.

சென்னை பாரதியார் விழாவை எத்தனையோ சந்தர்ப்பச் சிக்கல்களுக்கு மத்தியில் அசாதாரணமான பொறுமையுடனும் உறுதியுடனும் நின்று, வெற்றிகரமாக நடத்திவிட்ட ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியாரை எவ்வளவு பாராட்டினாலும் போதாது.

இந்த விழாவில் தொடக்க உரை நிகழ்த்திய குன்றக்குடி அடிகளார், வரவேற்புரையில் குறிக்கப்பட்ட 'ஆதார சுருதி'யையே தமது தலைப்பாகக் கொண்டு விரிவும், ஆழமும், பரிவும் நிரம்பிய அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார். தேசியம் என்றால் அது அரசியல் மட்டுமல்ல, ஒரு தேசத்தின் பண்பாடு, கலை எல்லாமே அடங்கிய தத்துவம் என்றார். இந்த வகையில் பாரதியார் எப்படி ஒரு தேசிய மகா கவியாக விளங்கினார் என்பதை அருமையான முறையிலே விளக்கி, பாரதியார் நமது நாயன்மார், ஆழ்வார்களின் பரம்பரையைச் சேர்ந்தவர் என்று வாழ்த்தி வணங்கினார்.

பேராசிரியர் ஸ்ரீனிவாசராகவன் தமது தலைமைப் பேச்சிலே "மனம் என்னும் எல்லையற்ற வெளியிலே செல்லும் அழகு, பரிவு, அறிவு ஆகிய மூன்று பாதைகளின் வழியாகவும் ஒரே காலத்தில் பாரதி நடந்தார். தம் அனுபவங்களை யெல்லாம் தெளிந்த உயிர்த் தமிழிலே வடித்து, கவிதா மண்டபம் அளித்தார்" என்று காவ்ய தரிசனத்தோடு பேசினார்.

எட்டையபுரம் பாரதி விழாவுக்கு ராஜாஜி அனுப்பிய வாழ்த்துரையை இங்கே குறிப்பிட விரும்புகிறோம். "பாரதியாரின் நினைவோடு, எதிர்பாராது மறைந்த 'கல்கி' அவர்களின் நினைவும் பின்னிப் பிணைந்து விட்டது. இந்த ஆண்டில் எட்டையபுரம் பாரதி மண்டபத்திலே, கோயிலின் சிறப்பு இருமடங்கு ஆயிற்று!" என்று கூறியிருக்கிறார் ராஜாஜி. இந்த நினைவு மண்டபத்தில் டாக்டர் ஏ. சி. செட்டியாரின் தலைமையில் நடந்த பாரதி விழாவில் பேராசிரியர் அருணாசல கவுண்டர் அவர்கள் 'கல்கி' திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்திருக்கிறார். மறுநாள் ரஸிகமணி டி. கே. சி. அவர்களின் திருவுருவப் படமும் திறந்து வைக்கப்பட்டது.

பாரதியாரின் நினைவு மண்டபத்தோடு நெருங்கிய தொடர்புள்ள இரண்டு அறிஞர்களின் திருவுருவப் படமும் அந்த மண்டபத்திலே அமர்ந்தது மிக மிகப் பொருத்தம். இந்த முக்கியமான காரியத்தைச் செய்து, எல்லா வருஷங்களையும் போல இவ் வருஷமும் எட்டையபுரத்தில் பாரதியார் விழா சிறப்பாக நடந்ததற்கு, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும் மற்றும் அவரோடு சேர்ந்த கலைஞர்களும், எட்டையபுரம் அன்பர்களும் பெரும் முயற்சி எடுத்து உதவினார்கள் என்பது மிகவும் பாராட்ட வேண்டிய காரியம்.

சங்கீத மும்மூர்த்தி நினைவு மண்டபம்

திருவாரூரில் சங்கீத மும்மூர்த்திகளுக்கு நினைவுக் கோயில் எழுப்பி, அவர்களுடைய சங்கீதப் பொக்கிஷத்தைப் பேணிப் பாதுகாக்கும் நற்பணியில் எல்லா அன்பர்களும் உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தோம். சென்னையிலும் மற்றும் வெளியூர்களிலும் உள்ள பத்திரிகாசிரியர்கள் அனைவரும் உற்சாகத்தோடு இதே முறையில் மக்களை வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். இது விஷயத்தில் நமது சகோதரப் பத்திரிகைகளும், கலைப் பிரமுகர்களும் ஏகோபித்து அளித்துள்ள இந்த ஒத்துழைப்புக்கு மிக்க மகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இந்தத் திருப்பணிக்கு ஆசி கூறி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியர் அனுப்பியுள்ள திருமுகமும் அடுத்த பக்கத்தில் பிரசுரமாகி யிருக்கிறது. 'கல்கி' வாசக நேயர்கள் அனைவரும் இம்மாதிரிக் கலைப் பணிகளில் எல்லாம் எப்பொழுதுமே ஊக்கத்தோடு உதவி வந்திருக்கிறார்கள். கலை வளர்ச்சியிலும், நம் நாட்டுப் பெரியோர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பி மரியாதை செலுத்தி அவர்கள் நினைவைப் பாதுகாப்பதிலும் 'கல்கி' அன்பர்களுக்கு உள்ள ஈடுபாடு இதற்கு முன்பு பல சந்தர்ப்பங்களில் நமக்குத் துணை புரிந்திருக்கிறது. இப்பொழுதும் இந்தத் திருவாரூர் மும்மூர்த்தி நினைவு மண்டப நிதிக்கு உற்சாகமாக நிதி அனுப்பி ஊக்கத்தோடு உதவி செய்ய வேண்டும் என்று பூரண நம்பிக்கையோடு நமது 'கல்கி' அன்பர்களை விசேஷமாகக் கேட்டுக் கொள்கிறோம்.


மற்றொரு திருப்பணி

'பேணி இசை வளர்க்கும் நந்தி பெம்மான்' என்று பாராட்டப்பட்டவன் நந்தி வர்ம பல்லவன். அப்படிப்பட்ட இசை வள்ளலுக்குச் சொந்தமான ஊர் மயிலாப்பூர் என்று பாடுகிறார், நந்திக் கலம்பக ஆசிரியர்.


"சுரபதி எனும் நந்தி
தொன் மயி லாப்பூர்."

எத்தனையோ பல நூற்றாண்டுகளாக மயிலாப்பூரிலே அருங்கலை, முக்கியமாக, சங்கீதம் வளர்ந்து வந்திருக்கிறது என்பது தமிழ் வரலாறு. அப்படிப்பட்ட தொன்மையான மயிலாப்பூரில் தொன்மையான சங்கீதத்தை வளர்த்து, சங்கீத சர்ச்சையின் மூலமும், பெரிய பெரிய வித்வான்களின் இனிய இசைவிருந்துகள் மூலமும் அரிய சேவை செய்து வந்திருக்கிறது

ஏற்றுக் கொள்வாரா?



மத்திய சர்க்கார் மந்திரி பந்த் அவர்களுக்குச் சமீபத்தில் 68-வது பிறந்ததின வைபவம் நிகழ்ந்தது. மாலையை ஏற்பாரா? அல்லது அப்படியே நிற்பாரா?



பரிசுப் போட்டிகளைக் கட்டுப்படுத்துவதற்காக, ஆயிரம் ரூபாய்களுக்குமேல் பரிசு வழங்கத் தடை விதிக்கும் மசோதா இந்திய பார்லிமெண்டில் வந்திருக்கிறது.

மயிலாப்பூர் சங்கீத அகாடமி. அதன் தலைவர் ஸ்ரீ கே.வி. கிருஷ்ணஸ்வாமிஐயர் அவர்கள் அந்த அகாடமியோடு பின்னிப் பிணைந்து அதன் வளர்ச்சியையே தமது உன்னத லக்ஷியமாகக் கொண்டு நீண்ட காலம் பணிபுரிந்து வந்திருக்கிறார். இப்பொழுது அந்த அகாடமிக்கு ஒரு கட்டடம் அமைக்க வேண்டும் என்று அவர் விடுத்துள்ள வேண்டுகோள் இந்த இதழில் வேறு பக்கத்தில் வெளியாகி யிருக்கிறது.

இந்த அகாடமி நிதிக்கு என்று அக்டோபர் ஐந்தாந் தேதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் கச்சேரி நமது பிரதம மந்திரி நேருஜியின் தலைமையில் நடைபெறவிருக்கிறது. கலையிலும், சங்கீத வளர்ச்சியிலும் எல்லையற்ற ஆர்வம் கொண்டுள்ள ரஸிக நன்மக்கள் இந்த நல்ல முயற்சிக்குப் பெரும் ஆதரவு தந்து கட்டடம் வெகு விரைவில் எழுந்தோங்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்க் கீர்த்தனைகள்

'கல்கி' பத்திரிகை தொடங்கி இரண்டாவது இதழிலேயே தமிழ்-இசை சம்பந்தமாக "கர்நாடகம்" (பேராசிரியர் கல்கி) அவர்கள் ஒரு ரஸமான கட்டுரை எழுதியிருந்தார்.

"தமிழ்ப்பாட்டை வளர்ப்பதற்கு அண்ணாமலை சர்வகலாசாலைக்காரர்கள் சில திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள்.........இவற்றுடன் திருவாங்கூர் ராஜ்யத்தார் கையாண்ட முறையையும் யோசிப்பது நலம். அதாவது, ஒரு பெரிய சங்கீத நிபுணரையும் ஒரு கச்சேரி வித்வானையும் சேர்த்து விட்டு மூன்று வருஷத்துக்கு இதே வேலையாக அமர்த்த வேண்டும். 'தமிழிலுள்ள சகல கீர்த்தனங்களையும் பாட்டுக்களையும் ஆராய்ந்து அவற்றைக் கச்சேரி பாணிக்குச் சரிப்படுத்தி அமையுங்கள்' என்று கேட்டுக் கொள்ள வேண்டும்.........செம்மங்குடி சீனிவாசய்யர் போன்றவர்கள் மனது வைத்தால் இரண்டு மூன்று வருஷங்களில் 'தமிழ்க் கீர்த்தனங்களுக்கு இணையில்லை' என்று செய்து விடலாம்......பாபநாசம் சிவன் ஆகியவர்களும் ஒத்துழைத்தால் காரியம் இன்னும் சுலபமாக முடிந்துவிடும்." இவ்வாறு எழுதிய 'கர்நாடகம்' அவர்கள், செம்மங்குடியின் சித்திரத்தைப் பிரசுரித்து அதற்குக் கீழ் ஒரு கேள்வியும் போட்டிருந்தார்கள்: "என்ன, செம்மங்குடி ஸார்! கொஞ்சம் வாயைத் திறந்துதான் சொல்லுங்களேன்! ஸ்வாதித் திருநாளுக்குச் செய்ததைத் தமிழ்க் கீர்த்தனங்களுக்கு எப்போது செய்யப் போகிறீர்கள்!"

இந்தக் கேள்விக்குப் பதில் இந்த இதழில் வெளியாகிறது. 'செம்மங்குடி ஸார்' தம்முடைய எத்தனையோ அலுவல்களுக்கு மத்தியில் இப்பொழுது இந்தத் தமிழ் இசைப் பணியைச் செய்ய முன் வந்ததை நமது நேயர்கள் சந்தோஷத்தோடு வரவேற்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். விநாயக சதுர்த்தியை யொட்டி வெளியாகும் இந்த வாரத்துக் 'கல்கி' இதழில், ஸ்ரீ பாபநாசம் சிவன் விநாயகரைப் பற்றி எழுதியுள்ள ஹம்ஸத்வனி ராகப் பாடல் ஸ்ரீ செம்மங்குடி சீனிவாச ஐயரின் ஸ்வரக் குறிப்புகளுடன் பிரசுரமாகிறது. ஸ்ரீ சிவன் தமிழ்க் கீர்த்தனங்களை ஸ்ரீ செம்மங்குடி சீனிவாச ஐயர் ஸ்வரப்படுத்தி 'கல்கி' சங்கீத நேயர்களுக்கு வாரந்தோறும் வழங்க முன் வந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

|| श्रीः ||

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकरभगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः

क्रियते नारायणस्मृतिः।

பிருத்வீ ஸ்தலமாயும் பிறப்பி
லேயே முக்தியளிக்கக்கூடியதா
யும் கமலாலயமென்னும் ப்ரஸித்தி
யடைந்துள்ளதுமான திருவாரூர்
க்ஷேத்திரத்தில் பிறந்து ஸங்கீத
மும்மணிகளென்று புகழ் பெற்ற
பெரியோர்கள் மூவரில் ஒருவராய்
விளங்கி அந்த க்ஷேத்திரத்தையே
வாஸஸ்தலமாகக் கொண்ட ஸ்ரீ முத்து
ஸ்வாமி தீக்ஷிதரவர்கள் வஸித்து
வந்த பழைமையான க்ருஹத்தை
வாங்கி திருவாரூர் ஸங்கீத மும்மூர்த்தி
ப்ரதிஷ்டா ஸபையின் நிர்வாஹகர்
கள் அங்கு நினைவு மண்டபம் கட்ட
முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதை
அறிந்தோம். அவர்கள் அனுப்பிய மேற்
படி மண்டபத்தின் அமைப்பைக் காட்டும்
கோட்டைக் குறிப்பும் வரப்பெற்றோம்.

அபாரமான ஸம்ஸ்க்ருத பாண்டி
த்யத்தைப் பெற்று திருவாரூர் க்ஷேத்திர
ஸம்பந்தமான ஸகல விசேஷங்களையும்
குறித்து பாடியிருப்பதுடன் நாட்டிலுள்ள
ஸகல உத்தம க்ஷேத்திரங்களைப் பற்றியும்
பாடியிருக்கும் மஹானான ஸ்ரீ தீக்ஷிதர்
அவர்களின் ஞாபகார்த்தமான இம்ம
ண்டபத் திருப்பணி கைங்கர்யத்திற்கு
ஆஸ்திகர்கள் யாவரும் அவரவர்
களுடைய சக்திக்குத் தகுந்தபடி
உபகாரம் செய்து க்ருதார்த்தர்களாகு
மாறு ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரீ ஸமேத
ஸ்ரீ சந்த்ரமௌளீச்வரரை ப்ரார்த்தி
க்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி:

விஜயயாத்ராஸ்தானம்
ஸ்ரீ காஞ்சீக்ஷேத்ரம்
மன்மத ச்ராவண சுக்ல சதுர்த்தி

குறிப்பு —

ஆழ்வார்களும் நாயன்மார்களும்
அருணகிரிநாதரும் ஒருங்கே
சேர்ந்து அவதரித்ததையே
போல் நாட்டிலுள்ள எல்லா க்ஷேத்தி
ரங்களையும் பாடியவர் ஸ்ரீ தீக்ஷித
ரேயாவர்.

என்ன சேதி?

கிராமத் திருவிழா

நாளது செப்டம்பர் மாதம் 18, 19, 20 ஆகிய மூன்று தினங்களும் தமிழ் நாட்டு மக்களுக்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததா யிருக்கும்.

அந்த மூன்று தினங்களும் தமிழ் நாட்டுப் பொதுஜனங்கள் தங்களுடைய கவனத்தைத் திருச்சிராப்பள்ளிப் பக்கம் செலுத்த வேண்டும்.

என்னத்துக்காகத் திடுதிப்பென்று திருச்சிராப்பள்ளிப் பக்கம் கவனத்தைச் செலுத்தச் சொல்லுகிறோம் என்று நேயர்கள் சற்றுத் திகைப்பதாகத் தெரிகிறது.

திருச்சிராப்பள்ளியில் 18-ந் தேதி முதல் 20-ந் தேதி வரை மூன்று தினங்களும் பிரம்மாண்டமான கிராமத் திருவிழா நடக்கப் போகிறது. திருச்சி அகில இந்தியரேடியோ நிலையத்தார் இந்தத் திருவிழாவைக் கோலாகலமாக நடத்தப் போகிறார்கள்.

சாதாரணமாக ரேடியோ நிலையத்தார் ஏதாவது விழாக்கள் நடத்தினால் ரேடியோ நிலையத்தின் ஸ்டுடியோக்களில் பாடகர்களையோ, இதர நிபுணர்களையோ ஒலிபெருக்கிக்கு முன்னால் உட்கார வைத்து விட்டு லட்சக் கணக்கான மக்கள் எதிரே இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு பாடும்படியோ, பேசும்படியோ செய்வார்கள். அப்படிச் செய்து ரேடியோ மூலம் நம்மைக் கேட்டு அனுபவிக்கும்படி செய்வது வழக்கம். ஆனால் திருச்சி ரேடியோ நிலையத்தார் இப்பொழுது "கிராமத் திருவிழா"வை உண்மையிலேயே கிராமத் திருவிழாவாக நடத்தப் போகிறார்கள்.

கிராம மக்களுக்குச் சர்க்கார் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் என்னென்ன நன்மைகள் செய்திருக்கிறார்கள் என்பதைப் பல நிகழ்ச்சிகள் மூலமாக விளக்கிக் காட்டப் போகிறார்கள். பொது மக்களுக்கு முன்னால் அதைப் பெரிய திருவிழாவாகவே கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் நேர்முகமாகவும் பார்த்தும் கேட்டும் மகிழவும், பதினாயிரக் கணக்கான ரேடியோ ரஸிகர்கள் கேட்டு ரஸிக்கும்படியும் செய்யப் போகிறார்கள்.

இந்த அதிசயமான கிராமத் திருவிழாவை மந்திரி கனம் எம். பக்தவத்ஸலம் ஆரம்பித்து வைக்கிறார்.

விழா நடைபெறும் மூன்று தினங்களிலும் பின்வரும் விசேஷ நிகழ்ச்சிகளை நடத்தப் போகிறார்கள். நையாண்டி மேளம், வில்லுப் பாட்டு, கரக ஆட்டம், "பாட்டைக் கேளுங்கள்" "நம் சாதனை", கிராம மாதர் சங்கத்தின் மாதர் நலப்பணி, ஒரு நாள் சேவை, பொய்க்கால் குதிரை ஆட்டம், எங்கள் ஊர் நாடகம், கிராமப் பஞ்சாயத்தின் ஓர் கூட்டம்-முதலிய நூதன நிகழ்ச்சிகள் திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தின் பிரத்தியேக அரங்கில் பொது மக்கள் முன்னிலையில் நடைபெறும்.

இவ்வளவோடு இல்லை. இந்தக் கிராமத் திருவிழாவை யொட்டி ஐந்தாண்டுத் திட்டத்தை விளக்கி ஒரு அருமையான கண்காட்சியும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

இவ்வாறு நாட்டுக்கு நலம் விளைவிக்கும் ஒரு சிறப்பு வாய்ந்த திருவிழா திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தாரால் நடத்தும்போது நமது கவனம் திருச்சிராப்பள்ளிப் பக்கம் செலுத்த வேண்டியது அவசியம்தானே !

திருச்சி நகரத்திலும் அதன் சுற்றுப் புறத்திலும் உள்ளவர்கள் நேரிலும், தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் இருப்பவர்கள் ரேடியோவைத் திருச்சிக்குத் திருப்பியும் இந்தக் "கிராமத் திருவிழா" நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

வரவேற்கிறோம்

சென்ற ஒன்பது வருஷங்களாகத் தென் கிழக்கு ஆசியாவின் கமிஷனர்-ஜெனரலாகச் சிங்கப்பூரில் தங்கி வந்த திரு மால்காம் மாக்டொனல்ட் அவர்கள் நம் நாட்டுக்கு பிரிட்டிஷ் ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டுச் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை புதுதில்லிக்கு வந்து சேர்ந்தார்கள் என்ற நற்செய்தி மலாய் நாட்டிலுள்ள ஏழு லக்ஷம் இந்தியர்களுக்கு மட்டுமன்றி நம்நாட்டில் முக்கியமாகத்தமிழ், தெலுங்கு மலையாள தேசத்திலுள்ள சுமார் ஐந்து கோடி மக்களுக்கும் பெரு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. மிக எளிமையோடு ஏழைகளிடம் சகோதரனைப் போல் பழகும் இயற்கை சுபாவம் உள்ள இனிய குணசீலர் இவர். கடினமான அரசியல் சிக்கல்களை ஒரு நொடியில் எல்லோருக்கும் திருப்திகரமான முறையில் தீர்த்து வைக்கும் உண்மை அன்பர். தெவிட்டாத பிரசங்கங்கள் செய்யும் அறிஞர். நம் நாட்டின்மீது இவருக்கு அபார பிரியமுண்டு. மலாய் நாட்டில் இந்தியர்களுடைய முக்கிய நிகழ்ச்சிகளிலெல்லாம் இவர் அன்புடன் பங்கெடுத்துக் கொள்வார். - சிங்கப்பூர் ஸ்ரீ இராம கிருஷ்ண

மடாலயத்துக்கு இவரது உதவி மிக அதிகம். மலாய் நாட்டில் தற்சமயம் உள்ள பிரஜா உரிமைச் சட்டம் அங்கு வாழும் இந்தியர்களுக்கும் சீனர்களுக்கும் மிகவும் கடுமையானது. இச் சட்டத்தின் நிபந்தனைகளைக் கொஞ்சம் தளர்த்தி, மாற்றி அமைக்க வேண்டுமென அந் நாட்டு அரசியல் வாதிகள் முயற்சி செய்து கொண்டு வருகிறார்கள். மற்றும் மலேயா நாடு நம் நாட்டுடன் நெடுங் காலமாக நட்பும், வியாபாரத் தொடர்பும் கொண்ட ஒரு அழகிய நாடு. திரு மால்காம் மாக் டொனல்ட் அவர்கள் இச் சமயம் நம் நாட்டிற்கு பிரிட்டிஷ் பிரதிநிதியாக வந் திருப்பது மிக்க மகிழ்ச்சி அளிக்கும்செய்தி யாகும். இவரையும் இவரது மனைவியாரை யும் மனமுவந்து வரவேற்கிறோம்.

பாரத ரத்தினம்

நேருஜிக்குப் 'பாரத ரத்தினம்' என்னும் பட்டம் அளித்த வைபவத்தில் ஒரு ரஸமான நிகழ்ச்சி நடந்தது. இத்தகைய பட்டம் பெறுபவர்களைப் பற்றிய வாழ்க் கைக் குறிப்பும், சேவை விவரங்களையும் சுருக்கமாகத் தயாரித்து வைபவத்தின் போது படிக்கப்படும் அல்லவா? அவ்விதம் தயாரிக்கப்பட்ட குறிப்புக்களில் எல்லாம் மிகச் சுருக்கமானது பண்டித நேருவைப் பற்றி எழுதப்பட்ட குறிப்புத்தான். ஒரே ஒரு வரிதான் இருந்தது—"ஜவாஹர்லால் நேரு பாரதப் பிரதம மந்திரி" என்று.

ஆம்! பண்டித ஜவாஹர்லால் நேருவின் தொண்டுகளைப் பத்து வரிகளில் அடக்கப் பார்ப்பது போன்ற பேதைமை ஒன்று உண்டா? இன்று உலகமக்களே அவரைச் சமாதான தேவ தூதராகக் கருதுகிறார்கள். அப்படிப் பட்டவரைப் பற்றிக் குறிப்புகள் சொல்லுவதை விடச் சொல்லாமலிருப் பதிலே எவ்வளவோ ரஸமிருக்கிறது என் பதை நமது சர்க்கார் உணர்ந்து காரியத் தில் நடத்திக் காட்டியதை மிகவும் பாராட்டுகிறோம்.



86. நாகபாணங்கள்

கடல் போன்ற பெரும் வானர சேனையைக் கொண்டு ராமன் லங்கையை நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து முற்றுகை யிட்டிருப்பதை ராவணனுக்கு அவனுடைய ஆட்கள் சொன்னார்கள். அவனுக்குக் கோபம் மேலிட்டு மாளிகை ஏறிப் பார்த்தான். அவர்கள் சொன்ன வண்ணம் நான்கு பக்கங்களிலும் மரங்களையும் கற்பாறைகளையும் எடுத்துக் கொண்டு சூழ்ந்து நின்ற வானரர்களைப் பார்த்தான். இவர்களை எப்படி அழிப்பது என்று ஆலோசித்தான்.

ராமனும் அச்சமயம் ராக்ஷஸப் படையால் காக்கப்பட்ட லங்கா நகரத்தைப் பார்த்தான். “இந்த மதிலுக்குள்ளே அல்லவா சீதை சிறைப்பட்டு வாடி வருகிறாள்” என்று எண்ணிக் கோபம் மேலிட்டு வானரர் படைக்கு உத்தர விட்டான். “கோட்டையைத் தாக்குங்கள்! அரக்கர்களைக் கொல்லுங்கள்! தயங்க வேண்டாம்!” என்றான். அவர்களும் உற்சாகமாக யுத்தம் ஆரம்பித்தார்கள்.

“வானர ராஜனுக்கு ஜெய மங்களம்! ராமலக்ஷ்மணர்களுக்கு வெற்றி! விழ்க அரக்கர்கள்!” என்று பெருங் கோஷம் செய்து சிலர் மலைகளை உடைத்துப் பெரும் பெரும் பாறைகளை எடுத்து வீசி மதிலைத் தாக்கினார்கள். சிலர் பெரிய மரங்களை வேரோடு பிடுங்கி எடுத்து, அரக்கர்களைத் தாக்கினார்கள். மதிலையும் மதில் வாயிலையும் தாக்கித் தகர்க்க ஆரம்பித்தார்கள்.

இதைக் கண்டு ராவணன் ஒரு பெரும் படையை ஏவினான். “உடனே வெளியில் சென்று இந்த வானரர்களை வதம் செய்யுங்கள்” என்று அவன் உத்தரவிட்டதும் பேரிகை, சங்கநாதங்களும் ராக்ஷச வீரர்களுடைய கோஷங்களும் சமுத்திரத்தைப் போல் கிளம்பிற்று. அரக்கப் படையாளர் சகல ஆயுதங்களுடனும் நகரத்திலிருந்து வெளியே சென்று வானரர்களுடன் கோர யுத்தம் நடத்தினார்கள்.

வானரர்களும் தங்கள் ஆயுதங்களாகிய பாறைகற்களும் மரங்களும் நகங்களும் முஷ்டிகளும் உபயோகித்து ராக்ஷஸர்களை எதிர்த்தார்கள். இரு பக்கத்திலும் ஆயிரக் கணக்கான பிரேதங்கள் விழுந்தன. பூமி முழுதும் ரத்தச் சேறும் வெட்டப்பட்ட அவயவங்களும் மாமிசத் துண்டங்களுமாக கோர யுத்தம் நடந்தது.

இதைத் தவிர வீரர்களோடு வீரர்கள் கை கலந்து த்வந்த யுத்தங்களும் நடைபெற்றன. அங்கதனும் இந்திரஜித்தும் ருத்திரனையும் யமனையும் போல் தனிச் சண்டையிட்டார்கள். ப்ரஜங்கன் என்ற ராக்ஷசனுக்கும் விபீஷணனுடைய மந்திரியான சம்பாதிக்கும் யுத்தம் நடந்தது. ஜம்புமாலியும் ஹனுமானும் ஒருவரையொருவர் எதிர்த்தார்கள். அப்படியே நீலனும் நிகும்பனும், லக்ஷ்மணனும் விரூபாக்ஷனும். இன்னும் பலர் இம்மாதிரித் தனிச் சண்டை செய்தார்கள்.

இந்திரஜித்தினுடைய தேரும் குதிரைகளும் நாசமாயின. அங்கதனும் இந்திரஜித்தின் கதாயுதத்தால் அடிபட்டான். ஜம்புமாலி ஹனுமானைச் சக்தியால் அடித்தான். மாருதி ஜம்புமாலியின் ரதத்தைப் பொடியாக்கினான். அரக்கர்கள் அம்புகள் எய்து ராமனை எதிர்த்தார்கள். ராமனும் பல அரக்கர்களைத் தன் பாணங்களால் கொன்றான்.

வித்யுன்மாலி சுஷேணன் பேரில் பாணங்கள் விட்டான். சுஷேணன் ஒரு பெரிய பாறை எடுத்து அரக்கனுடைய ரதத்தைத் தூளாக்கினான். வித்யுன்மாலி கதாயுதமெடுத்துக் கொண்டு பூமியில் குதித்து சுஷேணனைத் தாக்கினான். சுஷேணன் ஒரு பெரிய கல்லை எடுத்து அரக்கனையடித்து நசுக்கிக் கொன்றான். இப்படியே இன்னும் பல வீரர்கள் யுத்தம் செய்து பலர் மாண்டார்கள். பகல் முழுதும் சண்டை நடந்தது. ராத்திரியாயினும் நிறுத்தாமல் அரக்கர்கள் போர் நடத்தினார்கள்.

ராத்திரி யுத்தம் வெகு கோரமாக நடந்தது. ரத்தம் ஆறாகப் பெருகிற்று. இரு பக்கத்திலும் பலர் மாண்டார்கள்.

இந்திரஜித்தை அங்கதன் தாக்கினான். அரக்கனுடைய குதிரைகளையும் சாரதியையும் கொன்று தேரையும் பொடியாக்கினான். வானரர்கள் அங்கதனுடைய சாமர்த்தியத்தைக் கண்டு, உற்சாகமடைந்து ஜெயகோஷம் செய்தார்கள். வானர யுவராஜனுடைய தைரியத்தையும் பலத்தையும் சாமர்த்தியத்தையும் பார்த்துச் சேனையிலிருந்த வீரர்கள் அனைவரும் புகழ்ந்தார்கள். தேரை யிழந்த இந்திரஜித்துக்குக் கோபாவேசமாகி, தன் மாயவித்தைகளை உபயோகிக்க ஆரம்பித்தான்.

மந்திரத்தினால் யாருக்கும் காணப்படாமல் மறைந்து நின்று யுத்தம் செய்தான். ராம லக்ஷ்மணர்கள் மேல் பலவித பாணங்களைப் பிரயோகித்து அவர்களை உபத்திரவப்படுத்தினான். பல வீரர்கள் அவன் இருக்குமிடத்தைத் தேடித் தேடிப் பார்த்தார்கள். மாயமந்திரத்தின் சக்தியால் மறைந்து நின்ற ராவண குமாரனை அவர்களால் காண முடியவில்லை. அவன் சரமாரி பெய்து கொண்டேயிருந்தான்.

பிறகு ராமலக்ஷ்மணர்களின் மேல் நாகபாணங்கள் எய்தான். அதனால் அவர்கள் கட்டுண்டு அசைய முடியாமல், யுத்த பூமியில் விழுந்தார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே இன்னது செய்வது என்று தோன்றாமல் திகைத்தார்கள். ராமனுடைய நிலையைப் பார்த்து லக்ஷ்மணன் மிகவும் துக்கப்பட்டான். வானரர்கள் சூழ்ந்து கொண்டு பிரலாபிக்கலானார்கள்.

இந்திரஜித் ராக்ஷச சேனையைப் பாராட்டி விட்டு, லங்கா நகரம் சென்றான். வெற்றிக் கொண்டாட்டத்தோடு தகப்பனிடம் போய் "ராம லக்ஷ்மணர்களின் காரியம் முடிந்தது. யுத்த பூமியில் பிரக்ஞையற்றுக் கிடக்கிறார்கள், என்னால் வதம் செய்யப்பட்டார்கள்" என்று சொன்னான். ராவணன் மகிழ்ச்சிப் பரவசமானான். குமாரனைக் கட்டி யணைத்துக் கொண்டு "வீரனே!" என்று புகழ்ந்தான்.

வானர வீரர்கள் உள்பட எல்லாரும் காயமடைந்து தைரியமிழந்து ராஜகுமாரர்கள் விழுந்து கிடப்பதைப் பார்த்துத் தோற்றோம் என்று நிச்சயம் செய்து கொண்டு இன்னது செய்வது என்று தெரியாமல் சுக்ரீவன்

திகைத்து நின்றதை விபீஷணன் பார்த்து, "இது தகாது ; ராம லக்ஷ்மணர்கள் முகங்களைப் பாருங்கள். பொலிவு குறையவில்லை. பயப்படா தீர்கள். சீக்கிரத்தில் இந்த மயக்கம் தீர்ந்து மறுபடி வெற்றியுடன் யுத்தம் செய்ய முனைவார்கள்" என்று சொல்லி வானர ராஜனைத் தைரியப்படுத்தி னன். வானரர்கள் பயந்து போகாம லிருப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யத் தொடங்கினர்கள். சிதறிப் போயிருந்த சேனையை மறுபடி ஒழுங்குபடுத்தி ஜாக்கிரதையாக அணிவகுத்துக் காத்து நின்றார்கள்.


இந்திரஜித்தால் ராம லக்ஷ்மணர்கள் வதம் செய்யப்பட்டார்கள் என்று ராவணன் லங்காநகரத்தில் விளம்பரப் படுத்தினன். ராக்ஷஸிகளை யழைத்து, "உடனே போய்ச் சீதைக்குச் சொல் லுங்கள். இராமன் இறந்தான், இரு ராஜகுமாரர்களும் யுத்த பூமியில் தரையில் மாண்டு கிடக்கிறார்கள், அவர்களுடைய வானர சேனை அழிக் கப்பட்டது என்று சொல்லுங்கள். மாய புஷ்பக விமானத்தில் அவளை ஏற்றிக்கொண்டு நீங்களும் போங்கள். போய் யுத்தத்தின் நிலையைச் சீதைக் குக் காட்டுங்கள். அந்தப் பிடிவாதக் காரிக்கு இப்போது விளங்கும். என் னைத் தவிர வேறு ஆதரவு இல்லை யென்று தெரிந்து கொண்டு என்னைச் சேருவாள்" என்றான்.

அந்த ராக்ஷஸிகளும் அப்படியே செய்தார்கள். ஜானகி யுத்த பூமியை ஆகாயத்தில் விமானத்தி லிருந்து பார்த்தாள். பார்த்துத் துக்கக் கடலில் மூழ்கினள். ராம லக்ஷ்மணர்கள் தரை யில் அசைவற்றுக் கிடப்பதையும் அவர்கள் அருகில் அவர்களுடைய ஆயுதங்கள் பிடிப்பாரின்றிச் சிதறிக் கிடப்பதையும் பார்த்தாள். இனி தனக்கு ஒரு கதியுமில்லை என்று எண்ணிப் பிரலாபித்தாள். "வருங்கால விஷயமறிந்தவர்கள் என்னைப் பற்றிச் சொல்லியதெல்லாம் பொய்யாயிற்றே! புருஷன் மாண்டு போவான், நான் விதவையாவேன் என்று அவர்கள் சொல்லவில்லையே! மக்களைப் பெறு வேன்; பட்ட மகிஷியா யிருப்பேன் என்றெல்லாம் அவர்கள் சொன்னது முற்றிலும் பொய்யாயிற்றே! ஐயோ கௌசல்யே! குமாரன் வருவான் வரு வான் என்று எதிர்பார்த்த வண்ண மிருக்கும் அவளுடைய துக்கத்தை யார் தீர்ப்பார்கள்? கடலைத் தாண்டி வந்து குளப் படியில் மூழ்கி உயிர் நீத்தது போல் ஆயிற்றே. உங்க ளுடைய திவ்ய அஸ்திரங்கள் எல்லாம் என்னவாயிற்று? எந்த எதிரியும் உங்களை வெல்ல முடியாது என்றார் களே! எல்லாம் பொய்யாயிற்றே!" என்று பிரலாபித்தாள். அப்போது சீதைக்குத் துணையும் காவலுமாக இருந்த ராக்ஷஸிகளில் ஒருத்தியான திரிஜடை சீதைக்குத் தைரியம் சொன்னாள். "பிரியமான சீதையே! நீ ஒன்றும் துக்கப்பட வேண்டாம். உன் புருஷனாவது லக்ஷ்மணனாவது இறக்க வில்லை. முக லக்ஷணங்களைப் பார். இறந்தவர்கள் முகம் வேறு வித மாக இருக்கும். அவர்கள் மாயாஸ் திரத்தால் கொஞ்சம் நேரம் கட்டுண் டிருக்கிறார்கள். சேனை ஒழுங்கைப் பார். நீ தைரியமாக இருக்க வேண் டும். இந்தக் காட்சியைக் கண்டு பயப் பட வேண்டாம்" என்றாள். அமிருதம் போன்ற இந்த வார்த்தையைக் கேட் டுச் சீதை மறுபடியும் தைரிய மடைந் தாள். பிறகு விமானம் லங்கைக்குத் திரும்பிச் சென்றது. சீதை மறுபடி அசோக வனத்தில் விடப்பட்டாள். அவளும் அங்கே ராக்ஷஸிகளின் மத்தி யில் துயரத்தில் மூழ்கிக் கிடந்தாள்.

* * *

நாகபாசத்தின் சக்தி தளர்ந்தது. ராமன் கண்களைத் திறந்து எழுந் தான். பலமான காயங்கள் பட்டிருந் தாலும் தன் தேக பலத்தாலும் ஆன்ம சக்தியாலும் சுவாதீனமடைந்து எழுந் தான். எழுந்ததும் பக்கத்தில் வீழ்ந்து கிடந்த தம்பியைப் பார்த்து "ஐயோ" என்று அலறினன். "நான் இனி என்ன வெற்றியடைந்து என்ன பயன்? உன்னை ஏன் நான் கூடக் காட்டுக்கு அழைத்து வந்து கொன்றேன்? நீ யின்றி ஊருக்குத் திரும்பி நான் எப்படிப் போக முடியும்? நான் துக்கப் படும் போது எல்லாம் சமாதானமும் தைரியமும் சொல்லுவாயே! இப் போது ஒன்றும் பேசாமல் மௌன மாக இருக்கிறாயே? நான் உன்னை இழந்து எப்படி உயிர் வைத்திருக்க முடியும்? உன்னைப் போன்ற ஒரு


"இந்த அழகு தரும் சோப் தனிவிதமானது"
புதியது!
நறுமணமுள்ளது!
ப்ரீஸ்
BREEZE
TOILET SOAP
"ஆக்டமர் கலந்துள்ளது"
* உடலிலுண்டாகும் துர்கந்தத்தை நீக்குகிறது
உங்களை புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது!
* சருமத்திலுள்ள கிருமிகளை கொல்லுகிறது
சருமத்தை ஆரோக்கியத்துடனிருக்க பாது காப்பளிக்கிறது!
ஆக்டமர் (பைதியோனல்) மான்ஸான்டோவின் புதுமையான பாக்டீரியோஸ்டாட். அது கிருமிகளை கொல்லக் கூடிய சிறந்த சக்தியை உடையதாயிருந்தாலும், சருமத்திற்கு மென்மையைத் தரக்கூடிய ரசாயனப் பொருள்.
BREEZE
TOILET SOAP
விலை 8 அணாதான்
உள்ளூர் வரிகள் நீங்கலாக
ப்ரீஸ்-ஆக்டமர் கலந்த அழகு தரும் சோப்
BZ. 1-50 TM
இராஸிக் கம்பெனி லிமிடெட், லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.



ரெடிமேட் உடைகளில்—உடம்புக்குப் பொருந்தாதபடி அவை ஒருபொழுதும் சுருங்கவே செய்யாது

நீங்கள் ரெடிமேட் ஷர்ட்டுக்களோ, நிஜார்களோ அல்லது வேறு உடைகளோ வாங்கும்போது 'ஸான்பொரைஸ்ட்' (Sanforized) டிரேட் மார்க்கைப் பார்க்க வேண்டுமென்று வற்புறுத்தவும். அவ்விதமிருந்தால் உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்கவே செய்யாது என்று உறுதி செய்துகொள்ளலாம்.

அநேகப்படியான உடைதயாரிப்பாளர்கள் சுருக்கம் செய்யப்பட்ட 'ஸான்பொரைஸ்ட்' துணிகளையே உபயோகித்து வருகிறார்கள். இந்தத் துணி, மில்களில் விஞ்ஞான முறையில் முன்னதாகவே சுருக்கம் செய்யப்பட்டது.

'ஸான்பொரைஸ்ட்' என்ற அடையாளம் நீடித்த கவர்ச்சிக்கு உங்களுக்கு உத்திரவாதம்.

SANFORIZED
REG'D TD MK
SHRUNK FABRIC

ஸான்பொரைஸ்ட்-கே-மெஹ்மான்: பிரதி செவ்வாய்க்கிழமை இரவு 7-30 மணிக்கு ரேடியோ ஸிலோனிலிருந்து 41 மீட்டர்கள் ஒலிபரப்பப்படும் இனிமையான ஹிந்தி நிகழ்ச்சியைக் கேளுங்கள்.

ஸான்பொரைஸ்ட் ஸெர்வீஸ்

'பாரத்ஜோத்', நேதாஜி ஸுபாஷ் ரோடு, மெரின் டிரைவ், பம்பாய் 2

ACP. 1758

வீரன் உண்டா? யாரையும் சம்பாதிக்கலாம். உன்னைப் போன்ற ஒரு வனை நான் எங்கே கண்டு பெற முடியும்? நூற்றுக் கணக்கில் கைகளைப் பெற்ற கார்த்தவீரியார்ஜுனனைப் போல் இரண்டு கைகளைக் கொண்டே நீ சரமாரி பெய்து அரக்கர்களைக் கொன்றாயே! எப்படித்தான் நீ மாண்டாய்? என் கூட அரண்ய வாசத்துக்கு வந்தாய், இப்போது உன் கூட நான் யமாலயம் செல்வேன். தோற்றேன். விபீஷணனுக்கு நான் கொடுத்த வாக்குறுதி பொய்யாயிற்று. வானர ராஜனே! வானர வீரர்கள் அனைவரையும் கூட்டிக் கொண்டு கிஷ்கிந்தைக்குச் செல்லுங்கள். எனக்காக நீங்கள் உழைத்தீர்கள். மித்திர தருமத்தைக் குறைவின்றிக் காத்தீர்கள். உங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இனி நீங்கள் மாய்வதில் பிரயோஜனமில்லை. உங்கள் நகரத்துக்குத் திரும்பிப் போங்கள். நான் இங்கேயே உயிரை விடுவேன்!" என்று ராமன் துயரம் தாங்காமல், தைரியம் இழந்து பிரலாபித்தான்.

அச்சமயம் விபீஷணன் கதாபாணியாக வந்து சேர்ந்தான். கன்னங்கரேலென்று பிரகாசித்த விபீஷணனுடைய பெரும் வடிவத்தைக் கண்டு வானரர்கள் இந்திரஜித்தே வந்து விட்டான் என்று பயந்து சிதறிப் போக ஆரம்பித்தார்கள். பிறகு விபீஷணன் என்று கண்டு கொண்டு அமைதியடைந்தார்கள்.

நிலைகுலைந்த வானரர்கள் விபீஷணனைக் கண்டதும் இவன் இந்திரஜித்தே என்று எண்ணி விழுந்து ஓடிய போது, "இதென்ன வானரர்கள் இப்படிச் சிதறி ஓடுகிறார்கள்? காரணம் என்ன?" என்று சுக்ரீவன் கேட்டான்.

"ராமலக்ஷ்மணர்கள் காயப்பட்டு விழுந்திருப்பது நீ அறியாயா?" என்றான் அங்கதன்.

"அப்படியல்ல, இவர்கள் கலைந்து ஓடுவதைப் பார். வேறு காரணம் இருக்கவேண்டும்" என்றான் சுக்ரீவன்.

பிறகு விபீஷணனைக் கண்டு யார் என்று அறிந்து கொள்ளாமல் இந்திரஜித்தின் மாயையால் ஹிம்சிக்கப்பட்ட வானரர்கள் இப்படிப் பயந்து ஓடுகிறார்கள் என்பதை அறிந்தான்.

ஜாம்புவான் மூலம் வானரர்களுக்கு விஷயம் தெரியப்படுத்தி அவர்களை ஓடாமல் தடுத்து நிறுத்தி, அமைதியை ஏற்படுத்தினான்.

விபீஷணன் ராமலக்ஷ்மணர்களைப் பார்த்தான். அவர்கள் காயப்பட்டு உடல் நிறைய அம்புகள் பாய்ந்து அசையாமல் கிடப்பதைப் பார்த்து அழ ஆரம்பித்தான்.

'காரியம் எல்லாம் கெட்டுவிட்டதே! இனி என்ன செய்வது!' என்று விபீஷணன் பிரலாபிப்பதைப் பார்த்து சுக்ரீவன் அவனுக்குத் தைரியம் சொன்னான். தன் மாமன் சுஷேணனைப் பார்த்து, "நீர் ராம லக்ஷ்மணர்களை எடுத்துக் கொண்டு கிஷ்கிந்தைக்குப் போவீர். நான் இந்த ராவணனைத் தொலைத்து விட்டு, சீதையை மீட்டுக் கொண்டு வருவேன்" என்றான்.

சுஷேணன், "இந்த ராஜகுமாரர்களின் காயங்களைச் சொஸ்தப்படுத்தும் மருந்துகள் உண்டு. அந்த மூலிகைகள் இருக்கும் இடம் நம்மில் சிலருக்குத் தெரியும். இதோ இருக்கிறாரே ஹனுமான். இவரை அனுப்பினால், அந்த மருந்துகளைக் கொண்டு வருவார்" என்றான்.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருந்த சமயம் காற்றும் கடலும் கலங்கிற்று. பார்க்கையில் மிகப் பெரிய பறவை - கருடன் - வருவதைக் கண்டார்கள்.

கருடன் வந்ததும் ராம லக்ஷ்மணர்கள் உடல்களில் பாய்ந்திருந்த பாணங்கள் அவ்வளவும் மாயமாய் ஓடி மறைந்தன. அவை யாவும் விஷநாகங்கள், இந்திரஜித்தின் மந்திர பலத்தால் அம்புகளாக வடிவம் கொண்டு அவன் மாயையால் ராம லக்ஷ்மணர்கள் உடலில் பாய்ந்திருந்தன. தங்களுடைய யமனாகிய கருடன் வந்ததும் ராம லக்ஷ்மணர்களின் தேகங்களை விட்டு ஓடி விட்டன.

பிறகு கருடன் ராமலக்ஷ்மணர்களைத் தடவிக் கொடுத்து அவர்களுக்குச் சகல சக்தியும் மறுபடி உண்டாக்கி விட்டான். காயங்கள் எல்லாம் உடனே போய் முன்னைவிட பலமும் தேஜஸும் பெற்று எழுந்தார்கள்.

“எங்களுக்கு இந்த உபகாரம் செய்த நீ யார்?” என்று ராமன் கேட்டதற்கு கருடன், “நான் உனக்குப் பரம சிநேகிதன், தோழன், உனக்கு மங்களம். நான் போய் வருகிறேன். யுத்தத்தில் வெற்றி பெறுவாய், பிறகு நான் யார், நீ யார் என்பதைப் பேசிக் கொள்ளலாம்” என்று ஹரிவாகனன் சொல்லிச் சென்று விட்டான்.

ராம லக்ஷ்மணர்கள் மறுபடி பூரண பலத்துடன் ஆரோக்கிய மடைந்து நின்றதும் வானரர்கள் மிக மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்து, ராவணனுடைய கோட்டையைத் தாக்கினார்கள்.

சங்கீத வித்வத் சபை கட்டட நிதி

தலைவர் வேண்டுகோள் :

சென்னை மியூஸிக் அகாடமி என்னும் ஸ்தாபனம், தென்னாட்டு சங்கீதம் நாட்டியம் முதலிய அருங்கலைகளைத் தொடர்ந்து பேணி வளர்ப்பதில் விசேஷத் தொண்டு புரிந்திருக்கிறது. இச் சங்கம் இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. அப்பொழுதிலிருந்தே இச் சங்கம் சங்கீதம், நாட்டியம் இரு கலைகளுக்கும் அரும் பணி புரிந்து வந்திருக்கிறது. சமீப காலம் வரை எத்தனையோ மகான்கள் தங்கள் அறிவினாலும், ஆற்றலினாலும், பக்தியினாலும் இவ்விரு கலைகளையும் மிக உன்னத நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்நிலையிலிருந்து சற்றும் இழுக்குறாத வகையில் மியூஸிக் அகாடமி தென்னாட்டு மக்களின் பொதுச் சொத்தாகிய இவ்விரு கலைகளையும் போற்றி வந்திருக்கிறது. இச் சங்கம் சங்கீத வித்வான்களின் பொருளாதார நிலையை உயர்த்த முயன்றிருக்கிறது. மக்களின் ரஸிகத் தன்மையைப் பண்படுத்தி யிருக்கிறது. ஆண்டுதோறும் விசேஷ சங்கீத வித்வத் சபை கூட்டியிருக்கிறது. சங்கீத ஆராய்ச்சிப் புஸ்தகங்கள் வெளியிட்டிருக்கிறது. சங்கீத ஆசிரியர்கள் கல்லூரியும் நடத்தி வருகிறது. சர்வகலாசாலைப் பாட திட்டத்தில் சங்கீதத்தையும் பாடமாகச் சேர்க்க வேண்டும் என்று முதன் முதலில் கூறி வற்புறுத்தியது. மியூஸிக் அகாடமி வருஷாந்திர சங்கீத மகாநாடுகள் நடத்துவது போலவே, இப்பொழுதெல்லாம் வேறு பல சங்கீத ஸ்தாபனங்களும் சங்கீத விழாக்கள் ஏற்படுத்தி நடத்தி வருகின்றன. இதுவே மியூஸிக் அகாடமியின் பணிக்குச் சிறந்த பாராட்டாகும்.

சென்னை சங்கீத வித்வத் சபை சங்கீத வித்வான்கள் விதூஷிகளின் உள்ளத்திலும் ஸ்திரமான இடம் பெற்று விட்டது. அங்கத்தினர்கள், நண்பர்கள், போஷகர்கள் யாவரும் மனமுவந்து உதவி நல்கி யிருக்கிறார்கள்.

ஆயினும் நீண்ட காலமாக அகாடமி சொந்தமான நல்லதொரு கட்டட மின்றி இருந்து வருகிறது. ஏதோ கொஞ்சம் சிரமத்துடன் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மனை வாங்கப் பட்டது. ஆனால் அந்த மனையில், நல்ல கட்டடம் எழுப்ப வேண்டும் என்ற ஆசை நிறைவேறாமலே இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது அந்த மனையில் ஒரு பெரிய மண்டபம் கட்டுவது என்று அகாடமி முடிவு செய்திருக்கிறது. சுமார் இரண்டாயிரம் பேர் வசதியாக உட்கார்ந்து கேட்கக் கூடிய ஹாலாகக் கட்டுவது என்று முடிவு செய்துள்ளது. இதுவரை சங்கீத வித்வத் சபை வருஷாந்திர விழாக்களைச் சென்னையிலுள்ள மற்ற ஹால்களிலேயே நடத்த வேண்டியிருந்தது. இந்த ஹால்களில் எத்தனை பேர் உட்கார்ந்து கேட்க வசதியளிக்குமோ என்பதை மனத்திற் கொண்டே தனது அங்கத்தினர்களின் எண்ணிக்கையையும் குறைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அதனாலேயே எத்தனையோ பேர் அகாடமியில் சேர வேண்டும் என்று விரும்பியும், அவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியாமல் போய்விட்டது. மேலும் சங்கீத வித்வானுக்கும் ரஸிகர்களுக்கு மிடையில் ‘மைக்’ கூடாது என்பது அகாடமியின் விருப்பம். அதற்குத் தக்கபடியே புது முறைப்படி மண்டபம் கட்ட எண்ணி யிருக்கிறது. சென்னை நகருக்கு இத்தகையதோர் ஹால் இல்லையே என்று நீண்ட நாளாக இருந்த குறை இந்தக் கட்டடம் கட்டி முடிந்தால் நீங்கிப் போகும். பொது மக்களின் தாராள நிதி உதவியின் மூலமே இது சாத்தியமாகும் என்பதைச் சொல்லத் தேவை இல்லை.

நமது மதிப்புக்குரிய பாரதப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு அக்டோபர் மாதம் 5-ந் தேதி இப் புதுக் கட்டடத்தின் அஸ்திவாரக் கல் நாட்ட இசைந்துள்ளார். அத்துடன் இக் கட்டட நிதிக்காக ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் அன்போடு வழங்கும் இன்னிசைக் கச்சேரிக்குத் தலைமை வகிக்கவும் இசைந்துள்ளார்.

நமது நண்பர்களுக்கும் கலா ரஸிகர்களுக்கும் அகாடமியின் சரித்திரத்திலேயே மிக முக்கியமான நிகழ்ச்சி இது என்று சொல்லவேண்டியதில்லை. இந்த 5-ந் தேதி வைபவத்தை வெற்றிகரமாக்குவதும் அகாடமியின் கட்டட நிதிக்குத் தாராளமாக உதவுவதும் பொது மக்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும் என்றே எண்ணுகிறேன்.

கே. வி. கிருஷ்ணசாமி அய்யர்,
தலைவர், மியூஸிக் அகாடமி, சென்னை.



நாடும் நேரமும்




கடிகாரங்களின் விலைகள் ஏன் அவ்வளவு வித்தியாசப்படுவானேன்?

தங்கக்கேஸ் உடைய கடிகாரமோ அல்லது வைரக்கல்பதித்த கடிகாரமோ அதிக விலையாயிருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால் சாதாரண கடிகாரங்களின் விலைகளில் ஏன் மகத்தான வித்தியாசங்கள்?

கைதேர்ந்த எந்த கடிகார வியாபாரியும் கடிகாரத்தினுள்ளிருக்கும் நுட்பமான உறுப்புகளுக்கும், வெளிப்பார்வைக்குத் தெரிகிற தரத்தைப் பொறுத்தும் விலை வித்தியாசப்படும் என்று கூறுவார். நம்பகமாக நீடித்து உழைக்கக்கூடிய எந்த கடிகாரமும் விலை அதிகமாயிருக்கவேண்டும் என்பதில்லை. ஆனால் அதில் மூன்று முக்கியமான அம்சங்கள் இருக்கவேண்டியிருப்பதால் விலை மிக மலிவாக இருக்கமுடியாது. இவைகளாவன:- (1) அபூர்வமான நல்ல வேலைப்பாடு (2) நீண்டகாலம் உழைக்கும் உலோக உறுப்புகள் (3) கேந்திர ஸ்தானங்களில் முக்கியமாக இப்படத்தில் காட்டியுள்ள இரண்டு பாகங்களில், அமைக்கப்பட்ட ஜுவல்கள்.

ஒவ்வொரு நல்ல ஸ்விஸ் ஜுவல்ட்-லீவர் கடிகாரமும் மேற் கூறிய முக்கிய அம்சங்களின் பரிசோதனையில் வெற்றி பெற்றவை. கைதேர்ந்த எந்த கடிகார வியாபாரியும் இவைகளை நன்கு விளக்கிச் சொல்லுவார். நீங்கள் தேர்ந்தெடுப்பதற்கு வேண்டிய பலவகைப்பட்ட ஸ்விஸ் ஜுவல்ட்-லீவர் கடிகாரங்களை உங்களுக்குக் காட்டுவார். சரியான கடிகாரத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு உங்களுக்கு அவர் உதவியாகவும் இருப்பார்.




நல்ல கடிகாரத்தின் ஜீவ ஸ்தானம்

இவ்விரண்டு 'லீவர்-சுத்தியல்'களும் நாளொன்றுக்கு 4,32,000 தடவைகள் எஸ்கேப் - வீலின் பற்களைத் தட்டுகின்றன. இவற்றின் நுனிகளில் ஜுவல் பொருந்தியிருந்தால்தான் இச் சுத்தியல்கள் வருடக் கணக்கில் தேய்மானத்தை எதிர்த்து நிற்கும். நிரந்தரமாக உழைக்க வேறு சில இடங்களிலும் ஜுவல்கள் தேவை. எனினும் இவ்விரண்டு ஜுவல்களும் அத்தியாவசியமானவை.

ஸ்விஸ் ஜுவெல்டு-லீவர் கடிகாரம் தான் நீங்கள் செலவு செய்யும் பணத்திற்குச் சரியான பெறுமானம்

ஸ்விட்ஸர்லாந்து கடிகாரத்தயாரிப்பாளர்கள்

FHI-19-TAM



வட இந்தியயாத்திரை 8

பண்டாக்கள் வெட்டிய கங்கைக் கால்வாயில் ஆண்டு முழுவதும் தண்ணீர் போவதற்காக ஹரித்துவாரத்தில் கங்கை நதிக்குக் குறுக்கே ஒரு அணை கட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கலாம். அந்த அணை கட்டியிருக்கும் இடத்துக்குப் பெயர் மாயாபூர். இந்த மாயாபூர் அணைக் கட்டைக் கட்ட ஆரம்பிக்கும்போதுதான் ஹரித்துவாரத்துப் பண்டாக்கள் இரவு நேரங்களில் திடீர் திடீர் என்று விழித்துக் கொண்டு "ஐயோ! மாயாபூர் அணை!" "ஐயோ! மாயாபூர் அணை!" என்று உளறினார்கள். இந்த அணைக் கட்டினால் கங்கை நதியின் புனிதமே கெட்டுவிடும் என்று பயந்தார்கள். இந்தப் பயத்துக்குச் சிறிதும் காரணமில்லை என்பதைப் பிறகு தெரிந்து கொண்டு விட்டார்கள்.

இந்த அணையைப் போல் உலகிலேயே இரண்டொன்றுதான் இருக்கின்றனவாம். அணைக் கட்டு ஆரம்பமாகும் இடத்தில் ஒரு அழகான தோட்டம் அமைத்திருக்கிறார்கள். ஏராளமான மரங்கள் அடர்த்தியாக வளர்ந்து குளிர்ந்த நிழலைத் தருகின்றன. மரங்களுக்கு இடையில் உட்காருவதற்காக ஆங்காங்கே கல் பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. அந்த அழகிய தோட்டத்தைத் தாண்டிச் சென்றால் அணைக்கட்டின் மீது ஏறிப் பார்ப்பதற்குப் பெரிய இரும்பு ஏணி வைத்திருக்கிறார்கள். அதில் ஏறி அணையில் போய் நின்றதும் எல்லாரும் தங்கள் தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். காரணம் காற்று தலையைப் பிய்த்துக் கொண்டு போய்விடும் போல் பலமாக அடித்துக் கொண்டிருந்தது!

1897-ல் கட்டிய மாயாபூர் அணை பல சமயங்களில் கங்கையில் அதிக வெள்ளம் வரும்போது உடைந்து கொண்டிருந்தது. அப்படி உடையாமல் உறுதியாகக் கட்ட, திட்டம் இட்டார்கள். இந்தப் புதிய அணையை 1913-ல் கட்ட ஆரம்பித்து 1920-ல் முடித்தார்கள். சுமார் முப்பத்தொன்பது லட்ச ரூபாய் செலவில் கட்டியிருக்கும் இந்த அணையைப் பார்த்ததும் இன்ஜினீயரிங் கலைஞானம் இல்லாத சாதாரண மனிதர்கள் கூட "இது இன்ஜினீயர்களுக்குப் பெரிய வெற்றிதான்" என்று சொல்லுவார்கள். எங்களுடன் வந்திருந்த சில பத்திரிகை நிருபர்களுக்கு இந்திய இன்ஜினீயர்கள் மீது அவ்வளவு நம்பிக்கை ஏற்படவில்லை போலிருக்கிறது! அணைக்கட்டு பலமாக இருக்கிறதா என்று காலு மிதி மிதித்துக் கூடப் பார்த்தார்கள். அணை என்னமோ கொஞ்சம் கூட அசைந்து கொடுக்கவில்லை!

மாயாபூர் அணை விசித்திரமானது. இதர அணைகளைப் போன்றது அல்ல. கங்கை நதியில் முதலில் கொஞ்ச தூரம் உறுதியான அணை கட்டியிருக்கிறார்கள். அதில் தண்ணீரைத் திறந்து மூடுவதற்கு வசதியாகக் கதவுகள் பொருத்தப் பட்டிருக்கின்றன. அதற்கு அப்பால் கொஞ்ச தூரம் மரக் கதவுகள் கொண்ட அணை கட்டப்பட்டிருக்கிறது. அதற்கும் அப்பால் சிமெண்டினால் கட்டியிருக்கும் அணை நிறைந்து தண்ணீர் வழிந்து ஓடிக் கொண்டிருக்கிறது. அதற்கும் அப்பால் அணையே கிடையாது. கங்கை நதி இயற்கையாக எவ்விதத் தடங்கலும் இல்லாமல் காடுகளுக்குள்ளெல்லாம் புகுந்து சுதந்திரமாகப் போகிறாள்.



மாயாபூர் அணை



இந்த அணைக்கட்டின் மத்தியில் இருந்து ஆற்றைப் பார்த்தால் கங்காதேவி கொலு வீற்றிருப்பது போலிருக்கிறது. இருபுறத்திலும் உள்ள மலைகளுக்கு இடையிலிருந்து ஜலம் பொங்கி வழிந்து ஓடி வரும் அற்புதத்தைப் பார்த்தவுடன் அதை வெறும் ஆறு என்றே நினைக்க முடியவில்லை. இவள் தெய்வம்தான்! இந்தத் தேவிதான் கங்கை என்று தலையைத் தாழ்த்திக் கைகூப்பி வணங்க வேண்டியதைத் தவிர வேறு ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை. அவ்வளவு கம்பீரமாகக் காட்சி அளிக்கிறாள் தெய்வ கங்கை.

கங்கை நதியின் அழகையும், அதைச் சுற்றியுள்ள இயற்கைக் காட்சிகளையும் அனுபவிப்பதற்கு அறிவு முதிர்ச்சியும், அனுபவ ஞானமும், ரஸிகத்தன்மையும் ஒன்றும் தேவையில்லை. சின்னக் குழந்தையை அங்கு கொண்டு போய் நிறுத்தினால்கூட அது தன்னை மறந்து கங்கை நதியைப் பார்த்துக்கொண்டே இருந்துவிடும். பிறகு "கங்கைக் கரைக்குப் போகலாம்!" "கங்கா தேவியைத் தரிசிக்கலாம்!" என்று ஓயாமல் சொல்லும்.

கங்கை நதியும், அதன் காம்பீர்யமும், அழகும் இருக்கட்டும். மூவாயிரம் மைல் அமைப்புள்ள கங்கைக் கால்வாய் வெட்டுவதற்கு மூன்று கோடி ரூபாய் செலவானது என்று சொன்னேன் அல்லவா! அதில் முக்கால் கோடி ரூபாய் அதாவது எழுபத்தைந்து லட்ச ரூபாய் ரூர்க்கி வரையில் உள்ள இருபது மைல் தூரத்திலேயே செலவழித்திருக்கிறார்கள்.


இப்பொழுது சுதந்திர சர்க்கார் கங்கைக் கால்வாயில் இன்னும் ஆயிரம் மைல் நீளத்துக்குப் பல புதிய கிளை நதிகளையும் வெட்டி அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். இதனால் முன்னை விட இருபத்தாறு லட்சம் ஏக்ரா பூமி அதிக சாகுபடிக்குத் திருந்தி யிருக்கிறது.

கங்கைக் கால்வாயில் இப்பொழுதெல்லாம் வினாடிக்கு 10,500 கன அடி தண்ணீருக்குக் குறைவில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது.

இவைகளைத் தவிர கங்கைக் கால்வாய் ஆற்று அருவி மின்சார நிலையங்களிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தின் மூலம் மூவாயிரம் குழாய்க் கிணறுகள் வேலை செய்கின்றன. குழாய்க் கிணறு என்றதும் ஏதோ நம் வீட்டுக் கொல்லையில் இருக்கும் குழாய்க் கிணறுகளைக் கற்பனை செய்து பார்த்து விடாதீர்கள். ஒரு குழாய்க் கிணறு வைப்பதற்கு முப்பதாயிரம் முதல் நாற்பதாயிரம் ரூபாய் வரை ஆகிறது. நானூறு முதல் அறுநூறு ஏக்கர் வரை விவசாயம் செய்வதற்கு வேண்டிய தண்ணீரை ஒரு குழாய்க் கிணறு கொடுத்து உதவுகிறது. இத்துடன் உத்தரப் பிரதேசங்களில் உள்ள பல நகரங்களுக்கும் மின்சாரம் கிடைக்கிறது.

அருவி மின்சார அதிசயங்கள்

வட இந்திய யாத்திரையில் முதன் முதலில் நாங்கள் சென்றிருந்தது சாரதாக் கால்வாயில் உள்ள காதிமா அருவி மின்சார நிலையத்துக்குத்தான். அந்த அதிசய அருவி மின்சார நிலையத்தில் ஒரு நாள் தங்கியிருந்தோம். அருவிகளைப்



பல அதிசயங்கள் நிறைந்த வட இந்திய யாத்திரையில் கலந்து கொண்ட பத்திரிகை நிருபர்கள். கன்யாகுமரியிலிருந்து காஷ்மீரம் வரையில் உள்ள பதினைந்து பத்திரிகைகளைச் சேர்ந்த நிருபர்களையும் சர்க்கார் அதிகாரிகளையும் காணலாம்.

பிடித்து மின்சார உற்பத்தி செய்திருந்த அதிசயத்தைக் கண்டோம். அந்த அருவி மின்சார நிலையத்தைப் பார்த்ததிலிருந்தே எனக்கு அந்த மின்சார நிலையத்திடம் அபாரமான ஈடுபாடு உண்டாகி விட்டது. இன்னும் இது போல எங்கேயாவது உண்டா என்று விசாரிக்கத் தொடங்கினேன். கங்கைக் கால்வாயில் அதுபோன்ற அருவி மின்சார நிலையங்கள் ஏராளமாக இருப்பதாகவும் அதில் ஒரு மின்சார நிலையத்தைப் பார்க்கப் போவதாகவும் எங்களுடன் வந்திருந்த அதிகாரி தெரிவித்தார்.

அது இது எல்லாமாகச் சேர்ந்து, கங்கைக் கால்வாயில் அருவி மின்சார நிலையத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் மனத்தில் அளவில்லாமல் பொங்கிக் கொண்டிருந்தது.

கங்கைக் கால்வாயில் முதல் நூற்று எண்பத்து நாலு மைல்களுக்குள் பதின்மூன்று அருவிகள் இருக்கின்றன. இந்த அருவிகளைப் பிடித்து மின்சார உற்பத்தி செய்வதற்காக ஒன்பது அருவி மின்சார நிலையங்களை அமைத்திருக்கின்றார்கள். ஹரித்வாரத்திலிருந்து எட்டாவது மைலில் பகத்ராபாத் என்னும் இடத்தில் இருக்கும் அருவியை உபயோகப்படுத்தி முதன் முதலில் கங்கைக் கால்வாயில் அருவி மின்சார நிலையம் அமைத்தார்கள். இந்த மின்சார நிலையத்தை எதற்காக அமைத்தார்கள்! மின்சாரம் உற்பத்தி செய்து மக்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற பொதுநல நோக்கத்துடன் ஆரம்பிக்கவில்லை.



மாயாபூரில் 1913-ம் ஆண்டு கங்கைக் கால்வாயில் ஒரு அணை கட்டினார்கள் அல்லவா! அந்த அணை கட்டுவதற்கு மின்சாரம் வேண்டியிருந்தது. அதற்காக வேண்டித்தான் பகத்ராபாத்தில் இந்த அருவி மின்சார நிலையம் அமைத்தார்கள். இந்த நிலையத்திலிருந்து 450 கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகி வந்தது. ஹரித்வாரம் அணை 1920-ல் கட்டி முடிந்ததும் இந்த அருவி மின்சார நிலையத்தையும் மூடிவிட்டார்கள். மீண்டும் 1925-ம் ஆண்டு மாயாபூர் அணையைப் புதுப்பிக்க வேண்டி வந்தது. அதற்காக பகத்ராபாத் அருவி மின்சார நிலையத்தை மறுபடியும் ஆரம்பித்தார்கள். இப்பொழுது அணை கட்டுவதற்கு மட்டும் மின்சார நிலையத்தை உபயோகிக்காமல் நிலையாகவே அந்த அருவி மின்சார நிலையத்தை வைத்துக் கொள்வது என்று தீர்மானித்தார்கள். ரூர்க்கி நகரத்துக்கும், ஹரித்துவாரப் பட்டணத்துக்கும் அந்த நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்க ஆரம்பித்தார்கள்.

இந்த அருவி மின்சார நிலையத்துக்கு அருகில் இப்பொழுது வேறு நிலையம் ஒன்று அமைத்திருக்கிறார்கள். அதாவது பகத்ராபாத் அருவி மின்சார நிலையத்துக்கு அப்பால் பத்ரி வரையில் நாலு அருவிகள் கங்கைக் கால்வாயில் இருந்தன. ஒவ்வொரு அருவியும் ஒன்பதடி உயரம் உள்ளது. இந்த நாலு அருவிகளையும் பத்ரி என்ற இடத்தில் ஒன்று சேர்த்து முப்பத்தாறு அடி உயரத்திலிருந்து ஒரு அருவி விழும்படி செய்திருக்கிறார்கள். அந்த அருவியைப் பிடித்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக நவீன முறையில் ஒரு அருவி மின்சார நிலையத்தை அமைத்திருக்கிறார்கள்.

பகத்ராபாத் கங்கைக் கால்வாயிலிருந்து ஒன்பது பர்லாங்கு நீளத்துக்கு அர்த்த சந்திர வடிவமாக ஒரு புதுக் கால்வாய் வெட்டி பத்ரி என்ற இடத்தில் இந்தப் புதிய அருவி மின்சார நிலையம் அமைத்திருக்கிறார்கள். இருநூறு அடி அகலமும், பதினேழடி ஆழமும் கொண்ட இந்தக் கால்வாய் வெட்டுவதற்கு சுமார் மூன்று கோடி கன அடி குழி வெட்டியிருப்பதாக இன்ஜினீயர் கணக்குச் சொன்னார். கம்பீரமாக நிற்கும் அந்த அருவி மின்சார நிலையம் ஒரு அற்புத சாதனை. நமது இன்ஜினீயர்கள் உண்மையிலேயே பெருமைப்பட வேண்டிய சாதனை. சாரதாக் கால்வாயில் உள்ள காதிமா மின்சார நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் பாதிதான் இந்த நிலையத்தில் உற்பத்தியாகிறது. அதாவது 20,400 கிலோ வாட் மின்சாரம் தான் உற்பத்தியாகிறது. ஆனாலும் கங்கைக் கால்வாயில் உள்ள ஒன்பது மின்சார நிலையங்களையும் ஒன்றுடன் ஒன்று இணைத்திருக்கிறார்கள். அத்துடன் காதிமா மின்சார நிலையத்தையும் சேர்த்திருக்கிறார்கள். இந்த அற்புத இணைப்பு முறையினால் ஒவ்வொரு அருவி மின்சார நிலையமும் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறது.

பத்ரி அருவி மின்சார நிலையத்துக்கு முன்னால் வந்து நின்று அந்தக் கட்டடத்தையும் அது



தக்ஷிண ரயில்வே & இண்டக்ரல் கோச் பாக்டரி


வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ரயில்வே இயந்திர சாதனங்களின்

காட்சிக் கூடம்

பெரம்பூர் காரேஜ் ஒர்க்ஸ் ரயில்வே ஸ்டேஷன் சமீபத்தில்




எல்லா வேலை நாட்களிலும் காலை 10 முதல் 1 மணி வரையிலும் மாலை 2 முதல் 5 மணி வரையிலும் சனிக்கிழமைகளில் 10 முதல் 1 மணி வரையிலும் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப் படும். ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்ற விடுமுறை நாட்களிலும் காட்சிக் கூடம் மூடப்படும்





பல பிரபல தொழில் பிரமுகர்கள் காட்சிக் கூடத்தைப் பார்வையிட்ட பின் அவர்கள் தெரிவித்த அபிப்பிராயங்களில் சிலவற்றைக் கீழே தருகிறோம்.

★ "சிறு தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் எவ்விதம் ரயில்வேக்களுக்கு உதவலாம் என்பதை இக்காட்சி தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது."

★ "இந்திய வியாபாரிகள் இதைப் பார்த்துஎப்படி இந்தியத் தொழில்களை அபிவிருத்தி செய்யலாம் என்று தெரிந்து கொண்டு அவைகளைக் கடைப்பிடிக்கட்டும்."

★ "நமது தொழில் முன்னேற்றத்துக்காக ஏற்படுத்தப்பட்ட இக்காட்சியைப் பார்த்து பரம திருப்தி அடைந்தேன்."

"நன்கு அமைக்கப்பட்ட பொருட்காட்சி."




★ "இக்காட்சிசாலையில் வைக்கப்பட்டுள்ள சில ரக அபூர்வமான சாமான்களை சிறு மூலதனத்துடன் நடத்தப்படும் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யக்கூடும்."

★ "தொழிற்துறையிலுள்ள எல்லா பகுதியையும் ஒருங்கே காணுமாறு நன்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது."

★ "எங்களுக்கும் மற்றும் வருங்கால உற்பத்தியில் ஈடுபடக் கூடியவர்களுக்கும் எத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும் என்பதை உங்கள் காட்சிசாலை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. வந்தனம்."

நீங்கள் இன்னும் இந்தக் காட்சிக் கூடத்தைப் பார்க்காவிடில் விரைவில் விஜயம் செய்து காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள 1,236 பொருள்களை பார்வையிடக் கேட்டுக்கொள்வதோடு, அவைகளில் எந்தப் பொருள்களை நீங்கள் உற்பத்தி செய்து ரெயில்வேக்களுக்கு சப்ளை செய்ய முடியும் என்பதையும் நிர்மாணிக்கக் கோருகிறோம். காட்சிப் பொருள்களின் காட்லாக் காட்சிக்கூடத்தில் 0—12—0 விலைக்குக் கிடைக்கும்.

மேலும் விவரம் தெரிந்து கொள்ள விரும்பினும் காட்சிக் கூடத்தின் நிர்வாகிக்கு எழுதிக் கேளுங்கள். போன்: 61653

கண்ட்ரோலர் ஆப் ஸ்டோர்ஸ்,
தக்ஷிண ரயில்வே, சென்னை - 23

அமைந்திருக்கும் இடத்தையும் பார்த்துப் பிரமித்துப்போனோம். கூடவே அதைப் பற்றிய விவரங்களை எல்லாம் அங்குள்ள இன்ஜினீயர் விளக்கிக் கூறியபோது எங்களால் வியப்படையாமல் இருக்க முடியவில்லை.

அங்கு மின்சார நிலையத்தை நிலையாக அமைப்பதற்கு இன்ஜினீயர்கள் அரும்பாடு பட்டு உழைத்திருக்கிறார்கள். எத்தனையோ விதமான அஸ்திவாரத் திட்டங்கள் எல்லாம் போட்டிருக்கிறார்கள். கடைசியில் அங்கு பூமிக்கு அடியில் ஒரு செயற்கை மலையே உண்டாக்கிவிடுவது என்று முடிவு செய்து விட்டார்கள். பூமிக்கு அடியில் அறுபத்தி இரண்டடி ஆழம் தோண்டி அதில் சிமெண்டைக் கொட்டி நிரப்பி யிருக்கிறார்கள். தண்ணீர் மட்டத்திலிருந்து முப்பதடி உயரம் வரையில் சிமெண்டினால் உறுதியான தளம் அமைத்து அதன்மீது பத்ரி அருவி மின்சார நிலையக் கட்டடத்தைக் கட்டி யிருக்கிறார்கள். இந்த நிலையத்துக்குள் புகும் கால்வாயில் இன்னொரு அதிசய அணையும் அமைத்திருக்கிறார்கள். மின்சார இயந்திரம் வேலை செய்வதற்கு வேண்டிய அளவுக்கு மேல் தண்ணீர் வந்தால் தடுத்து நிறுத்தி வேறு வழியே அனுப்பி விடுவதற்கு வசதி செய்திருக்கிறார்கள். மனித உதவியில்லாமலே தானே இயங்கும் தன்மையுடன் கூடிய பல கதவுகள் அந்த அணையில் இருக்கின்றன.

பத்ரி மின்சார நிலையத்தில் மூன்று டர்பைன்கள் வேலை செய்கின்றன. அதாவது மூன்று மின்சார இயந்திரங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. ஒவ்வொரு டர்பைனும் 6,800 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் சக்தியுடையவை. மின்சார இயந்திரங்கள் எல்லாம் ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்டவை.

மின்சார இயந்திரங்களைப் பொருத்தி வேலை செய்வதற்கு வேண்டிய காரியங்களை மட்டும் ஜெர்மன் இன்ஜினீயர்கள் செய்தார்கள். ஆனால் அவர்களும் இந்திய இன்ஜினீயர்கள் ஆலோசனைக்கு இணங்கத்தான் வேலை செய்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நூறடி உயரமுள்ள அந்த மின்சார நிலையத்தை யெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு வெளியில் வந்ததும் எங்களுடன் வந்த இன்ஜினீயர் சில ரஸமான விவரங்களைக் கூறினார்.

பத்ரி மின்சார நிலையம் கட்டுவதற்கு, பதின்மூன்றாயிரம் டன் சிமெண்டும், ஆறாயிரம் டன் இரும்பும் செலவாயினவாம். அந்த மின்சார நிலையத்துக்குச் செலவான சிமெண்டைக் கொண்டு எட்டு அங்குலம் சுற்றளவுள்ள குழாய் செய்தால் அதன் நீளம் காஷ்மீரத்திலிருந்து கன்யா குமரிவரையில் இருக்கும் என்பதைக் கூறிவிட்டு எங்களைப் பார்த்தார்.

"இவ்வளவுதானா! உலகத்தையே சுற்றி வந்து விடலாம் என்றல்லவா நினைத்தேன்" என்றார் ஒரு பத்திரிகை நிருபர்.

"உலகத்தையே சுற்றிக் கட்டிவிடும் அளவுக்கு இரும்பு செலவாகி யிருக்கிறது."

"அதெப்படி!"

"இந்த நிலையத்துக்குச் செலவான இரும்பைக் கொண்டு 3/16 கனத்துக்கு இரும்புக் கம்பி செய்தால் அதைக் கொண்டு உலகத்தையே கட்டி விடலாம்" என்று சொல்லி விட்டு "இருபத்தேழு லட்சம் யூனிட் மின்சார சக்தியும், இந்த மின்சார நிலையத்தைக் கட்டி முடிப்பதற்குச் செலவாகி யிருக்கிறது" என்றார்.

"எவ்வளவு ரூபாய் செலவாகி யிருக்கும்!" என்று கேட்டார் பொருளாதாரப் பிரச்னையில் ஆவல் உள்ள ஒரு நிருபர்.

"இரண்டே முக்கால் கோடி ரூபாய்தான் செலவாகி யிருக்கிறது. இதை அதிகம் என்று சொல்ல முடியாது" என்றார் இன்ஜினீயர்.

இந்த பத்ரி மின்சார நிலையத்தைப் பற்றிச் சொல்வதற்கு இன்னும் இரண்டு விஷயங்கள் பாக்கி யிருக்கின்றன. அதில் இருந்து உற்பத்தியாகும் மின்சாரம் மிகவும் மலிவானது. ஒரு யூனிட் மின்சாரத்தின் கிரயம் இரண்டே முக்கால் பைசாதான். சென்னை நகரில் ஒரு யூனிட் மின்சாரம் என்ன விலை தெரியுமா! நாலு அணா. இதைத் தவிர இருபத்தைந்து சத விகிதம் 'சர்சார்ஜ்' வரி வேறு விதிக்கிறார்கள்.

இன்னொரு விஷயம் என்னவென்றால் இந்த நிலையம் கட்டுவதற்கு பூமியை வெட்டும் பொழுது அதிசயமான புதையல் ஒன்று கிடைத்ததாம். சுமார் மூவாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு உள்ள செப்புப் பாத்திரங்களும், மண்பாண்டங்களும் கிடைத்தனவாம். இவற்றை யெல்லாம் உத்தரப் பிரதேசப் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

பத்ரி மின்சார நிலையத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டிருந்தபோது அந்தப் பக்கத்தில் ஒரு ஆசாமி வந்தார். ஒரு பெரிய ஆட்டை முதுகில் சுமந்துகொண்டு வந்தார். ஏன் இப்படி ஆட்டைச் சுமந்து கொண்டு வருகிறார் என்று நாங்கள் வியந்து கொண்டிருக்கும் போதே அவர் அருகில் வந்து விட்டார். அவர் முதுகில் இருந்த ஆடு உயிர் உள்ள ஆடு இல்லை. ஆட்டுத் தோலில் தண்ணீர் நிரப்பிக் கொண்டு போனார் என்பதைத் தெரிந்து கொண்டோம்.

கங்கைக் கால்வாய் நிறையத் தண்ணீர் ஓடினாலும் கட்டடம் கட்டுவதற்குத் தண்ணீரைப் பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு போய்த் தானே கொட்ட வேண்டும்! அப்படித் தண்ணீரைக் குடத்தில் கொண்டு போவதற்குப் பதிலாக ஆட்டுத் தோலில் தண்ணீரைப் பிடித்து முதுகில் கட்டிக் கொண்டு போகிறார்கள் என்ற விவரத்தைப் புரிந்து கொண்டோம்.

கங்கைக் கால்வாயின் சிறப்பையும், அந்தக் கால்வாயில் உள்ள அருவி மின்சார அதிசயங்களையும் கேட்கக் கேட்க, ஏன்! ஏதோ கனவு உலக நிகழ்ச்சி போல்தான் இருந்தது.

கங்கைக் கால்வாயில் உள்ள வசதிகளை உபயோகப்படுத்திக் கொள்வதற்கு அங்குள்ள தலைவர்களும், அரசியல் அதிகாரிகளும் ஓயாமல் பாடுபட்டு வருகிறார்கள். அவர்கள் உழைப்பையும், உற்சாகத்தையும் பார்க்கும் போது நம்முடைய தமிழ் நாட்டைப் பற்றி நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

அணைகள் கட்டுவதிலும், அருவி மின்சார நிலையங்கள் அமைப்பதிலும் தமிழ்நாடு எவ்வளவோ முன்னேற்றம் அடைந்துதான் இருக்

கிறது. ஆனாலும் சுதந்திரம் பெற்ற பிறகு சர்க்கார் அதிகாரிகளும், பொதுஜனத் தலைவர்களும் வட நாட்டில் ஒவ்வொரு பகுதிகளுக்கும் தாங்களே சென்று நாட்டு முன்னேற்றத்துக்காகச் செய்துள்ள திட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ் நாட்டில் ஒன்றுமே செய்யவில்லை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது எனக்கு.

தமிழ் நாட்டில் கங்கை நதியைப்போல் ஜீவ நதி இல்லாமல் இருக்கலாம். ஆனால் எத்தனையோ பெரிய ஏரிகளும், சிறு சிறு நதிகளும் இருக்கத்தான் செய்கின்றன. சோழ அரசர்கள் காலத்திலேயே அதிசயமான அணைகளும், அற்புதமான ஏரிகளும் வெட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மகா மன்னர்கள் வாழ்ந்த நாடுதான் தமிழ் நாடு. இப்போது அவர்கள் வெட்டிய ஏரிகள் பல கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அவைகளை எல்லாம் வெட்டி ஆழப்படுத்தித் தண்ணீரைத் தேக்கி விவசாயத்துக்கு உதவும்படியாகச் செய்யலாமே!

இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டே கங்கைக் கால்வாய்க் கரையோரமாக வந்ததும் "அதோ! தெரிகிறதே பார்த்தீர்களா!" என்று கேட்டார் இன்ஜினீயர். கங்கைக் கால்வாயிலிருந்து ஒரு கிளை வாய்க்கால் பிரிந்து சென்று அங்குள்ள பல சிறு சிறு "மாதிரி" ஆறுகளில் புகுந்து ஓடிக் கொண்டிருந்தது.

பகத்ராபாத்தில் மின்சார நிலையத்தைத் தவிர 'நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையம்' ஒன்றும் இருக்கிறது என்று தெரிந்து கொண்டோம்.

** ** **

கங்கைக் கால்வாயைப் பற்றி எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டாகி விட்டது என்று நான் எண்ணிய சமயத்தில் "மிகவும் முக்கியமான இன்னொரு விஷயத்தைப் பற்றி இன்னும் சொல்லவில்லை" என்றார் இன்ஜினீயர். கங்கைக் கால்வாயில் பார்த்த இன்ஜினீயரிங் விந்தைகளை எல்லாம் நினைவூட்டினார்.

"அவைகளை எல்லாம் ஒரு தரம் இப்பொழுது நினைத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

"நினைத்துக் கொண்டோம்" என்றேன்.

"அந்த அதிசயமான பாலங்கள் எல்லாம் பழுதாகி விடாமல் இருக்க வேண்டுமல்லவா! அதற்காக வருஷத்தில் இரண்டு வாரம் கங்கைக் கால்வாயில் தண்ணீரை விடாமல் நிறுத்திவிட்டுக் கால்வாய் முழுவதையும் சுத்தம் செய்வோம். 'சூப்பர் பாஸேஜ்' 'அக்வாடட்' 'லெவல் கிராஸிங்' முதலிய பாலங்களை எல்லாம் ஒருதரம் பழுது பார்ப்போம். அதில் உள்ள சேறுகளை எடுத்துத் துப்புரவு செய்வோம்" என்றார் இன்ஜினீயர்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் கங்கைக் கால்வாயில் தண்ணீர் இல்லாமல் இருக்கும் காட்சியை ஒரு கணம் மனத்தில் கற்பனை செய்து பார்த்தேன்.

"நீங்கள் கற்பனை செய்து பார்ப்பது தெரிகிறது. கங்கைக் கால்வாயில் தண்ணீர் இல்லாத அந்தச் சமயத்தில் சுமார் நாலாயிரம் மைல் கங்கைக் கால்வாய் அமைப்புள்ள பிரதேசம் களை யிழந்து 'செத்த நகரம்' போலக் காட்சியளிக்கும்" என்றார் இன்ஜினீயர்.

இந்தச் செய்தியைத் தெரிந்து கொண்டதும் மூச்சுத் திணறித் தலையைச் சுற்றுவது போல் இருந்தது. அப்பொழுது ஒரு பத்திரிகை நிருபர் இன்னொரு கேள்வியைக் கேட்டு வைத்தார்.

"கங்கைக் கால்வாயில் தண்ணீர் இல்லாத சமயத்தில் அருவி மின்சார நிலையம் ஓடுமா! மின்சாரம் உற்பத்தியாகுமா!" என்றார்.

"அந்த இரண்டு வாரத்துக்கும் நீராவி இயந்திரத்தின் மூலம் மின்சார இயந்திரங்கள் ஓடுவதற்கு வேண்டிய வசதி செய்திருக்கிறது" என்றார் இன்ஜினீயர்.

அடாடா! எவ்வளவு முன் யோசனையுடன் எல்லாவற்றையும் செய்திருக்கிறார்கள் என்று ஒரு கணம் பத்திரிகை நிருபர்கள் எல்லாம் திகைத்து விட்டார்கள். பத்திரிகை நிருபர்கள் ஆயிற்றே! அந்தத் திகைப்பை வெளிப்படையாகக் காண்பித்துக் கொள்வார்களா! ஏதோ மீண்டும் ஒரு முறை கங்கையைக் காணப் புறப்படுவதுபோல் புறப்பட்டார்கள்.

** ** **


கங்கா தேவிக்கு ஒரு வணக்கம் செய்துவிட்டு கங்கைக் கால்வாய்க் கரையோரமாக உள்ள ஒரு கிராமத்துக்குப் போவோம். கங்கை நதி தீரத்தில் அமைந்திருந்தாலும் கிராமம் என்னவோ நம்முடைய ஊர் பக்கங்களில் உள்ள கிராமங்களைப் போல்தான் இருக்கிறது. இடிந்த குட்டிச் சுவர்களும் ஒடிந்து விழும் மண் கூரை வீடுகளும் நம் கண் முன்னே காணப்படுகின்றன. நாளுக்கு நாள் பின் செல்லும் தமிழ் நாட்டுக் கிராமங்களுக்கு எவ்விதத்திலும் சளைத்ததாகத் தோன்றவில்லை.

ஆனால் ஒரு சின்ன வித்தியாசம். அங்குள்ள மக்கள் உடல் உழைத்து உற்சாகமாக வேலை செய்கிறவர்களாக இருக்கிறார்கள். "ஏற்பது இகழ்ச்சி" என்ற முதுரையைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறார்கள்.

கங்கை நதி தன்னுடைய கால்வாய் மூலமாகச் செய்து வரும் தொண்டு அபாரமானது. கங்கா தேவியுடன் போட்டி போட்டுக் கொண்டு லக்ஷ்மிதேவியும் பரிபூரணமாய்க் கருணை புரிகிறாள். இந்தியாவில் வேறெந்த பாகத்திலும் விட இங்கே அதிகமாய்ச் செல்வ உற்பத்தி நடந்துவர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கங்கைக் கால்வாயில் இருக்கும் அருவிகளின் வேகத்தைப் பிடித்து மின்சார சக்தி உண்டாக்குகிறார்கள். பலவிதமான தொழிற்சாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படியாகப் பல வகையிலும் நாட்டின் செல்வம் பெருகி வந்தும், சாதாரண ஜனங்கள் மட்டும் எல்லா இடங்களையும் போல வறுமையில் அடிபட்டு வாடுகிறார்கள். அதன் காரணம் என்னவோ!

தேசத்திலிருந்து தரித்திரத்தை ஓட்டுவதற்கு அளவில்லாத செல்வம் உற்பத்தியானால் மட்டும் போதுமா! உற்பத்தியாகும் செல்வத்தை எல்லா மக்களும் சமமாக அனுபவிக்க வேண்டாமா! நமது இந்திய சர்க்கார் சோஷலிஸ அடிப்படையில் வகுத்திருக்கும் புதிய திட்டம் இதற்கு வசதி செய்யும் என்று அவர்களைப் போலவே நாமும் நம்புவோம்!

இன்று இல்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் அந்த நிலை வரத்தான் போகிறது. அதற்கு உதவியாகத் திட்டமிட்டு நடந்து வரும் நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்தைப் பார்த்து வருவோம், வாருங்கள். (தொடரும்)


குங்குமப்பூ
புகையிலையை
உபயோகியுங்கள்
ஸ்ரீ ரெங்க விலாஸ்
விஜயபுரம், திருவாரூர்.



உங்கள் சரக்குகளை

சிங்கப்பூர், ஜாகர்தா, மணில்லா, ஸிட்னி

முதலிய ஊர்களுக்கு விமானத்தில் அனுப்புங்கள்

நேரம் மிச்சமாகிறது
பணம் மிச்சமாகிறது



உங்கள் சரக்குகளை பல மார்க்கெட்டுகளுக்கு கொண்டுபோக அவைகளை விமானத்தின் மூலம் அனுப்புவதே வேகமானதும், மலிவானதும், சுலபமான முறை.

- நீங்கள் பணம் மீதமாக்குகிறீர்கள்
- நீங்கள் நேரத்தை மீதப் படுத்துகிறீர்கள்
- நீங்கள் வியாபாரத்தை பெருக்குகிறீர்கள்
- நீங்கள் எல்லா மார்க்கெட்டுகளிலும் ஒரே சமயத்தில் சேவை செய்ய முடிகின்றது.

ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல்

கஸீனி மான்ஷன், 33 மவுண்ட் ரோடு, மதறாஸ், டெலிபோன்: 86194



அவன் தந்த பரிசு

சுகி

நுரை குலுங்கக் குலுங்க முழங்கை வரை சோப்பு வழித்து முகத்தைச் சுத்தம் செய்தாள்; பட்டு ரோஜாப் போல முகம் பளிச்சிட்டது. சின்னக் குங்குமப் பொட்டு, கனகாம்பரக் கலரில் இட்டாள்! அவள் அழகு படுத்துவதை ரசித்துக் கொண்டிருந்த 'இரும்பு யந்திரம்' இதைக் கண் குளிரக் கண்டான்.

"எங்கே புறப்படறே கன்னி!"

"ஆரஞ்சுப் பழம் வாங்க வேணுமா!"

"வாங்கிக்கிட்டு சுருக்கா வந்திடு."

"உம்."

கன்னியம்மாள், கலியாணமானவள். தெரு என்ற குப்பைக் கூளத்தை மிதித்துக் கொண்டு தார் ரோட்டுக்கு வந்தாள். பிளாட்பாரத்தில் நடக்க ஆரம்பித்தால் அவள் நடையிலே மான் துள்ளல் நினைவு தரும். சகஜமாக யாரும் திரும்பிப் பார்க்கும் நடையழகு. கறுப்புத்தாள். ஏழ்மையின் அவதாரம். ஆனாலும் நடையும், நெளி நெளியான கூந்தலும் பளிச்சென்ற வெண் முத்துப் பற்களும் மயக்கப் போதுமானவை.

கூளிபஜாரின் சாயங்கால மணம் அங்கங்கே வடையென்ற கடலை எண்ணெய் நெடிக்குள்ளும் கொள்ளுத் தின்னும் குதிரையின் கனைப்புக்குள்ளும், பீடி இலை கனைத்த சரவாடையுடனும் மிதந்து கொண்டிருந்தது. கன்னியம்மாள், கொட்டக் கொல்லைத் தெருவின் திருப்பம் வந்தவள் மேலே நடக்க முடியாமல் நின்று விட்டாள். உடம்பின் லாகவமும் கட்டும் நிறைந்த குதிரைக் குட்டி திடுக்கிட்டு மிரள்வது போல அவள் நின்றாள்.

பட்டாளத்துக் காக்கி உடையில் கனத்த பூட்சின் ஓசை அவள் எதிரே வரவே ஏறிட்டுப் பார்த்தவள், "ஓகோ நீயா!" என்றாள். அவளது நினைவுத் தீபம் கண்ணில் ஒளி விட்டது.

வந்தவன், "கன்னியா! எங்கிட்டுப் போறாப் போல!" என்றான்.

"பாலக்கரை வரைக்கும்."

பட்டாளத்தான் திரும்பி நின்றான்.

"நானும் வர்றேன்!"

"உன்னைச் சந்திப்பேன்னு எதிர்பார்க்கல்லே! எப்ப வந்தது! எங்கே இருந்து வந்தே!"

"எங்க சித்தப்பாரு இங்கே திருச்சியிலே இருக்காரு. நீயும் இந்த ஊருக்கு வந்தாச்சா! மதுரையை விட்டு எப்ப வந்தே!"

அவள் அன்பு முகத்தின்மீது அவனது பிரிவுக் கண் லயித்தது. ஆனாலும் பழி பாவத்துக்கு நல் வரவு கூறாத அக் கண்கள் சந்தித்தன.

அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள். இருவர் மனத்திலும் பழைய நாள் சம்பவங்கள் இனந் தெரியாத உருவில் எழுந்து அமிழ்ந்து கொண்டிருந்தன.

ஈரோட்டு வண்டிக்கு ரயில் கேட் சாத்தி விட்டான். நடந்து செல்லத் தடைப்பட்டு, குறுக்கிட்டுக் கதவுக்கு இப்பால் நின்றார்கள்.

"நீ சௌக்கியந்தானே, கன்னியம்மா!"

"உம் புண்ணியத்திலே சௌக்கியம். என்னைப் பார்த்தாலே தெரியலையா!"

பட்டாளத்துச் சிப்பாய் சிரித்துக் கொண்டான். கன்னியம்மாவின் எழிலும், மெருகும் உலர்ந்து போய் விட்டன.

"நாம் சந்திக்க வருஷம் நாலு இருக்காது!"

"இருக்கும், இருக்கும். இந்தச் சித்திரை வந்தா நாலும் போய் அஞ்சு" என்றான் கன்னியம்மா. அவள் மனசில் ஒரு கேள்வி தூண்டிற் புழுவாகத் துடித்தது. கேட்கவும் வேண்டும், கேட்பதும் தவறு.

"உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா!" இதைக் கேட்க எத்தனையோ தரம் எண்ணுவாள். உதடு உலர்ந்து விடும். உள்ளம் மூச்சை அடைக்கும். கண்ணில் நீர் முட்டும்.

"உனக்கு......" என்று தைரியமாக ஆரம்பித்தபோது ஈரோட்டு எக்ஸ்பிரஸ் பிசாசாக அலறிக் கொண்டு வந்தது. சக்கரங்களின் பேயிரைச்சல் எவ்வளவு சௌகரியமாகப் போய் விட்டதெனக் கன்னியம்மா தன்னையே மகிழ்வித்துக் கொண்டாள். குறுக்கிட்டுக் கதவைத் தாண்டி வந்தனர்.

"கன்னி நடந்து போனதை நினைச்சா, மனசு கொதிக்குது" என்று அவன் பேச ஆரம்பித்தான்.

"இன்னுமா! நீதான் உடனே பட்டாளத்துக்கு ஓடிவிட்டாயே. இனிமே என்ன!"

"உங்கப்பன் எங்கே இருக்குது!"

"மேல் உலகத்திலே, உங்க தாத்தாவோட!" என்று கூறிச் சிரித்தாள். வெண் பற்கள் பளிச்சிட்டன.

கன்னியம்மாள் போய்க் கொண்டே யிருந்தவள், தன் நடை வேகத்தை நிறுத்தியபடியே தான் போகும் திசை வேறாக மாறப்போனதை உணர்த்தாமல் உணர்த்தினாள். பாலத்தின் கோடியில் மல்லிகைப் பந்து சுருண்டு மணத்தை எங்கும் பரப்பிற்று.

"கன்னி, உனக்குப் பூவுன்னு உயிர் ஆச்சே."

இருவரும் பூக்காரியின் அருகே வந்தனர். பூவுக்கு உரிய காசை அவன் கொடுத்தான். அவள் படிய வாரி எடுத்துக் கட்டியிருந்த தலைக்குள் வைத்துக் கொண்டாள். பூச்சரத்துப் பருமன், கருமேகத்து நிலா உருண்டை போலப் பளிச்சிட்டது.

"உம்" – அவனால் பேச முடியவில்லை.

"நான் போகிறேன். எப்பவாவது வந்தால் பார்க்கிறேன்."

"உன் வீடு எங்கே, கன்னியம்மா!"

"இதுதான் வேண்டாம்." குறும்புக் கண் கொண்டு 'குற்றம் புரியாதே' என்றவளாகப் பார்த்தான்.

"நான் இன்றே நாகபுரிக்குப் போகிறேன். இரவு பதினொரு மணி வண்டியில்! உன் விலாசம் கொடுத்தால்......!"

"எதுக்காம்!"

"என்னமாவது உதவி வேணுமானாச் செய்ய றேன். இன்னிக்குத்தான் எங்க சித்தப்பாரு வீட்டுக்கு அத்தனை ரூபாயும் சாமானுமாகக் கொடுத்தேன். என் கையிலே..." என்றவன் சட்டைப் பைகளைத் துழாவிக் காசு, நோட்டு என்று எடுத்தான்.

"எனக்கா பணம்!"

"உன்னைப் பார்த்தால் கஷ்டமா இருக்கு. உன் புருசனுக்கு வேலை இல்லையா!"

"இருமுறது அவர் வேலை!"

"ஐயோ, பாவமா! பொல்லாத வியாதி ஆச்சதே. நீ எப்படி வாழுறே! செலவுக்குப் பணம்!" என்றான்.

"உடம்பிலே தெம்பு இருக்குது. உழைக் கிறேன். கூலி வேலை செய்யறேன். சம்பாதிக் கிறேன். அவரு படுத்து இரண்டு வருசங் களுக்கு மேலாச்சு."

"ரெண்டு வருசம் ஆச்சா!" இரண்டு வருஷ காலம் குடும்பத்தை ஒரு பெண் காப்பாற்று வதற்கு எவ்வளவு கஷ்டப்பட வேண்டுமெனக் கற்பனை செய்தான்.

"நான் படுபாவி. இது தெரிஞ்சா, அந்த ரூபாய் மூந்நூறும் உனக்குத் தந்திருப்பேன்."

அவன் குரலில், உணர்ச்சி நிறைந்த அன்பு இருந்தது. குரோதம் இல்லாத அன்பு மயமான பார்வையில் கன்னியம்மாளைப் பார்த்தான்.

"உன் மனசு எப்பவும் தங்கம்" என்றான்.

"இதுதான் இருக்குது. வைச்சுக்கோ!" என்றவன் சில்லறையும் கசங்கிய நோட்டுமாக அவள் கையில் கொடுத்தான்.

"உனக்கு வழிச் செலவுக்கு இல்லாமல் வள்ளிசா கொடுத்திட்டயே!"

"நான் சமாளிக்கிறேன். உனக்கு இதுதான் கொடுக்க முடிஞ்சது."

அவள் பணத்தைக் கண்ணோட்டமிட்டாள். கிட்டத்தட்ட பத்து ரூபாய் இருந்தது.

"ஏதேஷ்டம், நான் எதிர்பார்த்ததும் இது தான். தெய்வந்தான் உன்னை இங்கே அனுப்பியிருக்கணும்."

"மண்ணாங்கட்டி! தெய்வத்தை இங்கே இழுக்காதே."

அவன் குரலில் விரக்திக்குக் காரணம் தெரியும். மதுரையில் அவர்கள் வாழ்ந்த காலத்தில் பிடாரி அம்மன் சாட்சியாகச் சந்தித்து ஒரு வரை ஒருவர் மணப்பதாகப் பேசிக் கொண் டனர். அந்தச் சன்னதியில், அவர்கள் வாழ்வு, பார்வையில் ஆரம்பித்துப் புன்னகையில் வளர்ந்து புது உறவில் முடியாது பயனற்றுப் போனதால் அவனுக்கு அந்த விரக்தி.

இடுப்பில் தொங்கிய சுருக்குப் பையை எடுத் தாள். அவள் தளிர் விரல் ஆடிற்று. உடம்பில் குப்பென வியர்வை கொட்டியது. இவ்வளவு நேரம் சிரித்த முகத்தில் அன்பு மலர்ந்த முகத் தில் பயத்தின் ரேகை படர்ந்தது.

"ஏன் கன்னியம்மா. பணத்துக்காகப் பயப் படறயா!"

"இல்லே. இதை அடகு வைக்கக் கிளம்பி னேன்" என்று மோதிரத்தை எடுத்தாள்.

அவன் உடம்பில் தேள் கொட்டியது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. தன் நினைவுச் சின்னமாக அன்பின் பரிசாக அவனுக்குக் கொடுத்த மோதிரம். அவனுடைய மோதிரம். என்றோ ஒரு நாள் பருவத்தின் மினுமினுப்பில் பசலைக் கொடி போன்ற விரல்களைத் தொட்டுப் போட்ட மோதிரம்!

"இதை இன்னும் வைத்திருக்கயே!"

"இன்று. இதை விற்க வந்தேன். இதுதான் கடைசியாக என்னிடம் இருக்கிறது. தெய்வம் உன்னை அனுப்பி விட்டது."

"அன்பை விற்கக் கூடாது என்று நீ சொல்லுகிறாய்!"

அவள் எதுவும் பேசாமல் மோதிரத்தை அவன் கையில் கொடுத்தாள். மோதிரமிட்ட விரலை ரசித்துக் கொண்டு குனிந்தபடியே நின்றான். அவள் கோடை மின்னல் தோன்றி மறைவது போல மறைந்து விட்டாள். ஏதோ சொல்லப் பின் தொடர்ந்தான். அவள் எப் படியோ கூட்டத்தில் மறைந்து விட்டாள்.

* * *

நோய்ப்படுக்கையில் முடங்கிக் கிடந்த நோயாளி, மனைவியின் காலடிச் சத்தம் கேட்டு எழுந்தான்.

" மாத்திரை இருக்குதா !" என்றான். யந்திரமாக இருமித்தீர்த்து இடைவேளையாகச் சற்று ஓய்வு பெற்றிருக்கும் சுற்பொழுது அது.

" இருக்குது மாத்திரை. ஆரஞ்சுப் பழமும் இருக்குது " என்றான் கன்னியம்மா.

" எங்கம்மா மோதிரம் இருக்குச்சே......"

" ஆமா ! அம்மா அன்பாகக் கொடுத்ததை வித்தா போட்டே ! சை !"

" அதை வித்திட்டேன் இன்னிக்கு..."

" அதை வித்தா எல்லாம் வாங்கினே !"

" வேறே வழி ! மச்சான் !"

மாத்திரையை ஆவலுடன் எடுத்து வாயில் அடக்கிக் கொண்டான் கோயாளி. சிரித்த முகத்துடன் அவன் அருகில் அமர்ந்து கனை கனையாகப் பழத்தை உரிக்க ஆரம்பித்தாள். அவள் மனத்தில் அன்பின் ரசம் பிரகாசமாகக் குமிழ் விட்டுக் கொண்டிருந்தது.

* * *

அதே சமயம் பட்டாளத்துச் சிப்பாய் தன் சித்தப்பாவிடம் பேசிக் கொண்டிருந்தான். " சித்தப்பா எவனோ என் சட்டையில் இருந்த ரூபாயை பிக்பாக்கெட் செய்து விட்டான். வழிச் செலவுக்குப் பத்து ரூபாய் கொடுங்கள் " என்ற போது அவர் அவனிடமிருந்து இன்னும் பணம் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் பத்து ரூபாய் எடுத்துக் கொடுத்தார்.

அப்பாவி மனுஷன் சிப்பாய் விரலிலுள்ள மோதிரம் ஏது என்று கேட்க மறந்து போனார்!

நான் அறிந்த சிவன்

செம்மங்குடி ரா. ஸ்ரீநிவாஸ அய்யர்

கர்னாடக ஸங்கீதம் தனிச் சிறப்புள்ளது. அதற்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்னும் உட்பிரிவுள்ள தென்னாடே பிறந்த வீடு.

இவ்வரிய இசைக் கலை இன்று நாடெங்கும், பரந்து வளர்ந்திருக்கிறதென்றால், அப்பெருமை மகான்களான புரந்தரதாஸர், தியாகப்ரம்மம், முத்துஸ்வாமி தீக்ஷிதர், ச்யாமா சாஸ்திரிகள், ஸ்வாதித் திருநாள் போன்ற பரம பக்த சிகாமணிகளையே சார்ந்ததாகும்.

செவிக்கு இன்ப மட்டுமின்றி, மனத்திற்குச் சாந்தியும், ஆத்மானந்தத்தையும் ஊட்டும் வகையில் பல விசித்திர, ராக தானங்களில் அமைந்த இம் மஹனீயர்களின் கீர்த்தனங்களைக் கேட்டு அனுபவிக்கக் கொடுத்து வைத்தவர்களின் பாக்கியமே பாக்கியம்.

அவர்களால் அருளப்பட்ட கீதம், கீர்த்தனம், பதம், ஸ்வர ஜதி, வர்ணம் முதலானவைகளில் அடங்கியிருக்கும் ராக, லய ஸ்வரூபந்தான், நமது கர்னாடக ஸங்கீதமாகிற மாபெரும் விருக்ஷத்துக்கு ஆணி வேர். அவைகளில் பொதிந்து கிடக்கும் ஸங்கீதத்தின் சட்ட திட்டங்களையும், ஸாஹித்தியத்தின் எதுகை, மோனை முதலியவையுடன் கூடிய பொருளையும் பின்பற்றித்தான் ஆகவேண்டும் என்பதை மறந்து விடுவதற்கில்லை. அவைதான் நமக்கு என்றும் பயன்படக்கூடிய பொக்கிஷமாகும்.

அவ்வகை வடிவத்தில் தமிழில், முத்துத் தாண்டவர், ராமலிங்கஸ்வாமி, கோபாலகிருஷ்ண பாரதி, கவிகுஞ்சர பாரதி, அருணாசலக் கவிராயர், வேதநாயகம் பிள்ளை, நீலகண்ட தாஸர் போன்ற பெரியோர்கள் செய்திருக்கும் தமிழ்க் கீர்த்தனங்களில், சில கர்ண பரம்பரையாக வழக்கத்தில் ஸங்கீத வித்வான்களால் கச்சேரிகளில் பாடப்பட்டு வந்திருக்கின்றன. அவைகளில் வர்ண மெட்டு கிடைக்காத கீர்த்தனங்களைச் சேகரித்து, வித்வான்களைக் கொண்டு வர்ண மெட்டமைத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து புத்தக வடிவில் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய ஸாஹித்தியகர்த்தாக்களில் ஸங்கீத, ஸாஹித்ய வித்வானாகவும், பக்திமானாகவும், தான் செய்த ஸாஹித்தியங்களைத் தானே போஷித்து அழகாகப் பாடும் திறமையும் பெற்ற ஒருவர் உண்டு என்றால் ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள்தான்.

எளிய தமிழில், இனிய சொல்லும், பொருளும், கர்னாடக சுத்தமான தனித் தன்மை வாய்ந்த ஸங்கீதமும், பக்தி ரஸமும் கலந்து, பண்டித, பாமரர் யாவரையும், வசீகரிக்கச் செய்பவை சிவன் கீர்த்தனங்கள்.

நான் அறிந்து சென்ற முப்பது வருடங்களுக்கு மேலாக ஸங்கீதக் கச்சேரிகளில் பாடப்படும் இக்காலத் தமிழ்ப் பாட்டுகளில் பெரும் பங்கு சிவன் கீர்த்தனைகளே. ஏறக்குறைய நானூறு தமிழ்க் கீர்த்தனங்களுக்கு மேல் சிவன் இயற்றியிருக்கிறார். அதல்லாமல் ஸம்ஸ்கிருதத்திலும் அநேக கீர்த்தனைகள் செய்திருக்கிறார்.

அவரது தமிழ்க் கீர்த்தனைகளை நான் ஸ்வரப் படுத்தி எழுதிப் பாடம் செய்துள்ளேன். ஸ்ரீ சிவன் அவர்கள் தமது உடல்நலம் சரியாக இல்லாதிருந்தும், அதனைக் கூடக் கருதாமல் நானிருக்கும் திருவனந்தபுரம் வந்து சில வாரங்கள் என்னுடன் தங்கியிருந்து, கீர்த்தனங்களைப் பாடி உதவினார்கள். அக் கீர்த்தனங்களை நான் ஸங்கீத நேயர்களுக்கு ஸ்வரப் படுத்தி வழங்க முன்வந்துள்ளேன்.*

* * *

ஸ்ரீ சிவன் அவர்களை நேயர்களுக்கு நான் அறிமுகம் செய்ய வேண்டு மென்பதே இல்லை. ஆனாலும் நானறிந்த சிவனைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க மனம் இசையவில்லை.

தஞ்சை ஜில்லா, நன்னிலம் தாலூகாவில் உள்ள போலகம் என்னும் கிராமத்தில் ஸ்ரீ யோகாம்பாள், ராமாமிருதம் அய்யர் என்ற தம்பதிகளுக்கு 1890 விக்ருதி வருஷம் பிறந்த ராமய்யாவே நமது பாபநாசம் சிவன்.

ஏழாவது வயதில் தந்தையை யிழந்து, தாயின் பராமரிப்பில், தமையனார் ராஜகோபாலய்யருடன் திருவனந்தபுரம் சென்று ஊட்டுப் புரையில் சாப்பிட்டுக் கொண்டு மஹாராஜா ஸம்ஸ்கிருத கலாசாலையில் சேர்ந்து "உபாத்யாயா" என்ற பட்டம் பெற்றார்.

அத்துடன் நல்ல சாரீரமும், ஸங்கீத ஞானமுமிருந்ததால் ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ மஹாதேவ பாகவதர் அவர்களது அனுக்ரஹ பூர்வமாக ஸங்கீதம் பயின்றார். பின்பு ஸ்ரீ ஸாம்ப பாகவதர் என்னும் வித்வானிடமும் சில காலம் ஸங்கீதம் முறைப்படி அப்யாஸம் செய்தார்.

ஸங்கீதம், ஆண்டவனைப் பாடி அவனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டிய கலை என்பதை உணர்ந்து, கரமனை நீலகண்டதாஸர் என்ற பக்திமானைத் தரிசித்து, அவர்களது சிஷ்ய கோடிகளுடன் கலந்து, ஆலயங்களிலும் வீதிகளிலும் பஜனை செய்து கொண்டும் நீலகண்டதாஸரின் தமிழ்க் கீர்த்தனைகளையும் தேவாரம், திருப்புகழ், அருட்பா முதலிய பக்திரஸப் பாடல்களையும் பாடுவதில் தேர்ச்சியும் பெற்றார். வடமொழி, தமிழ் இரு பாஷைகளில் தேர்ச்சியும் ஏற்பட்டது. ஆண்டவன் அருளால் பாட்டியற்றும் கவனசக்தியும் ஏற்பட்டது.

1910-ம் வருஷம் தாயாரையும் பிரிந்த ராமய்யா, திருவனந்தபுரத்தை விட்டுக் கிளம்பி ஏழு வருஷ காலம் கால்நடையாகவே தென்னாட்டில் உள்ள தேவாலயங்களை எல்லாம் தரிசித்து ஆங்காங்கு ஆண்டவனைப் பாடி, பஜனை செய்து கொண்டு, கும்பகோணத்தை அடுத்த மருதா நல்லூரில் உள்ள ஸத்குரு

* 32-ம் பக்கத்தில் முதல் கீர்த்தனை வெளியாகி யிருக்கிறது.

ஸ்வாமிகள் மடத்தில் தங்கியிருந்து ஸ்வாமிகளின் அநுக்ரஹத்தையும் பெற்றார்.

குடகு, வேங்கடம், குமரி எல்லையுள்ள தமிழ் நாடு முழுவதும் சிவன் போகாத க்ஷேத்ரமில்லை. வீதிகளில் பஜனை செய்யாத திருவிழாக்களில்லை. தமிழ் நாட்டில் பிரபலமான க்ஷேத்திரங்களில் தேவாலயங்களில் நடக்கும் முக்கியமான திருவிழாக்களில் செவிக்கு உணவு பாபநாசம் சிவனும், வயிற்றிற் குணவு தேப்பெருமாள் நல்லூர் சிவனும் ஊட்டி வந்தார்கள்.


தஞ்சை ஜில்லாவில் உள்ள கணபதி அக்ரஹாரம் மகா ஜனங்கள் இவரைச் சிவன் என்று பட்டம் சூட்டி அழைத்தார்கள். அது முதல் போலகம் ராமய்யா, "சிவன்" ஆனார்.

சிவனிடம் அளவு கடந்த அன்பு வைத்திருந்த பழயவலம் சுப்பய்யர் என்ற மகா ரஸிகரான பெரியார், திருவாரூரில் ஒரு பெண்ணைத் தேடி சிவனுக்கு மணம் செய்வித்து சிவனை இல்லற வாழ்க்கைக்குத் திருப்பினார். அதன் பிறகு பாபநாசத்தில் தமிழ்ப் பண்டிதராக இருந்த தமது தமையனார் ஸ்ரீ ராஜகோபாலய்யருடன் தங்கி இல்லறம் நடத்தினார். அதிலிருந்துதான் "பாபநாசம் சிவன்" ஆனார்.

அன்னாளில் புகழ் பெற்ற ஸங்கீத வித்வான்களும் ஹரிகதா ப்ரவீணர்களும் சிவனைப் பாடச் சொல்லிக் கேட்டு ஆனந்தப்படுவார்கள். கோனேரி ராஜபுரம் வைத்யநாதய்யர் ஸங்கீதத்தில் சிவனுக்கிருந்த மோஹத்தில், அவர்களைப் போல சிவனும், அன்றும் இன்றும், பாவ புஷ்டியுடனும், கற்பனைக் களஞ்சியமாகவும், சிறந்த பாணியுமாய்ப் பாடுவதை யாவரும் அறிவர். பக்க வாத்யங்களுடன் சிவன் அவர்கள் சிறந்த கச்சேரி செய்து நானே கேட்டிருக்கிறேன். சிவனது சாரீரத்திலேயே பக்தி ரஸ பாவம் த்வனிக்கிறது. அவர் தாமே சுவைத்துப் பொருளறிந்து பாடும்பொழுது கேட்போரை பக்தி வெள்ளத்தில் மிதக்கச் செய்வார். ஹரிகதையும் நன்றாகச் செய்வார்.

இவ்வளவு பெருமை வாய்ந்த சிவன் பற்றற்ற வாழ்க்கையும், வறுமையையே பூஷணமாகவும் கொண்டு 1930-ம் வருஷம் சென்னைக்கு வந்து வாழ்க்கை நடத்தத் தொடங்கினார். இல்லையென்று யாசிக்கத் தெரியாமலும், வருவாயுமில்லாமலும் ஐந்து வருஷ காலம் அஞ்ஞாத வாஸமே செய்தார் எனலாம்.

பிறகு அடையாறு கலாக்ஷேத்திரத்தில் இவரை இருக்கச் செய்து அங்கு மாணவர்களுக்கு ஸங்கீதம் சொல்லி வைக்க ஏற்பாடு செய்தார்கள். அதன் பிறகு திரைப் படத்தில் "குசேல"ராகவே நடித்தார். தொடர்ந்து சினிமாவுக்குப் பாட்டு இயற்றிக் கொடுத்ததிலும் புகழும் பொருளும் கிடைத்ததென்னவோ உண்மை. ஆனால் கிடைத்த பொருளில் மீதியிருந்ததை எல்லாம் சிவன் பிறந்த ஊரான போலகத்தில் ஜீரணமாகியிருந்த சிவாலயத்தைக் கட்டித் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்வித்து, 'சிவன் தந்தது சிவார்ப்பணம் செய்தேன்' என்று மகிழ்ச்சியுடன் கூறி இன்று அறுபத்தாறு வயதான சிவன், பழைய சிவனாகவே (குசேலராகவே) விளங்குகிறார் என்றால், பரம பக்தர்கள் கூட்டத்தில் ஸ்ரீ சிவனும் ஒருவர் என்பதற்கு வேறு அத்தாக்ஷி வேண்டுமா!



கீர்த்தனை 1. **ராகம்: ஹம்ஸத்வனி** **ஆதி தாளம்**

பல்லவி

மூலாதாரமூர்த்தி —கஜ
முகனே சரணம் உனது உபய சரணம் (மூலாதார)

அனுபல்லவி

வேலாயுத குஹன் தனக்குமுன் தோன்றிய
விமலா உமையாள் தருமகனே
அமலா எமையாள் முனிவர்தொழும் (மூலாதார)

சரணம்

அன்புடன் தும்பை அருகம் புல்லை எடுத்
தருச்சனை செய்தாலும் போதும்—அன்பர்
துன்பம் துடைத்துப் பேரின்பம் தரும் வரதா
துணைபுரி ப்ரணவாகார கணபதியே (மூலாதார)

ஹம்ஸத்வனி ராகம் சங்கராபரண மேளத்தில் பிறந்தது. இதன்,
ஆரோஹணம்:—ஸரி கப நிஸ்.
அவரோஹணம்:—ஸ்நி பக ரிஸ.

உபாங்க ராகம், ஔடவ ராகம், வர்ஜ ராகம், ம. த. வும் வர்ஜம். இந்த ராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள், ஷட்ஜ பஞ்சமம் நீங்கலாக சதுச்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், காகலி நிஷாதம். ரஞ்சகமான ராகம். இதனைக் கற்பனை செய்தவர் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் தந்தையான ஸ்ரீ ராமஸ்வாமி தீக்ஷிதராவார்.

ஹம்ஸத்வனி — ஆதி — 1 களை

பல்லவி

பா, ஸ்நிப பா கா ரி கா ; | பா ; ; ; | ; ; கா பா ||
(1) மூ லா - - தா - ர மூ - ர்த்தி - - - - - க ஜ

ஸா நீ ஸா ; நீ ஸா ரி ரி | ஸா ஸ் நி பா நீ | ஸா ஸ்நி பா பக ||
மு க னே ச ர ணம் உ ன து - உ ப ய ச - ர ணம்-

பாரிஸ்நிப கப கா ரி கா பா | ரி ரி ஸ் நி பா ; | ; ; கா பா ||
(2) மூ - லா - தா - ர மூ - ர்த்தி - - - - - - க ஜ

ரி ரி ஸா ; நீ ஸா ரி பா | நீ ஸ் ர கா பா | நி ரி ஸ் நிபா பக ||
மு க னே ச ர ணம் உ ன து உ ப ய - ச - ர ணம்

பநிரிஸ்நிப கப கா ரி கா பா | ரி ரி ஸ் நிபா ; | ; ; ; ; ||
(3) மூ - லா - - தா - - ர மூ - ர்த்தி - - - - - - - - - -

அனுபல்லவி

பா, ஸா, நீ ஸா ; ரி ரி | கா கா கரி ரி | ஸாகரி ஸ்நி ஸா ||
1 வே லா யு த ' கு ஹன் த ன க்கு - மூன் தோ - - ன்றி- ய

ஸ் நிப பஸா ஸ்நி ஸா ; ரி ரி | கா கப் கா ரி | ஸ்ரிக ரிஸ் நிஸா ||
2 வே . . லா - யு - - த ' கு ஹன் த ன - க்கு மூன் தோ - - ன்றி - ய

ஸ் ரி ஸா, நி ஸா நீ ஸ் நி க ப நி | ஸ் நீ பா , நிப | ,கா கரி க ப நி ||
வி ம லா - உமையாள் த ரு ம க னே அ மலா , எமை யாள்முனிவர்தொழும்

ப நி ரி ஸ் நி ப கப கரி ஸரி கா பா | ரி ரி ஸ் நி பா ; | ; ; ; ; ||
மூ - - லா - - தா - - - ர-மூ ; - ர்த்தி - - - - - - - -

சரணம்

பா நீ பா நீ பா ஸ் நி பா கா | பா ஸ் நி பா கா | ப நி பா கா ரி ||
அ ன் பு டன் தும் - - பை அ ரு கம் - - பு - - ல்லை எ டு த்

கா க ப கா ரி ரி ஸா ரி, கா | பா , ஸ் நிஸ்நி | பா ; பா ப க ||
த ரு - ச்ச னை செய் - தா லும் போ - தும் - - - அன்பர்.

பா , ஸா, ஸ்நி ஸா , ஸா , ஸ் ரி | காப் ரி , ஸா | ஸ்நி க ரி ஸ்நிஸா ||
துன் பம் து - டை த்து ப்பே - ரி - ன்பம் த ரும்- வ - ர - தா

ஸாகரி ஸ் நிஸா பா ப நி ஸ் நிபா | கா ; ரி ஸா | ரி கா பா ஸ் நி ||
துணை - பு - ரி ப்ரண - வா - - கா - ர க ண ப தி யே -

ஸ் க ரி ஸ் நி ப க ப க ரி ஸரி கா பா | ரி ரி ஸ் நிபா ; | ; ; ; ; ;
மூ - - லா - - தா- - - ர - மூ - ர்த்தி - - - - - - - - - -



ஆற்றங்கரையினிலே

பேராசிரியர்: ரா. பி. சேதுப்பிள்ளை

36. திருவேங்கடம் (தொடர்ச்சி)

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே தமிழ் நாட்டின் எல்லைகளை வகுத்தாள் இயற்கை அன்னை; அலை கடலும் நெடுமலையும் அரண் செய்து நின்ற தென்னாடே தமிழகம் என்று வரையறுத்தாள். வடக்கே வேங்கடம், தெற்கே குமரி, கிழக்கே குண கடல், மேற்கே குடகடல். இந் நான்கு எல்லையுள் அமைந்த பண்டைத் தமிழ் நாட்டை,

> "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
> தமிழ் கூறும் நல்லுலகம்"

எனத் தொல்காப்பியப் பாயிரம் பாடிற்று. இத்தகைய திருநாட்டில் தமிழ் வேந்தர் கொடி பறந்தது; அவர் ஆட்சி சிறந்தது. முத்தமிழும் செழித்து வளர்ந்தது.

கன்னித் தமிழின் சுவையறிந்த கருங்கடல் காவிரிப்பூம் பட்டினத்தைக் கவர்ந்து விழுங்கிற்று; குமரி யாறு பாய்ந்த தென் புலத்தையும் கொள்ளை கொண்டது. இவ்வாறு கேடு விளைத்த கடலின் கொடுமை கண்டு குமுறினார் இளங்கோவடிகள். ஆயினும் தமிழகத்தின் வடக்கெல்லையேனும் வடுப்படாதிருக்கின்றதே என்று எண்ணி ஒருவாறு மனம் தேறினார்.

> "நெடியோன் குன்றமும்
> தொடியோள் பௌவமும்
> தமிழ்வரம் பறுத்த
> தண்புனல் நாடு"

(தொடியோள் - குமரி, பௌவம் - கடல்)

என்று தாம் கண்ட தமிழ் நாட்டைப் பாட்டிலே படமெடுத்துக் காட்டினார். குமரி மலைக்குத் தெற்கே நெடுந்தூரம் பரவியிருந்த நாட்டைக் கொடுங் கடல் விழுங்கி விட்டதனால் சிலப்பதிகாரக் காலத்தில் குமரிக் கடலே தமிழ் நாட்டின் தென்னெல்லை யாயிற்று என்பது இளங்கோ முனிவர் வாக்கால் நன்கு விளங்குகின்றது.

வட எல்லையில் நின்ற திருவேங்கடம் "நெடியோன் குன்ற"மாகக் காட்சி அளித்தது. பொதுவாக 'நெடியோன்' என்ற சொல் 'உயர்ந்தோன்' என்ற பொருள் படுமாயினும் சிறப்பு வகையில் அது உலகளந்த திருமாலையே குறிப்பதாகும். அந்த முறையில் திருவேங்கடத்தை நெடியோன் குன்றம் என்று பாடினார் இளங்கோவடிகள். அம்மலையில் "நீல மேனி நெடியோன்" நின்று அருள்புரியும் நீர்மையை ஓர் அழகிய சொல்லோவியமாக எழுதிக் காட்டினார்.

> "வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
> ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை
> மின்னுக்கொடி உடுத்து விளங்குவில் பூண்டு
> நன்னிற மேகம் நின்றது போல
> பகையணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
> தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
> நலங்கிளர் ஆரம் மார்பில் பூண்டு
> பொலம்பூ ஆடையிற் பொலிந்து தோன்றிய
> செங்கண் நெடியோன் நின்ற வண்ணம்"

(மீமிசை - மேலே, அணங்கு ஆழி - வருத்தும் சக்கரம், பொலம்பூ ஆடை - அழகிய பொன்னுடை, நின்ற வண்ணம் - நின்ற திருக்கோலம்.)

இளங்கோவின் உள்ளத்தை அள்ளுவதாயிற்று. விண் அளாவி நின்ற வேங்கட மலையில் விம்மி எழுந்து பொங்கி வழிந்த அருவியின் அழகினைக் கண்டு ஆனந்த முற்றார் அடிகள். அம் மலையின் உச்சியில் அருளுருவாக நின்ற கருமுகில் வண்

ணனை - கமலக் கண்ணனைக் கண்டு களி கூர்ந்தார். அப்பெருமான் காட்சி தரும் திருமலையை 'நெடியோன் குன்றம்' என்று நெஞ்சாரப் போற்றினர்.

திருவேங்கடத்திற்கு வடபால் அமைந்த நாடும், அந் நாட்டில் வழங்கிய மொழியும் வடுகு என்று பெயர் பெற்றன. வடுகு என்னும் சொல் வடக்கு என்ற திசைப் பெயரின் அடியாகப் பிறந்ததாகும்.

"வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்திசை உள்ளிட்டு எஞ்சிய மூன்றும்"

என்று பழம் புலவர் ஒருவர் பாடிய பாட்டால் வட திசையில் வடுகும் ஏனைய மூன்று திசைகளிலும் நெடுங் கடலும் தமிழகத்தின் எல்லையாக நின்ற தன்மை இனிது விளங்கும்.

வடுகு மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையே திருவேங்கடம் ஒரு வரம்பாக நின்றது என்று திறம்படக் கூறினர் கவியரசராகிய கம்பர். செம்மை வாய்ந்த அம் மலையில் சிந்தையை ஒடுக்கிய சித்தரும், செற்றம் நீக்கிய சிலரும், நற்றவம் புரியும் முனிவரும் நாள்தோறும் நீராடி நலம் பெறுவர் என்று அழகுறப் பாடினர்.

"முனிவரும் மறைவ லோரும்
முந்தைநாள் சிந்தை மூண்ட
வினைவரும் நெறியை மாற்றும்
மெய்யுணர் வோரும் விண்ணோர்
எனைவரும் அமரர் மாதர்
யாவரும் சித்தர் என்போர்
அனைவரும் அருவி நன்னீர்
நாளும்வந் தாடு கின்றார்"

(எனைவரும் - எல்லோரும்)

என்பது கம்பர் வாக்கு. இளங்கோவும் கம்பரும் கண்ட அருவிகளை இன்றும் திருவேங்கடத்திலே காணலாம்.

வட திசையில் உள்ள நாடு வடுகு என்று பெயர் பெற்ற வாறே குடதிசையாகிய மேற்றிசையில் அமைந்த நாடு குடகு என்று அழைக்கப் பெற்றது. வடதிசையில் வாழ்பவர் வடுகர்; குட திசையில் வாழ்பவர் குடகர். வடக்கே யிருந்து வரும் காற்று வாடை; குடக்கே யிருந்து வீசும் காற்று கோடை என்று கூறும் பண்டை நிகண்டு.

அறுநூறாண்டுகளுக்கு முன்னே எழுந்த நன்னூல் என்னும் தமிழ் இலக்கணம், வேங்கட மலையைத் தமிழகத்தின் வடக்கெல்லையாகவும் குடகு நாட்டைக் குடக்கெல்லையாகவும் குறிக்கின்றது.

"குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனும்நான் கெல்லையின் இருந்தமிழ்"

என்று தமிழ் நாட்டின் நான்கெல்லைகளையும் காட்டிற்று நன்னூல் பாயிரம். பிற்காலத்தில் குண கடல், வங்காளக் குடாக் கடல் ஆயிற்று; குமரி, காமரின் (Comorin) எனத் திரிந்தது; குடகு, கூர்க் (Coorg) என்று சிதைந்தது.

இவ்வாறு தொல்காப்பியர் காலமுதல் நல்லிசைப் புலவர் எல்லோரும் நாட்டிய வடக்கெல்லையைத் தென்னிந்திய வரலாறும் வலியுறுத்துகின்றது. தமிழகத்தின் ஓர் அங்கமாக விளங்கிய தொண்டை மண்டலம் பண்டைக் காலந் தொட்டு இருபத்து நான்கு மாவட்டங்களாக வகுக்கப்பட்டிருந்தது. அந்நாளில் கோட்டம் என்பது மாவட்டத்தின் பெயர். தொண்டை நாட்டிலே தோன்றித் திருத்தொண்டர் புராணம் இயற்றிய சேக்கிழார் புலியூர்க் கோட்டத்திலே பிறந்தவர் என்று அவர் வரலாறு கூறுகின்றது.

"நாலாறு கோட்டத்துப் புலியூர்க் கோட்டம்
நன்றிபுனை குன்றைவள நாட்டு மிக்க
சேலாறு கின்றவயல் குன்றத் தூரில்
சேக்கிழார் திருமரபு சிறந்ததன்றே"

(நாலாறு - இருபத்து நான்கு; மரபு-குலம்)

என்ற பாட்டால் சேக்கிழார் பிறந்தநாடும் ஊரும் நன்கு விளங்கும். தொண்டை மண்டலத்திற்கு என்றும் அழியாப் பெருமை யளித்த திருத்தொண்டராகிய கண்ணப்பர் பொத்தப்பி நாட்டில் உள்ள உடுப்பூரில் பிறந்தவர்.

"நாவலர் புகழ்ந்து போற்றும்
நல்வளம் பெருகி நின்ற
பூவலர் வாவி சோலை
சூழ்ந்தபொத் தப்பி நாடு"

என்று பெரிய புராணத்தில் போற்றப் பட்ட பொத்தப்பி நாடு வேங்கடக் கோட்டத்தைச் சேர்ந்தது என்பது பழைய பட்டயங்களால் விளங்குகின்றது. எனவே, வேங்கடக் கோட்டம் தொண்டைநாட்டுக் கோட்டங்களுள் ஒன்று; அக் கோட்டத்திலே சிறந்து நின்றது திருவேங்கடம் என்னும் திருப்பதி. பழம் பாட்டும் பட்டயங்களும் இவ்வுண்மையை உணர்த்துகின்றன.

தென் எல்லையில் நின்று தமிழ் நாட்டைக் காத்தருளும் கன்னித் தெய்வமாகிய பகவதியையும், வட எல்லையில் நின்று வாழ்த்தி யருளும் திருவேங்கடப் பெருமானையும் வணங்கிப் போற்றுகின்றார் பாரதியார்.

"நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு"

திரை-அலை; மாலவன்-குன்றம்-திருவேங்கடம்

என்று அவர் பாடிய பாட்டு பழுதாகுமோ? குமரி நாட்டிலே சிலம்பணிந்த தமிழ்த் தாயின் திருவடியும், வேங்கட மலையிலே தமிழ் மாலை சூடிய திருமுடியும் என்றென்றும் கண்டு இன்புறுவர் தமிழ் மக்கள்.



ரெகுலர், மற்றும்
ஸெல்பிலிங் மாடல்
களில் பற்பல ரகங்
களில் கிடைக்கும்.
பைலட்
உயர் ரக
இங்க்
சுகமாக எழுதுவ
தற்கு எப்பொழு
தும் பிரக்யாதி
பெற்ற பேனு
வும், இங்கும்
PILOT INK
PILOT PENS
A NATIONAL PRODUCT WITH INTERNATIONAL REPUTATION
THE PILOT PEN CO. (INDIA) LIMITED
Office: "Catholic Centre" Armenian Street, Madras-1 Phone: 2325



டியூபுகளில் ஏன்
பாட்டில்களல்ல ?
* கலவைப் பொருள்கள் புத்தம் புதிய
தாகவும் சுருசுருப்புடனும் இருக்கும்.
★ தூய்மை கெட்டுப் போக முடியாது.
★ வேண்டிய அளவில் வெளியே எடுக்க
முடியும் ஆகையால் சிக்கனமானது.
NOPAIN
நோபெயின்
பாம்
சுகாதார முறையில்
அடைக்கப்பட்ட ட்யூபுகளில்
தலைவலி, தசைக்
குரிய வலி, மார்ச்
சளி இவைகளுக்கு
ஒரு கல்கத்தா கெமிக்கல்
தயாரிப்பு
CF-3TM8-55
தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1


இந்த ஆச்சரியமான சோப்புத்தூள் வெள்ளைத் துணிகளை — வெள்ளை வெளேரென்று — வெளுக்கிறது — கஷ்டப்பட்டுக் கசக்காமல்!
ரின்ஸோவினால் — இந்த ஆச்சரியமான சோப்புத் தூளினால் — வெளுக்கப்பட்ட எந்த ஆடையையும் சாதாரணமாக வெளுக்கப்பட்ட ஆடையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்கள் உடனே காண்பீர்கள் — ரின்ஸோ எவ்வளவு அதி வெண்மையாக வெளுத்திருக்கிறது என்று! ரின்ஸோவின் சக்தி வாய்ந்த நுரை எல்லா அழுக்கையும் வெளிப்படுத்துகிறது. வீட்டில் விழும் எல்லா, கலர், மற்றும் வெள்ளை ஆடைகளையும் வெளுப்பதற்கு ரின்ஸோவை உபயோகப்படுத்துங்கள். நீங்களே காண்பீர்கள் — அது உங்களுடைய பாதி வேலையை செய்துவிடுகிறது என்பதை! கஷ்டப்பட்டுக் கசக்க வேண்டியதில்லை! அடித்துத் துவைக்க வேண்டியதுமில்லை! நீங்கள் அதனுடைய அதிகப்படியான வெண்மைக்கு வேறொன்றும் சேர்க்கவேண்டியதில்லை.
ரின்ஸோவை இன்றே உபயோகியுங்கள்!
the wonder soap powder washes WHITER
Rinso
Rinso
RINSO WASHES
ரின்ஸோவை இன்னும் உபயோகிக் கவில்லையா?
ரின்ஸோ மிக வெண்மையாக வெளுக்கிறது!
R. 4-50 TM
லீவர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெடினால் இந்தியாவில் தயாரித்தது



அத்தியாயம் 47

மழையும் வெயிலும்

படம் முடிந்த பிறகு மறுபடியும் சென்னை வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். அதற்குக் காரணம் இருந்தது. என் உடல் திடீரென்று மிகவும் மெலிந்து போயிற்று. தாங்க முடியாத தலைவலி அடிக்கடி வந்து ரொம்பத் துன்புறுத்தியது. உடம்பைக் கவனித்துக் கொள்வதுதான் முக்கியம் என்று ராஜாராம், கவுண்டர், அவர் மனைவி எல்லாருமாக என்னைச் சென்னைக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

சென்னைக்கு வந்த பிறகு மிகவும் கைராசிக்காரரான ஒரு டாக்டரிடம் சென்று பல வகையான மருந்துச் சீட்டுகள் வாங்கிக் கொண்டு வந்தோம். எப்போது பார்த்தாலும் கவலையும், அதிகப்படியான வேலையும் சேர்ந்து நரம்புகள் தளர்ச்சியடைந்திருப்பதாக அந்த டாக்டர் கூறினார். அவர் போட்ட சில ஊசிகளிலேயே உடம்பு சற்றுத் தேறியது.


இதற்குள் சென்னை அல்லோல கல்லோலப் பட்டது. புதிய படத்தைப் பற்றிய எங்கும் பேச்சாம். புதிய படம் 'அமரதாராவின் இமய வெற்றி. வெற்றியின் சிகரம். நடிப்பில் அற்புதம்' என்றெல்லாம் பத்திரிகைகள் பாராட்டி எழுதின.

நான் மாடியில் என் அறையிலேயே எப்போதும் இருந்து வந்தேன். நான் சென்னை வந்திருப்பதே யாருக்கும் தெரிவிக்கப்படவில்லை. எனக்கும் உடம்பு சரியாக இல்லாமலிருந்தபடியால் யார் வந்தாலும் நான் கோவையில் இருப்பதாகக் கூறி அனுப்பி வந்தார் கவுண்டர். எனக்கு அது நிம்மதியாக இருந்தது.

ஒரு நாள் நான் ஸ்நானம் செய்துவிட்டு ஈரத் தலையைக் கோதிக்கொண்டே என்னை மறந்து என் அறையில் உட்கார்ந்திருந்தேன்.

'ரங்கதுரை அன்று வந்த போது நான் அப்படி எரிந்து விழுந்தது தவறுதான். நான் சரியாகப் பேசியிருக்க வேண்டும். அவர்தான் எத்தனை பொறுமையாகப் பேசினார். நான்தானே பொறுமை இழந்துபேசினேன். குங்குமத் துறையில் ஆனந்தமாக அவருடன் மரத்தடியில் நின்று பேசிக்கொண்டிருந்தேனே! 'உன்னை என்றும் கைவிடமாட்டேன்' என்று உறுதி கூறினாரே! நான் முட்டாள்





தனமாக நடந்து கொண்டால்தான் என்ன? அவர் தன்னுடைய வாக்கைக் காப்பாற்றுவதற்காகவாவது என்னைக் கவனித்துக் கொள்ளக் கூடாதா? என் இதயம் அவருக்காக எப்படித் துடிக்கிறது என்பது அவருக்கு ஏன் தெரியவில்லை? 'இது என்ன? யார் என் கண்களைப் பொத்துகிறார்கள்? இந்தக் கரம் யாருக்குச் சொந்தமானது?' என் இதயம் ஆனந்தத்தால் விம்மித் துடித்தது. உடம்பெல்லாம் புளகாங்கிதம் ஏற்பட்டது. கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. ஆயினும் நான் திரும்பிப் பார்க்கவில்லை. இது பிரமைபோலிருக்கிறது. திரும்பினால் மறைந்து விடும். திரும்பவும் கண்களின் மேல் இந்த அன்புக்கரத்தின் குளிர்ந்த ஸ்பரிசத்தைப் பெற முடியாது.'

'என்னையறியாமல் என் கை, கண்களை மூடியிருந்த கரங்களைத் தொட்டுப் பார்த்தது. இது அவருடைய கரம்தான். ரங்கதுரைதான்! அவர் என்னிடம் கோபித்துக் கொள்ளவில்லை. அவர் என்னைக் கைவிடவில்லை. அவர் அன்பு மாறவில்லை. இல்லாவிட்டால் இந்தக் கரத்தில் இப்படி அன்பு பொங்கி வழிய முடியாது. அதன் ஸ்பரிசத்தினால் என் இதயம் நிரம்பித் ததும்ப முடியாது.'

'ஈசுவரா! என் உயிர் இந்த ஆனந்தமயமான நேரத்திலேயே போய்விடக் கூடாதா? அவருடைய கரங்கள் உணர்ச்சியினால் நடுங்குகின்றன. அவரைத் திரும்பி எப்படி நேராகப் பார்ப்பது? அதற்கு எனக்கு என்ன அருகதை இருக்கிறது?'

இப்படி நினைக்கும்போதே என் இதயத்திலும், உடலிலும், உள்ளத்திலும் ஒரு எல்லை காணமுடியாத அமைதி ஏற்பட்டது. அந்த இன்பத்தில் என்னை மறந்தேன். உலகத்தையே மறந்தேன். அணு அணுவாக அந்த அமைதி என் உடலில் பரவியதை நான் உணர்ந்தேன். அந்த மாதிரி இன்பத்தை என் வாழ்நாளில் நான் அனுபவித்ததே கிடையாது. ஆகையால் எங்கே அசைந்தால் அது போய்விடுமோ என்று பயந்து கற்சிலை மாதிரி உட்கார்ந்திருந்தேன். கண்களில் சூடான கண்ணீர் பொங்கி அவரது கரங்களில் பட்டு என் கன்னத்தில் உருண்டது.


"இந்து!" என்று மிகமிக மெல்லிய குரலில் யாரோ எங்கிருந்தோ கூப்பிடுவது கேட்டது. திடீரென்று நான் இருந்த அமைதியான சூன்யப் பிரதேசத்தில் ஆயிரமாயிரம் செண்பக விருட்சங்கள் தோன்றி, மலர்ந்து மணத்தைப் பரப்பின. அந்த விருட்சங்களின் கிளைகளில் தழுவி மலர்களிலிருந்து மகரந்தப் பொடியை எடுத்துக்கொண்டு வீசிய தென்றல் என்னை அணைத்துக் கொண்டது. பன்னீர் தெளிப்பது போல் என்மீது சில மழைத் துளிகள் விழுந்தன. என்ன ஆனந்தம். இதுதான் ஸ்வர்க்க பூமியோ? இல்லை, இது மழைத் துளி இல்லை. என் நெற்றியில் விழுந்தது கண்ணீர்.

கண்களிலிருந்து கரங்கள் விலகி என் கைகளைப் பிடித்துக் கொண்டன.

நான் கண்களைத் திறக்கவில்லை: அவர் என் அருகில் உட்கார்ந்திருக்கிறார் என்று உள்ளம் சொல்லிற்று.

"இந்து! என்னைப் பார்க்கக்கூட மாட்டாயா? என்மீது அவ்வளவு கோபமா? இந்து! என்னைப் பார். ஏன் இப்படி உன்னையே நீ வாட்டிக் கொள்கிறாய்? நான் உன்னை என்றும் மறக்கவே இல்லை, இந்து. நான் எங்கே இருந்தாலும் நீ என்னுடன் எப்போதும் இருந்தாய். என்னைப் பாரேன்!" என்றார்.

நான் கண்களைத் திறக்க முயன்றேன். திறந்தால் கண்ணீர் பிரவாகமாகப் பெருகிவிடும் என்று எனக்குப் பயமாக இருந்தது. பேச முயற்சித்தால் விம்மல் தான் வெளிப்படுமென்று அச்சமாக இருந்தது.



மறுபடியும் அவர், "இந்துமதி!" என்று ஆதுரத்துடன் என்னை அழைத்தார். என் நெஞ்சம் இப்போது விழித்துக் கொண்டது. நான் தீர்மானித்தது என்ன? இப்போது நடந்து கொள்வதென்ன? என் மன உறுதி இவ்வளவு தானா? அவரிடம் கடுமையாகப் பேசாமல், ஆனால் இப்படி உணர்ச்சிக்கு இடங் கொடுக்காமல் சாதாரணமாகப் பேசி அனுப்பிவிட வேண்டும். இந்த எண்ணத்தோடுதான் என் கண்களைத் திறந்தேன். ஆனால் நினைத்ததைச் செய்யத்தான் என்னால் முடிவதே இல்லையே. கண்களைத் திறந்ததும் அவருடைய கையில் என் கை துவண்டு கிடப்பது தான் தெரிந்தது. அதைப் பார்த்துக் கொண்டே பேசாமலிருந்தேன்.



"இந்து! நீ எப்படி இளைத்துப் போய் விட்டாய்? என்னோடு இருந்திருந்தாயானால் இப்படி உன்னை இளைத்துப் போகும்படி நான் விட்டிருக்க மாட்டேன்" என்றார் அவர்.

அவ்வளவு தான். இந்த அனுதாபவார்த்தைகள் என் இதயக் கதவைத் திறந்து விட்டன. அங்கே நான் அடக்கி வைத்திருந்த அத்தனை அன்பும் பொங்கிப் பெருகி வெள்ளமும் நுரையுமாக ஓட ஆரம்பித்தது.

'என்னை ஏன் இத்தனை நாட்கள் விட்டு விட்டுப் பேசாமலிருந்தீர்கள்? நான் எப்படி உங்களுக்காக ஒவ்வொரு கணமும் துடித்தேன். என் பதை ஏன் உணரவில்லை? எவ்வளவு நாட்கள் உங்களுக்காகக் காத்திருந்தேன். நீங்கள் இந்தியா திரும்பியதும் என்னை ஏன் உடனே தேடிக்கொண்டு வரவில்லை?' என்றெல்லாம் கேள்விகள் குமுறிக்கொண்டு எழுந்தன. அந்த வேகத்தில் நானே திக்கு முக்காடித் திணறிப் போய்விட்டேன்.

கடைசியில் மிகவும் பிரயாசைப் பட்டு, "ஏன் என்னை இத்தனை நாள் மறந்து விட்டு இருந்தீர்கள்?" என்று மாத்திரம் கேட்டேன். அதை முடிப்பதற்கு முன்னாலேயே கண்ணீர்ப் பிரவாகம் பெருக்கெடுத்தது.

ரங்கதுரை சற்று நேரம் ஒன்றும் சொல்லவில்லை. என் துயரத்தைக் கண்டு மலைத்துப் போய் விட்டதாகத் தோன்றியது. என்னுடைய விம்மல்கள் நிற்கும் வரை அவர் பேசவில்லை. ஆனால் என்னுடைய அந்தரங்கம் வரையிலுள்ள அத்தனை விஷயங்களையும், என்னுடைய மாசற்ற அன்பையும், களங்கமில்லாத உள்ளத்தையும், அவரை நினைத்து நினைத்து இத்தனை நாட்களாய் உருகியதையும், நான் அனுபவித்த, சொல்லி முடியாத வேதனைகளையும் அவர் அந்தச் சில நிமிடங்களில் என்னோடு சேர்ந்து அனுபவித்தார். அவர் அனுபவித்ததை நான் உணர்ந்தேன். கடைசியில் நான் கண்ணீரை நிறுத்தி விட்டு அவரைப் பார்த்தபோது அவர் என்னுடனேயே வெகு காலம் வாழ்ந்தவராகத் தென்பட்டார். நான் கஷ்டப்பட்டதே பிரமை என்று தோன்றியது.

அவருடைய முகம் கனிவினால் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அன்பு சொட்டும் வதனம் என்று அதைக் கூறும்படியிருந்தது. அந்தச் சில

கால்கேட் குளோரோபில் டூத் பவுடர்

வெளியிடுகிறது

வீரிய குளோரோபிலின் பூரணநன்மைகளை



ஜயண்ட்
சைஸ்
லாபகரம்

வீரியகுளோரோபில்தான் உங்களுக்கு நன்மை தரவல்லது!

வாயில்தோன்றும் துர் நாற்றத்தை ஒழிக்கிறது. அதி துரிதமாக, பூர்த்தியாகச் செயலாற்றுகிறது! வாய்க்கு புதிய நறுமணத்தைத் தருகிறது!

பற்கள் சொத்தையாகாமல் காக்கிறது! சொத்தையாக்கும் காரணம் என பல் டாக்டர்களால் கருதப்படும் தீய அமிலங்களை ஒழிக்கிறது!

ஈறுகளைப்பலப்படுத்துகிறது! உங்கள் ஈறுகளைப்பாதுகாக்க குளோரோபிலின் தீவிர நன்மைகளைத் தருகிறது.

* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.

நிமிடங்களில் எங்களுக்கு ஏற்பட்ட அன்யோன்ய உணர்ச்சியை மரணம் கூடப் பிரிக்க முடியாது. அது ஜன்ம ஜன்மாந்தரங்களுக்குத் தொடர்ந்து வரப் போகிறது. அதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. அதனால் தான் எனக்கு மரணத்தைக் கண்டு கொஞ்சங்கூடப் பயமில்லை.

அவரது களங்கமற்ற கலை பொருந்திய முகத்தைப் பார்த்த பிறகு என் கண்களை அதிலிருந்து அகற்ற முடியவில்லை. அந்த அன்பு பொழியும் கண்களைப் பிரம்மதேவன் அவருக்குச் சந்திரகாந்தக் கற்களினால் செய்து அமைத்திருக்கிறான் போலிருக்கிறது.

என்னையறியாமலேயே நான் சிரித்தேன். அவரும் சிரித்தார். "அது தான் சமர்த்து. என்னுடைய இந்து சமர்த்தாக இருந்தால்தான் எனக்குப் பிடிக்கும். நீ இப்போது சிரிப்பது மழை பெய்து கொண்டே இருக்கும்போது பளீரென்று வெய்யில் அடிக்கிறதே அந்த மாதிரி அழகாக இருக்கிறது" என்றார்.



அவர் 'என் இந்து' என்று குறிப்பிட்டது மறுபடியும் எனக்குத் துயர மளித்தது. 'அவருடைய இந்துவாக இருக்கும் பாக்கியம் இந்த ஜன்மத்தில் எனக்குக் கிடைக்கப் போகிறதா?' என்று எண்ணினேன். ஈசுவரமூர்த்தியின் நினைவு வந்து என்னை ஒரு உலுக்கு உலுக்கியது.

ரங்கதுரை என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"இந்து! உன்னை 'ஸ்வர்ணமுகி' என்று சொன்னேனே, உனக்கு அது நினைவிருக்கிறதா?"

"அதை மறக்க முடியுமா? இலட்சோப இலட்சம் தடவைகளாவது அதை நினைத்துக் கொண்டிருப்பேன்."

"நான் சிறையில் இருந்தபோதெல்லாம், நீ தங்க மாம்பழ நிறச் சேலை உடுத்திக் கொண்டு காலை வெயிலில் என்னை வரவேற்க ஓடி வந்ததும், உன் முகம் தங்கமாக மின்னியதும்தான் அடிக்கடி என் நினைவுக்கு வரும். அந்தக் காட்சியை என் அகக்கண்ணால் எத்தனை தடவைகள் கண்டு களித்திருக்கிறேன், தெரியுமா?

"சில சமயங்களில் உன் சோகமான முகம் தோன்றும். இப்போது உன்னைப் பார்க்கிறேனே, அதே மாதிரி துயரம் தோய்ந்த முகம் கண் முன்னால் வரும். வேதனை தாங்க முடியாது. வேலை ஓடாது. ரொம்பக் கஷ்டமாக இருக்கும். ஆனால் இத்தனை துயரத்திலும் உன் மாசில்லாத அழகு, உன்னுடைய திவ்ய சௌந்தரியம் என்னை வியப்பில் ஆழ்த்தும். கலைந்து விரிந்து கிடக்கும் உன் கூந்தல் மேகமாகவும் உன் கண்களிலிருந்து சிந்தும் கண்ணீர் மழைத் துளிகளாகவும், உன்னுடைய மதி வதனம் அந்த மேகக் கூட்டத்தின் நடுவே அகப்பட்ட சந்திரனைப் போலவும் தோன்றும். எத்தனையோ நாட்களில் சந்திரனைப் பார்க்கும்போது, 'இந்துவும் இப்படித்தான் சந்திரனைப் பார்த்துக்கொண்டிருப்பாள்' என்று எண்ணியிருக்கிறேன். அப்போது இந்துமதி என்ற பெயர் அவளுக்கு எவ்வளவு பொருத்தமானது என்று தோன்றும். உன்னை உடனே பறந்து வந்து பார்க்க மனம் துடிக்கும்."—அவருடைய கவிதை உள்ளத்திலிருந்து பெருகிய வார்த்தைகளை, மழைத் துளியைப் பார்த்து ஏங்கி நிற்கும் சாதக பக்ஷியைப் போல் கேட்டுக் கொண்டிருந்தேன்.

"ஆமாம்! அப்படித் துடித்ததால்தான் உடனே பார்க்க ஓடி வந்து விட்டீர்களாக்கும்?"

"இந்து! நாம் அந்தச் சண்டையை அப்புறம் வைத்துக் கொள்வோம். முக்கியமாக இப்போது இனிமேல் என்ன செய்ய வேண்டுமென்று பேசித் தீர்மானிப்போம்" என்றார்.

"பாலைவனத்திலே பிரயாணம் செய்பவர்கள் பசுஞ் சோலையைக் கண்ட மாதிரி" என்று நான் பல தடவைகள் புத்தகங்களில் படித்திருக்கிறேன். அது எப்படி இருக்கும் என் பதைக் கற்பனை செய்து பார்க்கவும் முயன்றிருக்கிறேன். ஆனால் அன்று ரங்கதுரையைப் பார்த்த போதுதான், அவரிடம் மனம் திறந்து பேசியபோது தான் பாலைவனத்தில் கண்ட சோலை யின் இன்பம் எப்படி இருக்குமென்று என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது.


அன்று அவரிடம் என் நெஞ்சில் இருந்த ஆர்வத்தை அடக்க முடியா மல் கொட்டிய பிறகு சற்றைக்கெல் லாம் என்னுள் பதுங்கி யிருந்த பொறுமை உணர்வு என் நெஞ்சை ஆக்கிரமித்துக் கொண்டது.


மேலும் ஈசுவரமூர்த்தி எங் கிருந்தோ கவனிப்பது போலவும், அவரை நான் சந்திப்பதிலிருந்து ஏதோ விபரீதம் நிகழும் என்று பயமும் உண் டாயிற்று. அவரை எப்படியாவது அனுப்பிவிட வேண்டுமென்று எனக் குத் தோன்றியது. அதற்காகக் கடுமை யாகப் பேசவும் மனம் வரவில்லை.

"உங்களுக்கு மறுபடியும் என்னைப் பார்க்க வேண்டுமென்று தோன்றவே தோன்றாது என்று நினைத்துக் கொண் டிருந்தேன்" என்றேன்.

"உண்மைதான், இந்து! அன்று நீ அப்படிப் பேசி என்னை விரட்டிய பிறகு எனக்கு உன்மீது ரொம்பக் கோபமாக இருந்தது. பெண் இனத் தின் மீதே அவநம்பிக்கையும், வெறுப் பும் ஏற்பட்டன. ஆனால் நீ நடித் திருக்கும் 'இதய வீணை' படத் தைப் பார்த்த பிறகு என் மனோ பாவம் அடியோடு மாறிப் போயிற்று. குங்குமத்துறையின் அழகிய இயற்கை வனப்புகளுக்கு மத்தியில் நாம் சந்தித் ததை நீ மிக அழகாகச் சித்திரித்திருக் கிறாய். குங்குமத்துறையில் நாம் சந் தித்த அதே இடங்களில் படம் எடுக்

ஹாஸ்யக் களஞ்சியம்







கப் பட்டிருக்கிறது. மரத்தில் நான் உட்கார்ந்திருந்த இடம்கூட ஒன்றாக இருப்பதைக் கண்டபோது நீ எவ்வளவு தூரம் அவைகளை நினைவு வைத்துக் கொண்டு மனத்தில் போற்றி வருகிறாய் என்று தெரிந்தது. நான் இருக்க வேண்டிய இடத்தில் இன்னொருவன் வந்து உட்கார்ந்திருப்பதைக் கண்டு ஆத்திரம்கூட ஏற்பட்டது. ஆயினும் உன் உள்ளம், நீ என்னை மறக்கவில்லை என்னும் விஷயம் எனக்குத் தெரிந்து விட்டது. எப்படியோ அந்தப் படத்தில் நீ உன் உண்மையான இதய தாபங்களைக் கொட்டி யிருக்கிறாய். அது என் இதயத்தில் கலந்துவிட்டது. மறுநாள் காலை ராஜாராமைக் கூப்பிட்டு அனுப்பினேன். அவரிடம் நான் விசாரித்த உடனேயே உன் மன நிலையை எனக்குத் தெளிவாக எடுத்துச் சொன்னார். இந்து! நீ ஏன் அப்படி அன்று என்னிடம் பேசினாய்? உன்னைப் பார்க்க எத்தனை ஆவலுடன் வந்தேன்! உண்மையில் நீ இவ்வளவு ஆவலுடன், இத்தனை அன்புடன் காத்திருக்கும்போது உன்னால் எப்படி அன்று அவ்வாறு பேச முடிந்தது? நடித்துப் பழக்கமாகி விட்டதுபோ லிருக்கிறது" என்று கூறிச் சிரித்தார்.

எனக்கு ஏனோ மறுபடியும் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.


"ஆமாம்! நான்தான் நடிக்கிறவள். நீங்கள் ஏன் பெயரை மாற்றி வைத்துக் கொண்டு நாடகம் போடுகிறீர்கள்?" என்றேன்.

ரங்கதுரை பலமாகச் சிரித்தார்.

"நான் சிறையிலிருந்தபோது எல்லாரும் என்னை அப்படி அழைத்தார்கள், இந்து. ரங்கதுரை என்னும் பெயர் ரொம்ப நீளமாக இருக்கிறதென்று சிலருக்குத் தோன்றி விட்டது. பிறகு வங்காளத்தில் நான் வேலை ஏற்றேன். அதனால் 'ராய்' என்னும் பெயர் நிலைத்து விட்டது. வங்காளிகள்







ரொம்ப சுய அபிமானிகள். ஆர். டி. ராய் என்பது வங்காளப் பெயர் மாதிரியே இருப்பதால் என்னை அங்கு ரொம்ப மதித்தார்கள். பலர் நான் வங்காளி என்றே நினைத்தார்கள். அதெல்லாம் ஒரு பெரிய கதை. பிறகு விவரமாகச் சொல்லுகிறேன். நீ உன்னைப் பற்றிச் சொல்லு, இந்து! நான் சீமை சென்ற பிறகு இங்கு நடந்ததை யெல்லாம் விடாமல் சொல்லு. ராஜாராம் சிலவற்றை எனக்குச் சொன்னார். இருந்தாலும் நீ சொல்லு."

"உங்களிடம் எத்தனையோ விஷயங்கள் சொல்ல வேண்டும். பல முக்கியமான விஷயங்கள் சொல்ல வேண்டும். ஆனால் சொல்லவும் தயக்கமாக இருக்கிறது. உங்களைப் பிரிந்த பிறகு நான் அனுபவித்த துன்பங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. எல்லாவற்றையும் இப்போதே சொல்வது இயலாத காரியம். நீங்கள் குங்குமத் துறையிலிருந்து புறப்பட்ட தினத்தன்று நிகழ்ந்த ஒரு விபரீத சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கிறதா?"

ரங்கதுரை ஒரு கணம் யோசித்தார். "ஆமாம்! சொக்கையா விஷயம். தங்கபாண்டியனும், நானும் ஜமீன் அதிகாரம் தங்கபாண்டியன் கைக்கு வருவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தபடியால் எங்களை யாராவது ஏதேனும் சொல்லப் போகிறார்களே என்றுகூடக் கவலைப்பட்டோம். அதற்கு என்ன இப்பொழுது?" என்று ரங்கதுரை கேட்டார்.

"நான் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். பிறகு வாய்ப்பு நேருமோ நேராதோ?......"

"ஏன் இந்து அப்படிச் சொல்கிறாய்? இனிமேல் உன்னை நான் இப்படித் தனியாக விடப் போவதில்லை. உன்னை என்னுடனேயே இருக்கச் செய்ய மிக சீக்கிரம் வழி செய்யப் போகிறேன்."

"சற்றுப் பொறுங்கள். எவ்வளவுதான் நாம் விரும்பினாலும் உங்கள் மனைவியாக வாழும் பாக்கியம் எனக்குக் கிடைக்காதென்று தோன்றிக் கொண்டே இருக்கிறது. அப்படித் தோன்றும் போதெல்லாம் சகிக்க முடியாத வேதனை ஏற்படுகிறது."

"இந்துமதி! நீ அனாவசியமாக இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டு வேதனைப் படுகிறாய். நீ என் மனைவியாகத்தான் போகிறாய். உனக்கு ஒரு கஷ்டமும் நேராமல் பாதுகாப்பதையே நான் விரதமாக வைத்துக் கொள்ளப் போகிறேன்."

"அந்தமாதிரி நடக்க வேண்டும் என்று எனக்கும் ரொம்ப ஆசையாகத்தான் இருக்கிறது. சின்னஞ் சிறு குழந்தை எப்படித் தன் தாயாரிடம் சகல பொறுப்புக்களையும் விட்டு விட்டுக் கவலையே இல்லாமல், உற்சாகமாக விளையாடுகிறதோ அந்த மாதிரி என்னை உங்கள் கையில் ஒப்படைத்து விட்டு என்னைப் பற்றிய கவலையே இல்லாமல் நிம்மதியாக இருக்க வேண்டு மென்று உள்ளம் துடிக்கிறது."

"அதை இந்தக் கணத்திலேயே செய்யலாமே?" என்றார் ரங்கதுரை குறும்புப் புன்னகையுடன்.

எனக்கும் சிரிப்பு வந்தது. "அப்பாடா! உன் முகத்தில் மறுபடியும் சிரிப்பையே பார்க்க முடியாதோ என்று கவலைப்பட்டேன். இப்போது தான் என் மனம் குளிர்ந்தது" என்றார்.

"நீங்கள் இப்படிப் பேசுவதைக் கேட்டு என் மனமும் குளிரத்தான் செய்கிறது. ஆனால் இது நிலைக்குமா?"


"ஏன் இந்து மறுபடியும் இப்படிப் பேசுகிறாய்? என் பேச்சில் உனக்கு நம்பிக்கை இல்லையா? உன்னை இத்தனை வருஷங்களில் ஒரு நிமிஷம் கூட நான் மறக்கவில்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்? அப்போது நீ சின்னஞ் சிறு உலகமறியாத சிறுமியாக இருந்தாய். இப்போது உன்னுடைய அழகு பூரணமாக மலர்ந்திருக்கிறது. ஆனால் வெப்பத்தினால் சற்று வாடிப் போயிருக்கிறது. மறுபடியும் இந்த மலரைக் குளிர்ந்த பிரதேசத்தில் வைத்து, வாடாமல் காத்து, அதன் அழகைப் பருகுவதுதான் இனிமேல் எனக்கு வேலை."

அவருடைய குரலில் தொனித்த உண்மையான அன்பு என்னைப் பெருமிதம் கொள்ளச் செய்தது. ஆனால் அன்றுதான் நாங்கள் கடைசியாக மனம் விட்டுப் பேசிக் கொள்ளும் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது என்பதும், அதன் பிறகு அவரை நான் சிறைக் கம்பிகளுக்கு நடுவில் பார்த்துத்தான் பேசுவேன் என்பதும் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. (தொடரும்)

வஸந்தத்தின் புத்துணர்ச்சி

உங்களுக்கு இன்றும்....என்றும்!

காஷ்மீர்பொக்கே டால்கம் பௌடர் சுத்த மனோரம்மியமே! மிக்க மிருதுவாக உங்கள் உடலில் வஸந்தநாள் காலையின் புத்துணர்ச்சியை அள்ளித் தெளிக்கிறது- உடலை ரம்மியமணத்துடனும் குளிர்ச்சியுடனும் மணிக்கணக்காக வைத்திருக்கிறது. அதிகப்படி ஈரத்தை உறிஞ்சுகிறது ... அரிப்பையும் எரிச்சலையும் தவிர்க்கிறது ... உங்கள் வசீகரத்தையும் மென்மையையும் பன்மடங்காக்குகிறது.





காஷ்மீர் பொக்கே

டால்கம் பௌடர்

ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்

ஒரு கால்கேட்—பாமாலிவ் தயாரிப்பு

கால்கேட் 1806 முதல் தரத்துக்குப் பெயர் போனது



'கோலினஸ்' உங்கள் பற்களை சுத்தம் செய்வது தவிர, மேற்கொண்டும் உதவுகிறது!

இப்பொழுதே இந்த நூதன டூத்பேஸ்டை நீங்கள் உபயோகிக்கத் தொடங்குவது நலம்

ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த 'கோலினாஸ்' பற்களை சுத்தமாக்குவதுடன் நிற்பதில்லை! இந்நூதன டூத்பேஸ்ட் பல் சிதைவுக்குக் காரணமான கிருமிகளை ஒழித்து, ஈறுகளை உறுதியாக்கி, உங்கள் சுவாஸத்தை மணிக்கணக்கில் புதுமணம் கமழ வைத்திருக்கிறது.

இதன் ரகசியம் அற்புதமான 'கோலினாஸ்' நுரைதான். அது ஆக்டிவ் க்ளோரோபிலை வாயில் பிரஷ் நுழைய முடியாத மூலை முடுக்குகளுக்கும் எடுத்துச் சென்று, உங்களுக்கு மிகுந்த அனுகூலம் தருகிறது.

அதிசயமான சிக்கனம்!

ஈரமில்லாத பிரஷ்ஷில் அரையங்குல அளவே தேவை. எனவே ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த 'கோலினாஸ்' உபயோகிப்பது உங்களுக்கு எவ்வளவு லாபகரம் பாருங்கள்! இன்றே ஒரு பெரிய டியூப் வாங்கவும்.



உடலும் உள்ளமும்



விஷ்ணு பிரபாகர்

ஹிந்திக் கதை :: மொழிபெயர்ப்பு : ஜெயமணி

2

ராஷ்மி சொல்லுகிறாள் :

அன்று நான் பிரதீப்பினிடம் விடை பெற்று, வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோதுதான் எனது அவல நிலையை உணரலானேன். காதல் பிரமையாகிற சேற்றில் நான் எவ்வளவு அமுழ்ந்துவிட்டேன் என்பது அப்போதுதான் எனக்குத் தெரிய வந்தது. நான் என் கணவரைக் காதலிப்பதாகப் பிரதீப்பினிடம் கூறியது எத்தகைய போலிக் காதல்!

என்னைக் காட்டிலும் என் கணவர் யோக்கியமானவர் என்பதில் சந்தேகமில்லை. அவர் கபடமற்றவர்; அதிகமாகப் பேசமாட்டார்; மனத்தில் ஒன்றும் வாயில் ஒன்றும் வைத்துக் கொண்டு பாசாங்கு செய்ய அவருக்குத் தெரியாது.

தம்மைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தி அவர் எனக்கு எழுதிய கடிதங்கள் இன்னும் என் ஞாபகத்தில் இருக்கின்றன.

அந்த நாட்களில் கூட அவர் அதிகமாகப் பேசமாட்டார். கல்யாணம் நடந்த பிறகு கூட அவர் சிலரைப் போல் 'வளவள' வென்று கத்துவதில்லை. அது அவருடைய இயற்கை சுபாவம். ஒருவர் அதிகமாகப் பேசுவதில்லை என்பதற்காக அவர் உள்ளத்தில் அன்பு இல்லை என்று சொல்லிவிட முடியுமா?

அவருடைய மன நிலையை நான் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்தான். அது போலவே அவர் என்னுடைய மன நிலையையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் அல்லவா?

நாம் எல்லோருமே கண்களால் பார்க்கிறோம்; காதுகளால் கேட்கிறோம். ஆனால் ஒருவரை யொருவர் பரஸ்பரம் நன்கு அறிந்து கொள்ள வேண்டுமாயின் இருவருக்கும் ஹிருதயம் இருக்கவேண்டும்.

இப்போது நிகழ்ந்த சம்பவத்துக்கு நான் எப்படி அவர்மீது குறை சொல்ல முடியும்? என்மீது அவருக்கு மிகுந்த மதிப்பு உண்டு என்பது எனக்குத் தெரியும். என்னை அவர் அவரது குழந்தைகளுக்குத் தாயாகச் செய்துள்ளார். எனினும், என்னை அவர் தமது இச்சையை நிறைவேற்றுவதற்குரிய கருவியாக ஒரு காலத்திலும் கருதியதில்லை.

அவர் என்னை அவரது வீட்டின் எஜமானியாகச் செய்துள்ளார். அவர் தமது இஷ்டப்படி எப்போதாவது தான் வீட்டுக்கு வருகிறார். என்மீது அவர் பூரண நம்பிக்கை வைத்துள்ளார். எனினும் வெறும் நம்பிக்கையினால் மாத்திரம் ஒரு பெண்ணைத் திருப்திசெய்துவிட முடியுமா?

நான் இவ்விதமெல்லாம் சிந்தித்துக் கொண்டே வீடு வந்து சேர்ந்தேன். அப்போது என் கணவர் வராந்தாவில் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தார். நான் மாடியில் ஏறுவதற்காகப் படியில் கால் வைத்தபோது, "ராஷ்மி" என்று ஆத்திரத்துடன் என்னைக் கூப்பிட்டார்.

"ஏன்?" என்று கேட்டுவிட்டுப் படியிலேயே நின்றேன்.

"நீ வெளியே உலாவுவதற்குச் சென்றாயா?"

"ஆமாம்!"

"பிரதீப்புடன் தானே?"

"ஆமாம்!"

"அவனை எங்கே விட்டுவிட்டு வந்தாய்?"

"அவர் அவருடைய வீட்டுக்குச் சென்றுவிட்டார்."

"நீயும் அவருடன் செல்லவில்லையா?"

"நான் என் வீட்டுக்கு வந்திருக்கிறேன்."

"இது உன் வீடா?"

"ஆமாம்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினேன்.

அவ்வளவுதான்! அவருக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

"என் எதிரில் நில்லாதே. நீ எங்கேயாவது தொலைந்து போ. இது இனி உன் வீடு அல்ல" என்றார்.

நான் அதற்குமேல் அவருடன் பேசவில்லை. மௌனமாக உள்ளே சென்றேன். நான் உள்ளே செல்லாமல் தடுப்பதற்காக

அவர் ஓடி வந்தார். ஆனால் அதற்குள் நான் உள்ளே போய் விட்டேன்.

உள்ளே சென்றவள் அவரைத் திரும்பிப் பார்த்தேன்.

"நீங்களும் உள்ளே வாருங்கள். நாழியாகிவிட்டது" என்றேன் படபடப்பு எதுவுமின்றி நிதானமாக.

"இந்த வீட்டை விட்டு வெளியேறு" என்று மறுபடியும் உரக்கக் கத்தினார்.

"நான் எங்கே போக வேண்டும் என்று சொல்லுகிறீர்கள்?"

"எங்கே வேண்டுமாயினும் போ. பிரதீப் வீட்டுக்குப் போ."

"நான் ஒரு காலத்திலும் அவர் வீட்டுக்குப் போக மாட்டேன்."

"பொய் சொல்லாதே, நீதான் அடிக்கடி அவன் வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறாயே?"

"நான் பொய் சொல்லவில்லை. நான் அவரை அடிக்கடி சந்தித்தது உண்மைதான். ஆனால், அது தவறு என்பதை இப்போதுதான் உணர்ந்து கொண்டேன். இனி நான் அவரைச் சந்திப்பதற்குப் போகவே மாட்டேன்."

"ஓஹோ! போக மாட்டாயா?"

"போக மாட்டேன். இது நிச்சயம். நீங்கள் என் வார்த்தையை நம்பவில்லையா?"

"இல்லை!"

"நீங்கள் நம்பாததில் ஆச்சரியம் இல்லை. நீங்கள் இதற்கு முன் எப்போதாவது என்னை நம்பியிருந்தால் அல்லவா இப்போது நம்புவதற்கு?"

"நான் உன்னை நம்பியதே இல்லையா?"

"சந்தேக புத்தியும் அருவைக் குணமும் உள்ளவர்கள் ஒருபோதும் யாரையும் நம்ப மாட்டார்கள்."

இவ்விதம் நான் கூறியது அவரது ஹிருதயத்தில் தைத்திருக்க வேண்டும். உடனே அவர் மறுபடியும் "ராஷ்மி" என்று ஆத்திரத்துடன் கத்தினார். அதற்குமேல் எதுவும் கூறாமல் வேகமாக வெளியே செல்லத் தொடங்கினார்.

இதைக் கண்டதும் பயத்தினால் என் தேகம் நடுங்கியது. அவர் எங்கு போவாரோ, என்ன செய்வாரோ?

நானும் அவரைப் பின் தொடர்ந்து ஓடினேன்.

"நீங்கள் எங்கே செல்லுகிறீர்கள்?" என்று கெஞ்சும் குரலில் கேட்டேன்.

அவர் பதில் எதுவும் கூறாமல் மௌனமாகச் சென்று கொண்டிருந்தார்.

"அப்படியானால் நானும் உங்களுடன் வருகிறேன்" என்று கத்திக் கொண்டே அவரை மேலும் பின் தொடர்ந்து அவர் பக்கத்தில் சென்றேன்.



அப்போது கூட அவருக்குக் கோபம் தணியவில்லை.

எனினும் நான் வெகு நேரம் கெஞ்சிய பிறகு அவர் வீட்டுக்குத் திரும்பி வந்தார். தமது அறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டார். அன்று அவர் எதுவும் சாப்பிடவில்லை. அவரைப் போலவே நானும் பட்டினி கிடந்தேன்.

இவ்விதமே நாலு நாட்கள் சென்றன. அவர் என்னுடன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. என்னை ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை.

அதன் பிறகு எங்கள் குடும்பத்தில் நிகழ்ந்த ஒரு சிறு சம்பவம், குழந்தைகளைப் பற்றிய சம்பவம் எங்கள் இருவரையும் மீண்டும் சேர்த்து வைத்தது.

* * *

அவர் ஆபீஸிலிருந்து திரும்பி வரும்போதெல்லாம் நான் ஏதாவது வாசித்துக் கொண்டிருப்பேன். ஒரு நாள் அவர் என் அருகில் வந்து, நான் என்ன புத்தகம் வாசிக்கிறேன் என்பதைப் பார்த்தார்.

நான் பிரதீப் எழுதிய ஒரு நாவலை வாசித்துக் கொண்டிருந்தேன்.

"ஓகோ! பிரதீப் எழுதிய நாவலா?" என்று குத்தலாகக் கேட்டார்.

"ஆமாம், இது ஒரு பெண்ணின் ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நாவல்" என்றேன்.

"அந்தப் பெண் நீயாகத்தான் இருக்க வேண்டும். அவன் வேறு யாரைப் பற்றி எழுதப் போகிறான்!"

அவர் கூறிய இந்த வார்த்தைகளில் ஏளனமும், குறும்பும், கோபமும் தாண்டவமாடின.

அதைக் கேட்ட உடனே நான் வெறி பிடித்தவள் போல் ஆனேன்.

"ஆமாம். நீங்கள் சொன்னது முற்றிலும் சரி. பிரதீப் எழுதும் ஒவ்வொரு வரியிலும் நான் பிரதிபலிக்கிறேன்...... அவரது நூலில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு வர்ணனையும், ஒவ்வோர் உணர்ச்சியும் என் மனத்தைக் கவர்கின்றன......"

இப்படியே நான் உணர்ச்சி ததும்ப எவ்வளவு நேரம் அடுக்கிக் கொண்டு போனேனோ, எனக்கே தெரியாது.

அவர் தமது காலால் ஓங்கிக் கதவை உதைத்த போதுதான் எனக்குப் பிரக்ஞை வந்தது.

அவர் பல்லைக் கடித்துக் கொண்டார். சுவரில் தலையை மோதிக் கொண்டார்.

"நீ என்னை விரும்பவில்லை; என்மீது உனக்கு அன்பு இல்லை; என்னை நீ காதலிக்கவில்லை" என்று கத்தினார்.

"நீங்கள் உங்களை ஏன் இப்படிக் கஷ்டப் படுத்திக் கொள்கிறீர்கள்? மனத்தை அலட்டிக் கொள்ளாதீர்கள். அமைதியாக இருங்கள். சிறிது நேரம் கழித்து நாம் நிதானமாகப் பேசிக் கொள்ளலாம்."

இவ்விதம் கூறிவிட்டு நான் அறைக்கு வெளியே வந்தபோது, அங்கு சோகமே உருவாக பிரதீப் நின்றுகொண்டிருந்தார்.


"யார், நீங்களா?" என்றேன்.

"ஆம், இன்று நான் இந்த ஊரை விட்டுச் செல்லுகிறேன்" என்று கூறினார்.

பிறகு அவர் என் பதிலுக்குக் காத்திராமல் 'விர்' என்று சென்று விட்டார். ஓடிச்சென்று அவர் போய்விடாமல் தடுக்க வேண்டும் போலிருந்தது எனக்கு.

ஆனால், நான் செயலற்று நின்று விட்டேன். பிரதீப் கண்களுக்கு மறையும் வரையில் அவரையே பார்த்துக் கொண்டு நின்றேன்.

நான் மறுபடியும் என் கணவர் இருந்த அறைக்குச் சென்றபோது, அவர் கையில் ஒரு கடிதத்தை வைத்துக்கொண்டிருந்தார்.



போஜனத்தை நீங்கள் விரும்பிச் சாப்பிட முடிகிறதா?

ஆரோக்யமாகவுள்ள மக்கள் அனைவரும் நல்லுணவை விரும்பிச்சாப்பிடுவது சகஜம். ஆனால் சிற்சில சமயங்களில் அஜீரணமும், குமட்டலும் சேர்ந்து நம் பசியை கெடுத்து விடுகின்றன. அம்மாதிரி சமயத்தில் தான் ஒரு டோஸ் மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் சாப்பிடவேண்டும்! உடலில் கோளாறு இருந்தால் இயற்கையே இம்மாதிரி சின்னங்களின் மூலம் எச்சரிக்கை விடுகின்றது. அதை அசட்டை செய்யக்கூடாது. ஒரே டோஸ் மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் எவ்வித தொந்தரவுமின்றி சுலபமாக குணப்படுத்தும்.



MSY 12 TAM

ஒரே டோஸ் உடனடி நிவாரணம் தரும்!

மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர், வயிற்று வலிகள், புளித்தேப்பம், இருதய எரிச்சல், வயிற்றுப்புளிப்பு, குமட்டல் முதலிய நோய்களை உடனே கண்டிக்கும். ஆனால் அசல் சரக்கைக் கவனித்து வாங்குங்கள். அதில் கீழ்க் குறித்த கையெழுத்து அச்சிடப்பட்டிருக்கும்.

விலை
ரூ. 2/7
(உள்ளூர் வரிகள் பிரத்யேகம்)

மக்ளீன்

பிராண்ட் ஸ்டமக் பௌடர்

சிறிய பாக்கெட்டுகள் மற்றும் குடும்ப சைஸ் ஜாடிகளிலும் கிடைக்கும்
(விலை ரூ. 1/4 & ரூ. 5/11; உள்ளூர் வரிகள் பிரத்யேகம்)

"பிரதீப் இங்கு வந்திருந்தாரே, உனக்குத் தெரியுமா? அவர் கொடுத்து விட்டுப் போன கடிதம்தான் இது" என்று கூறி, கடிதத்தை என்னிடம் கொடுத்தார்.

"அன்பார்ந்த நண்பருக்கு,

உங்களுடைய குடும்ப வாழ்க்கையில் அமைதியே இராமல் போனதற்கு நான்தான் காரணம். அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். ஆனால், நான் கூறுவதை நம்புங்கள். இத்தகைய நிலைமைக்கு நானோ, ராஷ்மியோ பொறுப்பாளியல்ல.

நான் அவள் நட்பையோ அவள் என் நட்பையோ விரும்பவில்லை. ஆனால் எவருடைய கைக்கும் கருத்துக்கும் அகப்படாத விதியைத்தான் இதற்குக் காரணமாகக் கூற வேண்டும்.

நான் நாளை இந்த ஊரை விட்டுச் செல்லுகிறேன் என்று சொல்லி விட்டுப் போவதற்கே இங்கு வந்தேன். ஆனால், உங்களுக்குள் சச்சரவு நடந்த காட்சியை நான் கண்டபோது, உங்களிடம் நேரில் விடைபெற்றுக் கொள்ளும் துணிவு எனக்கு ஏற்படவில்லை. சென்று வருகிறேன். பிரதீப்"

இதைப் படித்தபின் நானோ, அவரோ ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

பிரதீப் சென்று விட்டார் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. அவர் திரும்பி வந்துவிடுவார் என்றே என் மனம் எண்ணியது. நான் எங்கு சென்றாலும், அவரது குரல் என் செவிகளில் கேட்டுக் கொண்டிருந்தது; அவரது அமைதியான முகம் என் எதிரில் நின்று கொண்டிருந்தது; அவர் என்னைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது. அவர் எப்போதும் என் அருகில் இருப்பது போல் எனக்குத் தோன்றியதால், அவரது பிரிவைக் கண்டு நான் சோகம் அடையவில்லை!

பிரதீப் ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லுவதும், அங்கு டிக்கட் வாங்குவதும், அவர் என்னிடம் விடைபெற்றுக் கொள்வதும் என் மனக்கண் முன் தோன்றின.

அவர் ரயில் வண்டியில் ஏறி உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையில் லயித்து விட்டது என் அகக் கண்ணுக்குப் புலப்பட்டது.

அப்போது அவர் என்னைப் பற்றிய சிந்தனையில்தான் ஆழ்ந்திருக்க வேண்டும்.

இவ்வித யோசனையில் நான் லயித்திருந்தபோது, என் கணவர் ஓடோடியும் வீட்டுக்குள் வந்தார்.

"ராஷ்மி! நாம் ஸ்டேஷனுக்குச் செல்ல வேண்டும்" என்றார்.

இதைக் கேட்டதுமே எனக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

"எதற்காக?" என்று கேட்டேன்.



ஆவணி மூல முத்தமிழ் விழாவில் தருமபுர ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தலைவர் டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார் எம். ஏ., பி. எச்டி. அவர்களுக்கு ஆகஸ்டு 28ந் தேதி 'செந்தமிழ்க் காவலர்' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கினார்கள்.

"பிரதீப்புக்கு, நாம் விடை கொடுத்து அனுப்ப வேண்டாமா?"

"நான் ஸ்டேஷனுக்கு வரவில்லை."

"ராஷ்மி, நீ அவசியம் வந்துதான் தீர வேண்டும்."

"முடியாது, முடியவே முடியாது."

இதைக் கேட்டதும் அவருக்கு மறுபடியும் ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

"உனக்கு வருவதில் இஷ்டம்தான். ஆனால், நான் கூப்பிடுகிறேன் என்பதற்காகவே நீ வர மறுக்கிறாய்."

இவ்விதம் சொல்லி விட்டு அவர் வெளியே போய் விட்டார். நான் அவருடன் சென்றிருந்தால், இடைவிடாமல் குறும்புத் தனமாகவும் ஏளனமாகவும் பேசி என்னை அவர் சித்திரவதைக்கு உள்ளாக்கி யிருப்பார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

எனினும், நான் ஏன் அவரைக் குறை கூற வேண்டும்? உண்மையான குற்றவாளி நான் அல்லவா? நான் பிரதீப்பின் மீது காதல் கொண்டது தவறு அல்லவா? நான் அடிக்கடி பிரதீப்பை நாடிச் சென்றது பெரும் குற்றம் அல்லவா?

எனினும், பிரதீப்பைப் பரம விரோதியாகக் கருத வேண்டிய என் கணவர் அவரை வழியனுப்புவதற்காக ஏன் ஸ்டேஷனுக்குச் செல்ல வேண்டும்? ஒரு வேளை

தம் விரோதி தொலைந்தானே என்ற மகிழ்ச்சி காரணமாக இருக்கலாம்!

ஆனால், அவர் மகிழ்ச்சியடைவதற்குக் காரணமே இல்லை. ஏனெனில், பிரதீப் எனக்கு அருகில் இருந்தாலும் வெகு தொலைவில் இருந்தாலும் எனக்கு ஒன்று தான்!

ஏனெனில், என் உடல்தான் என் கணவருக்குச் சொந்தமே தவிர, என் உள்ளம் தான் பிரதீப்புக்குச்சொந்தமாகிவிட்டதே!

உள்ளம் ஒன்றிவிட்ட போது, சமீபம் என்றும் தூரம் என்றும் ஒன்று உண்டா?

* * *

பிரதீப் புறப்பட்டுச் சென்று பல நாட்கள் ஆகிவிட்டன. நான் பிரதீப்பை அறவே மறந்துவிட்டேன் என்று என் கணவர் எண்ணி, சந்தோஷமாக இருந்தார்.

ஒரு நாள் அவர் ஆபீசிலிருந்து திரும்பி வந்ததும், "ராஷ்மி, நீ கேள்விப்பட்டாயா? பிரதீப்புக்குக் கல்யாணமாகி விட்டது!" என்றார்.

"உண்மையாகவா?"

"ஆமாம். அவன் ஒரு மனிதனா? அவனுடைய கல்யாணத்துக்கு நமக்கு அழைப்புக் கடிதம் கூட அனுப்பவில்லை, பார்!"

இதற்கு நான் பதில் எதுவும் கூறவில்லை.

அதன் பிறகு ஆபீஸ் அலுவலாகச் சில நாட்கள் வரையில் வெளியூருக்குச் சென்றிருந்த என் கணவர் கடுமையான ஜுரத்துடன் திரும்பி வந்தார். எனவே, அவர் பல நாட்கள் வரையில் படுத்த படுக்கையாக இருக்க நேர்ந்தது.

அப்போது எங்கள் வீடு ஒரு சிறிய ஆஸ்பத்திரியாகவே மாறிவிட்டது. தினந்தோறும் டாக்டர் வந்துவிட்டுப் போனார். இரவும் பகலும் நான் அவருக்குக் குறித்த நேரப்படி மருந்தும், உணவும் கொடுக்க வேண்டியிருந்தது. நான் சிறிதும் அலுத்துக் கொள்ளாமல் அவருக்குப் பணிவிடை செய்து வந்தேன்.

அவரது நிலைமை சிறிது சிறிதாக அபிவிருத்தி அடையத் தொடங்கியது.

ஒரு நாள் அவர் என் கையை அன்புடன் பிடித்துக் கொண்டு, "ராஷ்மி, நீ இவ்வளவு நல்லவள் என்பதை நான் இப்போதுதான் தெரிந்து கொண்டேன்" என்று நாத் தழுதழுக்கச் சொன்னார்.

"நான் நல்லவள் அல்ல. உங்களுடைய நல்ல குணமே என்னையும் நல்லவளாகச் செய்து வருகிறது."

"ராஷ்மி, நான் நல்ல குணம் படைத்தவனல்ல. நான் உன்னை நன்கு புரிந்து கொள்ளாமல், உனக்கு எத்தனையோ கொடுமைகள் இழைத்திருக்கிறேன்."

"போதும், போதும். நீங்கள் சிறிது நேரம் தூங்குங்கள். உடம்பு சரியாகி விடும்" என்று பேச்சைமாற்றமுயன்றேன்.

"என் உடம்புக்கு ஒன்றுமில்லை. என் மனத்தில் உள்ளதை நான் கூறியாக வேண்டும். பிரதீப் காரணமாக நான் உன் மனத்துக்கு எவ்வளவு வேதனையை உண்டு பண்ணினேன். நான் செய்த கொடுமைக்குப் பிராயச் சித்தம் என்னவெனில், நீ மறுபடியும் பிரதீப்பைச் சந்திக்க வேண்டும். அவன் எழுதியுள்ள நூல்களை வாசிக்க வேண்டும். அவனுக்கு நீ இங்கு வரும்படி அழைப்பு அனுப்ப வேண்டும். எனக்கு உன் மீது பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது" என்று உணர்ச்சி ததும்பச் சொன்னார்.

அவர் கண்களில் நீர் ததும்பியது.

அவருக்கு நான் இரவு பகலாகப் பணிவிடை செய்தது அவரது மனத்தை மாற்றி விட்டது. என் மீது வீணாகத் தப்பெண்ணம் கொண்டதாகவும், என் மனம் பரிசுத்தமானது என்றும் அவர் எண்ணுகிறார்.

ஆனால், என் உள்ளம் பரிசுத்தமானதா? நான் பிரதீப்பை முற்றிலும் மறந்து விட்டேனா?

கடவுள் கிருபையால் என் கணவருக்கு ஜுரம் நின்று உடம்பு குணமாகியது. ஆனால் பல நாட்கள் தூக்கமின்றி நான் அவரைக் கவனித்துக் கொண்டு வந்ததால், என் உடம்பு துரும்பாக இளைத்ததுடன், நான் படுத்த படுக்கையாகி விட்டேன்.

டாக்டர்கள் எனக்குச் சிகிச்சை செய்தனர். என் கணவர் நான் பிழைத்து எழுந்திருக்க வேண்டும் என்று எவ்வளவோ கஷ்டப்பட்டார்.

ஆனால், இன்று காலை டாக்டர் அவரை அப்பால் அழைத்துச் சென்று இரகசியமாக அவருடைய காதில் ஏதோ சொன்னார். அவர் என்ன சொல்லி யிருப்பார் என்பது எனக்குத் தெரியாதா?

என் கணவர் என் அருகில் வந்ததும் என் இரு குழந்தைகளையும் அழைத்து அவர் கையில் ஒப்புவித்தேன். அவர் குழந்தையைப் போல் விம்மி விம்மி அழுதார். அதைக் கண்டு குழந்தைகளும் அழத் தொடங்கினர்கள்.

"குழந்தைகளைச் சமாதானம் செய்து, அவர்களைப் பாதுகாக்க வேண்டிய நீங்களே இப்படிக் குழந்தையைப் போல் அழுதால் என்ன செய்வது?" என்றேன்.

அவரது அன்புக்கு நான் தகுந்த பாத்திரமானவளா என்ற சந்தேகம் என் மனத்தை அல்லல்படுத்தியது.

போதும்! இதற்கு மேல் என்னால் எதுவும் எழுத முடியவில்லை......

(இந்தக் கதையின் இறுதிப் பகுதி அடுத்த இதழில் வெளியாகும்)

பதவி உயர்ந்தது



பி.வி.ஆர்

அந்தரங்கக் காரியதரிசி, ராஜவேலுவிடம் இரகசியமாக விஷயத்தைக் கூறியபோது அவன் ஒரு கணம் திடுக்கிட்டான். தன் காதுகளையே அவனால் நம்ப முடியவில்லை,

"இருக்காது, கோபால்!" என்றான்.

"என்ன, என்னிடம் இப்போதுதான் சொன்னார்! சீமைக்கு அடுத்த வாரம் கப்பல் ஏறப் போகிறார். அதற்குள் இந்தக் கிளைக் காரியாலயத்தைப் பார்த்து விட்டு உன்னையும்......"

மேலே அவன் பேசுவதற்குள் ராஜவேலு இடை மறித்தான். "இந்த ஆபீஸ் பூராவும் என்னை வெறுக்கும்!" என்றான்.

"அதைப்பற்றி நீ ஏன் கவலைப்படவேணும்!"

கோபால் போன பிறகு தன் கையைப் பார்த்துக் கொள்ளத் தோன்றியது. அடுத்த கணம் அவனையுமறியாமல் தலை குனிந்தது. 'இந்த ஒரு கையினால்தானே எனக்கு இந்தப் பதவி—மானேஜர் உத்தியோகம் கிடைக்கப்போகிறது!' என்று நினைத்தபோதே உள்ளத்தில் மகிழ்ச்சிக்குப் பதிலாக என்றுமறியாத அங்கலாய்ப்பும் விசனமும் உண்டாயின.

தலைமை குப்பிரண்டைப் பார்த்தான். இன்னும் ஐந்து வருஷங்கள்தான் அவர் இருக்கப் போகிறார். முப்பது வருஷங்களாக உழைத்த உழைப்பின் ரேகைகள் முகத்தில் பதிந்திருந்தன. என்றைக்காவது ஒரு நாள் தமக்கு இந்த மானேஜர் உத்தியோகம் கிடைக்காதா என்ற ஏக்கத்துடனேயே காரியாலயத்துக்கு வருகிறவர். முப்பத்தைந்து வயதுகூட ஆகாதவனுக்கு அந்த வேலை ஆகப்போகிறது என்பதை அறிந்தால் அவர் என்ன நினைப்பார்! அவருடைய மனத்துயரும் ஆத்திரமும் சாபம் போல அவனுடைய மன நிம்மதியையும், வாழ்க்கை இன்பத்தையும் குலைக்காதா! பல நாட்கள் அவருக்குக் கீழ்வேலை பார்த்துவிட்டு இப்போது அவரையும் அடக்கும் நிலைக்கு வருவதை அவர்தான் காணச் சகிப்பாரா! அவனும்தான் மன உலைச்சலின்றி இருக்க முடியுமா! காரியாலயத்தின் வாய்தான் சும்மா யிருக்குமா!

அவரையே பார்த்தான். முகத்திலே ஏற்கெனவே விஷயத்தை அறிந்தவரைப் போல ஏக்கம் பிரதிபலித்தது. ஆனால் கோபால் விஷயம் ரகசியமாக இருக்க வேண்டும் என்று கூறியிருந்ததும் நினைவுக்கு வந்தது.

* * *

ராஜவேலுவுக்கு நிலை கொள்ள வில்லை. நேரம் செல்லச் செல்ல என்றுமறியாத பாரம் மனத்தை அழுத்தியது. வாழ்க்கையிலே அவன் எதிர்பார்க்கும், எதிர்பார்த்த பதவி இன்னும் இரண்டு நாளில் வரப் போகிறது. அதிர்ஷ்ட தேவதை வாயிற்படியில் நின்று சிரிக்கிறாள். ஆனால் அவளை வரவேற்கும் மன நிலையோ, உற்சாகமோ இல்லையே! ஏன்! மனத்தின் அடியிலே, 'வின்ஸ்லோ தமக்காகத்தான் இதை அளிக்கிறார், எனக்காகவோ என் திறமைக்காகவோ அல்ல' என்ற எண்ணம் எழுந்து கொண்டிருந்தது.

வீட்டை அடைந்த போது மனைவியிடம் சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்



திருப்புல்லாணி தேவஸ்தானத்தின் கௌரவ சூப்பரின்டென்டென்ட் ஸ்ரீ கே. ராஜகோபாலாச்சாரியாரின் ஷஷ்டியப்த பூர்த்தி விழா ஆகஸ்டு மாதம் 21ந் தேதி வெகு விமரிசையாக நடந்தேறியது. பத்திரிகாசிரியர்களிடமிருந்தும், பல பிரமுகர்களிடமிருந்தும் தம்பதிகளுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்தன.

தான். அவன் என்னதான் சொல்லுகிறான் என்பதை அறியவும் ஆவல் எழுந்தது.

விஷயத்தைக் கேட்ட போது ராஜம் துள்ளினான்.

"அப்படியா! பேஷ்! பேஷ்! நான்தான் சொன்னேனே அன்றைக்கே...சரோ பிறந்த வேளை நல்ல வேளைன்னு...எனக்கு எப்போ வைரத்தோடு!"

அவள் பூரிப்பு அவனை எரித்தது.

"ராஜம், மகாலிங்கம் இனிமேல் என் கீழே வேலை பார்க்க வேண்டும்."—அவன் குரலிலேயே ஏக்கம் தொனித்தது.

"பாவம்! அது அவர் தலையெழுத்து."

"எனக்கு மூன்றுடி இன்னும் இரண்டு பேர் இருக்காங்க."

"அவுங்க அரதிர்ஷ்டம்."

"மகாலிங்கத்தை மோசம் பண்ணினது மாதிரி ஆகாது!"

"அதெப்படியாம்!...சிங்களா போய்க் கேட்டீர்கள்! உலகத்திலே இதை யெல்லாம் பார்த்தால் முன்னுக்கு வர முடியாது. பைத்தியக்காரத்தனமா ஏதாவது செய்து வைக்காதீங்க. 'இளிச்சவாயன்'னு பெயர் வாங்கறத்திலே பேர்தான் நிற்கும். வேறே ஒன்றும் கிடைக்காது."—ராஜத்தின் குரலில் அழுத்தமும் கடுமையும் சேர்ந்து தொனித்தன.

சாப்பாடுகூடச் சரியாக இறங்க வில்லை. படுக்கையில் படுத்ததும் மனக் கண்முன் மகாலிங்கம் தான் தோன்றினார். அவன் மானேஜராகவும், அவர் அடக்கமாக 'ஸார்' என்று அழைக்கும் தோரணையும் நினைவு வட்டத்தில் எழுந்தபோது நெஞ்சை அறுத்தது.

யாரோ ஒருவன் அவன் காது கேட்க, "உயிரைக் காப்பத்தின ரொக்கமா ஏதாவது தானம் செய்யட்டுமே. மகாலிங்கத்தை உதறி விட்டு இவனுக்கு மானேஜர் உத்தியோகம் கொடுப்பானேன்!" என்று கேட்பது போல மனத்தில் எழுந்தது.

சிந்தனை சுழல ஆரம்பித்து விட்டது. வாழ்க்கையில் அந்தச் சம்பவம் ஏன் நிகழ வேண்டும்! நிகழ்ந்ததுதான் நிகழ்ந்தது; அதற்குப் பின்னும் ஏன் எதிரொலிகள் கிளம்பி அவன் அவற்றில் சிக்க வேண்டும்! முதலாளி தம் நன்றியை மற்றவர் பொருமும்படியாகவும் வயிறு எரியும் படியாகவுமா காட்ட வேண்டும்!

நினைக்க நினைக்க அந்தச் சம்பவமே முகத்தில் அறைந்தாற் போல நின்றது. நினைவிலேயே அவன் உள்ளம் எரிந்தது. உடலெல்லாம் ஜுவாலையில் தகித்தது. மீண்டும் கையைப் பார்த்தான். செக்கச் செவே லென்ற தோல்; விரலிலிருந்து முழங்கைவரையில் கையை வெட்டிக் கொள்ளலாமா என்று கூட அவன் ஆத்திரப்பட்டான்.

கையிலே பிறந்த சிந்தனை கொழுந்துவிட்டது.

அவசர அவசரமாக 'லெட்ஜர்' கணக்குகளை எழுதிக் கொண்டிருந்தான். அவனைத் தவிர மற்ற குமாஸ்தாக்கள் ஐந்து மணி அடித்ததும் கிளம்பி விட்டார்கள். ஹாலின் ஒரு பக்கத்தில் மதன்லால் நிதானமாக எழுதிக் கொண்டிருந்தார். மிஸ்டர் ஆல்வா இன்னொரு பக்கத்தில் இருந்தார். வின்ஸ்லோ துரை எப்போது புறப்படுவார் என்ற ஒரே எண்ணம்தான் அவருக்கு. ஆனால் வின்ஸ்லோ புறப்படுவதாகக் காணோம்.

அந்தச் சமயத்தில்தான் திடீரென்று எங்கிருந்தோ ஏதோ பயங்கரச் சப்தம் கிளம்பியது. ராஜுவேலு திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். அடுத்தகணம் அவனையுமறியாமல் அவன் கால்கள் தாவின, வின்ஸ்லோ இருந்த அறையை நோக்கி.

பிளைவுட் கதவுகளில் அக்னி விளையாடியது. கதவு ஒரு கணத்தில் பாளம் பாளமாக வளைந்து இருந்தது. அறையின் நடுவே வின்ஸ்லோ தவித்து மூர்ச்சையாகி விட்டார். சுற்றிலும் நெருப்பு, நெருப்பு நெருப்புத்தான். ஒரு பக்கம் மதன்லால் அலற, இன்னொரு பக்கம் மிஸ்டர் ஆல்வா நடுங்க ராஜுவேலுவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. இன்னும் தாமதித்தால் வின்ஸ்லோவின் சாம்பலைத்தான் பார்க்க முடியும் என்று தோன்றிவிட்டது. மின்சாரப் பொருத்தத்தில் பிடித்த தீ பிலிம்களை அணைத்துக் கொண்டு விட்டது. அசுர வேகத்தில் ஜுவாலை வீசிக் கொண்டிருந்தது.

மின்னல் வேகத்தில் ராஜுவேலு தாவிவிட்டான். அடுத்த கணம் வின்ஸ்லோவும் அவனும் ஹாலில் விழுந்தனர்.

வின்ஸ்லோ ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் கிடந்தார். ராஜுவேலுவின் கை குணமடைய மூன்று மாதங்களாயின.

மீண்டும் காரியாலயத்தில் சேர்ந்தபோது வின்ஸ்லோ தம் மனத்தையே திறந்து காட்டி விட்டார். அதுவரையில் கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு அவன் கேட்ட மாற்றலைக் கொடுக்காதவர், இப்போது கேட்காமலேயே கொடுத்து விட்டார். அதுவும் சூப்பிரண்டாக.

"நீ செய்த உதவிக்கு, கொடுத்த உயிருக்கு இதெல்லாம் போதவே போதாது" என்று


இருமலுக்கு
வீட்டிலேயே
குணம்
அளிப்பது!
Alembic
க்ளைகோடின்-
டெர்ப்-வசாகா
அலெம்பிக் கெமிகல் ஒர்க்ஸ் கம்பெனி லிமிடெட், பரோடா - 3.
நீங்கள் அலெம்பிக்கின் மேல் பூரண நம்பிக்கை வைக்கலாம்.

அவர் சொன்னபோது அவருக்குக் கண்களில் நீர் துளித்து விட்டது.

ராஜவேலுவுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டான்.

* * *

"என்னங்க, தூங்காம படுக்கையிலே புரளுறீங்க! இப்பவே இப்படின்னா, மானேஜரானா எப்படித் தூங்குவீங்களோ!"

"நீ பேசாம தூங்கு, ராஜம்!"

வின்ஸ்லோ இப்போது தம் நாட்டுக்கு ரிடையராகிப் போகிறார். பின்னை இனி மேல் கம்பெனியை நடத்தப் போகிறான். தாம் போவதற்கு முன் ராஜவேலுவுக்கு மானேஜர் பதவியையும் அளித்து விட்டுச் செல்ல வேண்டும் என்று எண்ணி விட்டார். அவனது உழைப்பையும் அனுபவத்தையும்கண்டா கொடுக்கிறார்! தம் நன்றியைக் காட்ட அல்லவா இந்தப் பதவியை அவனுக்கு அளிக்கிறார்!



பூந்தமல்லியில் ஆகஸ்டு 14ந் தேதி சென்னை கவர்னர் கனம் ஸ்ரீபிரகாசா அவர்கள் கிராம நூல் நிலையப் பணியைத் துவக்கி வைத்தார்கள். ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கள் துவக்க உரை நிகழ்த்துவதையும், அவருக்கு அருகில் செங்கல்பட்டு ஜில்லா கலெக்டர் லோபோ பிரபு அவர்கள், பூந்தமல்லி பஞ்சாயத்துத் தலைவர் ஸ்ரீ என். சுந்தரராஜன் பி. ஏ., பி. எல். அவர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

பாவம், மகாலிங்கம்! மூன்று பெண்களை மணம் செய்து கொடுக்க வேண்டும். மூன்று பிள்ளைகளை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். இந்நிலையில் வயிறு எரியும்படியாக வாழ்க்கையில் துரதிர்ஷ்டம் ஏற்பட்டால் அதன் எதிரொலி அவனையும் பாதிக்குமே! சூப்பிரண்டாக அவன் எவ்வளவு அவரிடம் கற்றுக் கொண்டிருக்கிறான்! தெய்வத்துக்கே பொறுக்காத இந்த உயர்வில் அவன் என்ன இன்பத்தைக் காண முடியும்! வெறும் பணமும் பதவியும் குரோதத்தையும் பொறாமையையும்தானே கிளப்பி விடப் போகிறது! அன்றையத் தீயில் கைதான் வதங்கியது. இனிமேல் காரியாலயத்தில் தினம் தினம் ஏற்படப் போகும் புகைச்சலில் மனம் எரிந்து கருகி விடுமே!

மகாலிங்கத்தின் மனைவி என்ன நினைப்பாள்! தன் கணவரை நினைத்து நொந்து கொள்ளுவாள். காரியாலயத்தில் எப்படி யெல்லாம் பேசிக் கொள்ளுவார்கள்!

"துரைக்குச் சோக்குப் பொடி போட்டான், ஐயா, கிடைத்தது."

"கோள் சொல்லி, கோள் சொல்லிக் கிடைத்த பதவி!"

"இதை நினைக்கத்தான் ஐயா, அன்றைக்கு அவரைத் தீயிலிருந்து இழுத்தான். அவரே வந்திருப்பார் தானே!"

உள்ளத்தில் எழுந்த ஒலிகளைக் கேட்க அவனுக்கே தாளவில்லை.

"சேச்சே! வேண்டவே வேண்டாம்!" என்று அவன் தன்னையும் மீறிக் கத்தி விட்டான்.

"என்னங்க! வேண்டாம், மனசை அலட்டிக்காமல் தூங்குங்க" என்று ராஜம் கூறி விட்டுத் திரும்பிப் படுத்தாள்.

* * *

மறு நாள் மத்தியானம் காரியாலயம் முழுதும் 'முணு முணு' என்று பேச ஆரம்பித்து விட்டார்கள். இரண்டு மூன்று பேர்—யார் பெரியவர்களோ அவர்களைச் சேவிப்பவர்கள் – கைகுலுக்க வந்தார்கள்.

மகாலிங்கத்தை எதிரிட்டுப் பார்க்கவே ராஜவேலுவுக்குத் தெம்பு வரவில்லை. ஆனால் அவர், அவனை நோக்கி வந்து விட்டார்.

"செய்தி கேட்டேன், அப்பா! ரொம்ப சந்தோஷம். உன் வேலையிலே எப்போதுமே எனக்கு அபார நம்பிக்கை. அதே எண்ணத்தைத் துரையும் கொண்டிருக்கிறார்" என்று தமக்கே உரித்தான நிதானத்துடன் தான் அவர் பேசினார்.

ராஜவேலுவுக்குப் பொறுக்க வில்லை. என்ன பதில் சொல்லுவது என்று புரியாமல் கண் கலங்கினான்.

அன்று மத்தியானம் வின்ஸ்லோ அவனை, அவன் எதிர்பார்த்தபடி அழைத்தார்.

அவனைப் பார்த்ததும், "உட்கார்!" என்றார்.

பிறகு, "ஏன் இப்போது அழைத்தேன் என்று தெரியுமா!" என்று கேட்டார்.

"தெரியும் சார்......"

"நான் அடுத்த வாரம் கப்பலேறுகிறேன்... அதற்கு முன்னால்......"

"எனக்கு மானேஜர் பதவி கொடுக்க நினைத்தீர்கள். இல்லையா!" ராஜவேலுவின் குரலில் அவனே இதுவரை அறியாத கடுமை.

குரலைக் கேட்டு வின்ஸ்லோவே ஒரு கணம் திடுக்கிட்டார்.

"ஏன் ஒரு மாதிரியாகப் பேசுகிறாய்......நீ என் உயிரைக் காப்பாற்றினதற்கு என் நன்றியைக் காட்ட வேண்டாமா!"

"நன்றியை விலை கொடுத்தா வாங்க வேண்டும் என்கிறீர்கள்!"

"நீ சொல்வது எனக்குப் புரியவில்லை!"

"உங்கள் உயிரைக் காப்பாற்றியதற்காக எனக்கு மானேஜர் பதவி அளிக்க முன் வந்துள்ளீர்கள். காப்பாற்றுததின் காரணத்தினால் மகாலிங்கத்தை அதே தலைமை சூப்பிரண்டு பதவியில் வைக்கத் துணிந்தீர்கள். என்ன, நான் சொல்வது உண்மைதானே!"

"என்னப்பா, விநோதமாகப் பேசுகிறாய்!"

"நான் ஒன்றும் விநோதமாகப் பேசவில்லை. சற்று யோசித்துப் பாருங்கள். உங்கள் உயிரைக் காப்பாற்றினேன் என்பதற்காக, எனக்கு மூத்தவர்களை மீறித் தாங்கள் எனக்கு இந்தப் பதவி யளித்தால், என் கீழ் எவ்வளவு பேர் மனக் குறையில்லாமல் வேலை பார்ப்பார்கள்......! அவர்களுடைய மனத் தாங்கல் கம்பெனியையே பாதிக்காதா! என் ஒருவனுக்காகக் கம்பெனியின் நலன் பாதிக்கப்படுவதை நான் விரும்பலாமா! மேலும் மகாலிங்கத்துக்குள்ள திறமையும், அனுபவமும் எனக்கு இருக்கிறதா!" என்று படபடவென்று கேட்டான்.

ஒரு கணம் வின்ஸ்லோ மௌனமானார். மேலே பேசக் கூட தைரியம் வராமல் தலை குனிந்து விட்டார். அவர் நிமிர்ந்தபோது ராஜவேலு அங்கேயில்லை.

அடுத்த கணமே, "மகாலிங்கத்தைக் கூப்பிடு!" என்று சேவகனுக்கு உத்தரவிட்டார்.

டி.கே.சி.யின் கடிதங்கள்

மீனம்பாக்கம்
25—3—41

தங்கள் ஆர்வம் நிறைந்த கடிதம் கிடைத்தது. செல்லையாவிடம் தங்களுக்கு எவ்வளவோ பிரியம். தங்கள் கவியைக் கண்டவர்களில் அவன் ஒருவன். சதா மலரும் மாலையைப் படித்துக் கொண்டிருப்பான். அவன் மூலமாகத் தங்கள் கவிப் பண்பு உலகத்துக்கு வருங்காலத்தில் தெரிய வேண்டும். அப்படித் தங்களுக்குச் சேவை செய்யக் கூடியவன் போய் விட்டான். எல்லாம் கடவுள் செயல். நாம் என்ன செய்யக் கிடக்கிறது. தங்கள் உள்ளத்தின் கனிவு வெண்பாவில் தெளிந்து கிடக்கிறது. தமிழுலகில் இந்த வெண்பா எழுத ஒருவர்தான். அது தாங்கள்தான். வேறு யாருக்கும் கவி என்பது வருகிறதில்லையே. நண்பர்கள் எல்லாரும் கவியில் உள்ள சோக ரசத்தைச் சுவைத்து வியந்தார்கள். எனக்கு என்னவோ ஒரு தமிழ்க் கவி உதயமாய் வருவதைப் பார்ப்பதில் அளவிறந்த ஆனந்தம். கவிக்கு உயிரையே கொடுக்கலாம் என்று சொல்லுவது நம்மவர் மரபு. தங்கள் கவி * உயிரைக் கொடுத்து வந்த மாதிரியே இருக்கிறது.

"இசைத் தமிழ்ச் செல்வா" எவ்வளவு வாய்ப்பு! "என் அப்பா" எவ்வளவு கனிவோடு விளிக்கிறது! "அழகிய செல்" என்று நின்று மூன்றுவது சீரில், "ஐயா" என்று மோனையில் விழும்போது அருமைப்பாடெல்லாம் பிறந்து விடுகிறது. தமிழ் பாஷை தங்களுக்கு அருமையாய்த் துணை புரிகிறது.

Keats சொன்னார் "Truth is Beauty" என்று. தங்கள் பாடல் அதற்குத் தக்க இலக்கியம் என்று எல்லாருக்கும் தெரிகிறது. கல்கி, ராஜாஜி (சிறைக்கு) வெளியில் இருந்தால் தங்கள் வெண்பாவை ரொம்ப அனுபவிப்பார்கள்.

ஆசிய ஜோதியில் தங்கள் கவியை (மகனை இழந்த தாய்) வாசித்தேன். தாங்களும் தமிழுமாகச் சேர்ந்து எவ்வளவோ ஆறுதலைத் தருகிறீர்கள்.

உடல் நலத்துக்காகக் கன்யாகுமரியில் தங்குகிறதாகத் தெரிகிறது. சௌக்கியந்தானே.


இங்ஙனம்
டி.கே. சிதம்பரநாதன்

---

* டி.கே.சி.யின் ஒரே புதல்வர் ஸ்ரீ தெ. சி. தீத்தாரப்பன் (செல்லையா என்று செல்லப் பெயர்) மரணமடைந்த சமயம் தேவி எழுதியனுப்பிய பாடலே இங்கு குறிக்கப்படுகின்றது. அது வருமாறு:—

எப்பாரும் போற்றும் இசைத்தமிழ்ச் செல்வாஎன்
அப்பா அழகியசெல் லையாநான்—இப்பாரில்
சிந்தை குளிரச் சிரித்தொளிரும் நின்முகத்தை
எந்தநாள் காண்பேன் இனி.

தியாகச் சுடர்



சங்கர்

வாசலிலே வண்டி வந்து நின்றது. "அம்மா" என்று மகிழ்ச்சியுடன் கூறிக் கொண்டே வண்டியிலிருந்து இறங்கி வீட்டுக்குள் வந்தான் முரளி. அவனை முந்திக் கொண்டு ரோஜாப்பூவின் நறுமணம் ஓடி வந்தது.

"கச்சேரி எல்லாம் மங்களமாக நடந்ததாப்பா!" என்று ஆவலுடன் கேட்டுக் கொண்டே அவன் கையிலிருந்த வெள்ளிக் கூஜாவையும் மாலையையும் வாங்கினேன். விளக்குக்கு முன்னே போடப்பட்டிருந்த தாமரைக் கோலத்தில் ரோஜா மாலையிலிருந்த இதழ்கள் பொல பொல வென்று உதிர்ந்தன. அந்த மனோகரமான காட்சியிலே என்னுடைய பெண்ணுள்ளம் என்ன வெல்லாமோ மனக் கோலத்தைக் கிறுக்கியது.

"அம்மா! கச்சேரிக்கு நீ வராமல் போனாயே! ரொம்பவும் கச்சிதமாக அமைந்திருந்தது இன்று என் பாட்டு! அதைவிட அற்புதமாக இருந்தது வேதவல்லியின் வயலின் வாசிப்பு. சபையிலே ஒரே உணர்ச்சி வெள்ளம்......"

என் கண்மணி, நான் பெற்ற செல்வம் இப்படிச் சொல்லச் சொல்ல நான் ஆகாயத்திலே பறப்பது போன்று மேலே மேலே போய்க் கொண்டிருந்தேன். ஆனால் மீண்டும் முரளியின் குரல் என்னைக் கீழே இழுத்துக் கொண்டு வந்து விட்டது.

"அம்மா! இதோ பார்த்தாயா! இன்று கச்சேரிக்குச் சன்மானமாக எனக்கு மட்டும் ஐந்நூறு ரூபாய் கொடுத்தார்கள்."

வெற்றிலை பாக்குடன் ஒரு கட்டு ரூபாய் நோட்டுக்களை என்னிடம் நீட்டினான் முரளி. இரண்டு கைகளாலும் அதை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டேன். கண்களில் ஆனந்தக் கண்ணீர் கோத்து நின்றது.

"என்னம்மா இது!"

"ஒன்றுமில்லையடா, கண்ணே! இந்தப் பெருமைகளை யெல்லாம் உன் அப்பா இருந்து பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே! அவர் மட்டும் இப்போது இருந்தால் உன்னை அப்படியே கட்டிக் கொண்டு கூத்தாடுவார்...... குதிப்பார்......"

உணர்ச்சிப் பெருக்கினால் என்ன வெல்லாமோ சொல்லிக் கொண்டு வந்தவள் அவனுக்குச் சாப்பாடு போட வேண்டும் என்ற நினைவு கூட இல்லாமல் அப்படியே மெய்ம்மறந்து நின்று கொண்டிருந்தேன்.

"அதை எல்லாம் நினைத்து ஏனம்மா இப்போது வருத்தப்படுகிறாய்! அதற்கெல்லாம் பிராப்தம் வேண்டாமா......! சரி, சரி, எனக்குப் பசிக்கிறது. சாதம் போடுகிறாயா!" என்றான் முரளி.

நான் அவனை அழைத்துக் கொண்டு அடுக்களைக்குச் சென்றேன். முரளி சாப்பிடும் பொழுதே 'அந்த' மகிழ்ச்சிகரமான சேதியை அவன் காதில் போட என் தாய் உள்ளம் துடித்தது. ஆகவே ரஸத்தைக் கிண்ணத்தில் ஊற்றி அவன் முன்னால் வைத்துவிட்டு மெள்ளப் பேச்சை ஆரம்பித்தேன்.

"இதோ பார் முரளி, இது நான் வரைக்கும் நான் வேடிக்கை என்று நினைத்திருந்தேன். ஆனால் இன்று காலையில்தான் உண்மை என்று தெரிய வந்தது. ஜட்ஜ் சாம்பசிவத்தின் சம்சாரமும் மூத்த மகனும் வரன் விஷயமாக நீ போன பின்பு வந்திருந்தனர். அவர்களுக்குப் பூரண திருப்தியாம். எனக்கும் பிடித்து விட்டது. இனி, எல்லாம் உன் இஷ்டத்தைப் பொறுத்திருக்கிறது. அவர்கள் சம்பந்தம் நமக்குக் கிடைப்பது நம்முடைய பாக்கியம் என்றே கருதுகிறேன்......"

குனிந்த வண்ணம் சொல்லிக் கொண்டே போன நான் நிமிர்ந்து பார்த்தேன். முரளியின் முகத்தில் துளிகூட மகிழ்ச்சியே இல்லை. இலையில் பிசைந்த சாதம் அப்படியே இருந்தது.

என் பார்வை விழுந்ததும் இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு எழுந்து விட்டான்.

எனக்குப் புரிந்தது.

"அப்படியானால் நான் சொல்கிற பெண் உனக்குப் பிடிக்கவில்லையா முரளி! ஏன் ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறாய்!" என்று கவலையோடு நான் கேட்டேன்.

"எல்லாம் நாளைக்குப் பேசிக் கொள்ளலாம் அம்மா! எனக்கு இப்போது அசதியாக இருக்கிறது; தூங்கப் போகிறேன்" என்று சொல்லி விட்டு மாடிக்குப் போய் விட்டான்.

அவன் ஏதோ மனத்தில் வைத்துக்கொண்டு சொல்ல முடியாமல் திண்டாடுகிறான் என்று எனக்கு நன்றாகப் பட்டது. பாவம், நன்றாகத் தூங்கட்டும். விடிந்து பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்து விட்டேன்.

ஆனால் அவன் சொன்னதுபோல் தூங்கவா செய்தான்! இரவு முழுவதும் தூக்கம் பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்த அவன் நெஞ்சின் அலைகள் நினைவு வேகத்திலே நேரே என் இதயக் கரையில் வந்து வந்து சரிந்தன. ஆனால் அந்த அலை வட்டம் வேறு எந்த இதய வரம்பெல்லாம் சென்று குமைந்ததோ, யார் கண்டார்கள்!

மறுநாள் காலையில் காப்பி சாப்பிட்டானதும் அவனே சொல்லட்டுமே என்று மௌனமாக அவனைத் தொடர்ந்து வீட்டுக்குள் வந்தேன்.

"அம்மா......!" என்று கூப்பிட்டான் முரளி. இதுவரை அவன் என்னை இவ்வளவு ஏக்கத்துடன் கூப்பிட்டது கிடையாது. கையில் வெற்றிலைச் செல்லத்துடன் விளக்கு முன்னே உட்கார்ந்து கொண்டு அவனை ஏறிட்டுப் பார்த்தேன்.

"அம்மா, நான் சொல்லுகிறேன் என்று எண்ணாதே. எனக்கு ஜட்ஜ் வீட்டுப் பெண் வேண்டாம். வேண்டாமென்றால் பிடிக்கவில்லை என்று நினைத்துக் கொள்ளாதே......!"

"அப்படியென்றால் கல்யாணமே வேண்டாம் என்று சொல்கிறாயா!"

"இல்லையம்மா, மணந்தால் நம்முடைய வேதவல்லியை......"

அவன் வார்த்தையை முடிப்பதற்குள் என் தலை சுழன்றது. நான் சந்தேகித்தபடியல்லவா ஆகிவிட்டது! இவ்வளவுக்கு எப்படித் துணிந்தான் முரளி! இதுவரை என்னிடம் இதைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பிரஸ்தாபித்ததே கிடையாதே! குழந்தை போன்ற அவன் உள்ளத்தில் எங்கிருந்து இவ்வளவு கள்ளம் புகுந்து கொண்டதோ!

"முரளி, வலிய வருகிற ஸ்ரீதேவியை வேண்டாமென்று விட்டு அந்தக் கறுப்பைக் கட்டிக் கொண்டு அழுகிறேன் என்கிறாயே! ஏன் இப்படி உன் புத்தி போகிறது......! உனக்கு வேதவல்லி பக்க வாத்தியம் வாசிக்கிறாள் என்று நினைத்தேன். கடைசியிலே உன்னையே கண்ணி வைத்துப் பிடித்துவிட்டாளே, கள்ளி!"

"அம்மா! வேதத்தை ஒன்றும் குறை சொல்லாதே. இந்த விஷயம் அவளுக்கே இன்னும் தெரியாது. அவள் எனக்குக் கண்ணி வைக்கவும் இல்லை; அதில் நான் விழுந்து விடவும் இல்லை......"

"பின்னே!"

"ஆத்திரப்படாமல் கேள், அம்மா. வேதத்தின் தகப்பனார் நான்கு வருஷங்களாக அவளுக்கு வரன் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒன்றும் குதிரவில்லை. இந்தக் காலத்தில் உண்மையான வித்வத்தை யார் மதிக்கிறார்கள்! பொன் கொள்ள வந்தவர்கள் அவளுடைய தகப்பனாரின் வறுமையைக் கண்டு ஓடினார்கள். பெண் கொள்ள வந்தவர்களோ அவள் நிறத்தைக் கண்டு ஓடினார்கள். பாவம், வேதவல்லி தன் துயரையெல்லாம் மனத்தில் அடக்கிக் கொண்டு கச்சேரிகளுக்கு வருகிறாள் இப்போது. போன மாதம் அவள் தகப்பனார் என்னைப் பார்க்க வந்தவர் ஒரு ஆயிரம் ரூபாய் கடனாகக் கேட்டார். யாரோ முதலில் மறுத்த பிரகிருதி ஆயிரம் ரூபாய் அதிகம் கொடுத்தால் மணந்து கொள்வதாகச் சொன்னாராம்!"

"அப்படியானால் கடனையாவது கொடுத்துத் தொலைப்பதுதானே!" என்றேன் நான், பொறுமையை இழந்து.

"சொல்வதைக் கேள், அம்மா! பணத்தைக் கொடுத்து விடலாம். ஆனால் அந்த ஆயிரத்துக்காக அவன் கொண்ட அன்பு வேதத்தின் மேல் எத்தனை நாளைக்கு நிலைத்து நிற்க முடியும்! ஆகவே உள்ளத்தைப் பார்க்க முடிந்த ஒருவனே அவளுடைய கணவனாக அமைய வேண்டும். அந்த ஒரு உதாரண புருஷனாக உன் மகன் ஏனம்மா இருக்கக் கூடாது!" என்று கேட்டான்.

"என் ஆசையில் நெருப்பைக் கொட்டி விட்டாயேடா மகனே!" என்று நான் அங்கலாய்த்தேன். ஆனால் அந்த நெருப்பு என் நெஞ்சின் இருளை நீற்றிச் சாம்பலாக்கிப் பழைய வாழ்வின் அமர நிலையை மீண்டும் உயிர்ப்பிக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

"அம்மா! உன் பேச்சிலிருந்து நீ அப்பாவை அடியோடு மறந்து விட்டாய் என்று நினைக்கிறேன். இன்றையச் செல்வ வாழ்வு தியாகமே உருவான உன் உள்ளத்தைத் திரையிட்டு மூடி விடும் என்று கனவிலும் கருதவில்லை நான்" என்று கூறிவிட்டு வெளியில் போய் விட்டான் முரளி.

நிலைக் கண்ணாடியை அப்படியே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றேன். அதிலே என் பிரதிபிம்பமாகப் பதினைந்து வயதுக் கன்னிப் பெண்ணின் மோகன உருவம் தெரிந்தது.

* * *


பருவத்தின் இளமெருகோடு துள்ளித் திரிந்த காலம் அது. அப்போது என் எதிர்காலத்தைப் பற்றி ஆயிரமாயிரம் இன்ப நினைவுகளை ஓடவிட்டு அவற்றோடு கண்ணாமூச்சி விளையாடி மகிழ்ந்திருக்கிறேன். ஆனால் அத்தனை நினைவுகளும் என் கண்ணை மட்டும் கட்டி விட்டு நிரந்தரமாக ஒளிந்துக் கொண்டன என்று முதலில் நினைத்தேன். அது எவ்வளவு பேதைமை என்பதை என் பிற்கால வாழ்வின் கதை சுட்டிக் காட்டியது.

நான் பத்தாவது வகுப்பை முடித்ததும் என் பெற்றோர்கள் எனக்குக் கல்யாணத்தை முடிக்க வேண்டும் என்று விரும்பினர். நானும் என் பெற்றோர்கள் குறிக்கும் வரனையே மணந்து கொள்வதாகக் கூறி விட்டேன். வேறு என்ன சொல்ல முடியும்! என் வாழ்வில் அவர்களுக்கு இல்லாத அக்கறை வேறு யாருக்கு இருக்கிறது!

ஒரு சுபதினத்தில் பிள்ளை வீட்டார் என்னைப் பார்க்க வந்தனர். அவர்களுக்கு என்னை ரொம்பப் பிடித்திருந்தது. நானும் 'அவரைப்' பார்த்தேன். நான் என் மனத்தில் கற்பனை பண்ணி வைத்திருந்ததைப் போலவே இருந்தார். ஆனால் ஏனோ என்னை ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி,—வெட்கப்பட்டாரோ என்னவோ!—தலையைக் குனிந்து கொண்டிருந்தார். அதுவே எனக்குச் சௌகரியமாகப் போய் விட்டது! அவரை நான், நன்றாகப் பார்க்க முடிந்ததல்லவா!

பிள்ளை வீட்டார் போன பிறகு என் மனம் ஆனந்தக் கடலாடியது. ஆனால் அப்பாவும் அம்மாவும் ஏதோ ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். நானும் மறைவிலிருந்து ஒட்டுக் கேட்டேன். விவரம் என்னவென்று தெரியவில்லை. ஆனால் "எனக்குப் பிடிக்குமோ என்னமோ" என்று அவர்கள் பேசிக் கொண்டது என் காதில் விழுந்தது. அங்கிருந்தபடியே "எனக்குப் பூரண சம்மதம் அம்மா!" என்று கத்தலாம் போல இருந்தது! அடக்கிக் கொண்டு அவர்களாகவே என்னிடம் கேட்கட்டுமே; கொஞ்சம் பிகு செய்து பார்க்கலாம் என்று இருந்து விட்டேன்.

அன்று மாலை அம்மா என்னைத் தனியாக மாடிக்கு அழைத்துக் கொண்டு போனாள்.



பம்பாய் இந்தியன் டெக்ஸ்டைல் இன்ஜினீயர்ஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு எஸ். ஜி. சர்மாவுக்கும், திரு என். ஏ. நாராயண ஐயர் குமாரி செல்வி சீதாலக்ஷ்மிக்கும் 'பம்பாய் மாதுங்காவில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்கமணமக்கள்!

அவள் முகத்தில் விவரிக்க இயலாத வேதனை கவ்வி இருந்தது. அதைப் பார்த்தபொழுது எனக்குத் திகில் உண்டாயிற்று.

"என்ன அம்மா, ஒரு மாதிரியாக இருக்கிறாயே! மாப்பிள்ளையின் அம்மா ஏதாவது..."

"அதெல்லாம் ஒன்றுமில்லை, கண்ணே!... மாப்பிள்ளையை உனக்குப் பிடித்திருக்கிறதல்லவா!" என்று என் கூந்தலை வருடிக்கொண்டே தடுமாறினாள் அம்மா.

ஆமாம்; என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிவிட்டு அவளைப் பரிதாபமாகப் பார்த்தேன். அம்மாவின் கண்களில் நீர் கசிய ஆரம்பித்தது. மெல்ல என் காதோடு காதாக ஏதோ சொன்னாள். அவ்வளவு தான்! யாரோ என்னை மலை உச்சியிலிருந்து கீழே உருட்டி விட்டதைப் போல இருந்தது. "ஐயோ, அம்மா!" என்று வாய்விட்டுக் கத்திவிட்டேன்.

அவர் ஒரு பிறவி ஊமையாம்! என் குரல் கேட்டு அப்பாவும் ஓடிவந்தார். நான் யாதும் பேசாமல் விக்கி விக்கி அழுதேன். என் பெற்றோர்கள் என்னைத் தேற்றினர். கடைசியில் அம்மா சொன்னாள்:

"ஏன் அழறே இப்போ! உனக்குப் பிடிக்கலேன்னு வேண்டாம்னு சொல்லிடலாம்."

ஆனால் அப்பாவோ!

"என்னடி உளர்றே. அவன் இஷ்டப்படி விட்டால் எப்பத்தான் கல்யாணம் செய்யறது! பையன் ராஜா வாட்டமா இருக்கிறான். தங்கமான குணம். நம்ம சக்திக்குத் தகுந்த வரன். அதைக் கொண்டா இதைக் கொண்டா என்று பிடுங்க மாட்டான்."

"நல்லா இருக்கு நீங்க பேசறது!"

"இதோ பாருடி. நமக்குத் தூரத்து உறவும் கூட. நம்ம பையன் அவன். முதல்லே அவன் மேலே இரக்கப்படறதை விட்டுட்டு இளப்பமா நினைக்கலாமா!"

உண்மையிலேயே அப்பாவின் குரலில் சோகம் கலந்து வந்தது. என்னை அப்படியே விட்டு விட்டு அவர்கள் கீழே போய்

விட்டார்கள். நான் தனிமையில் உட்கார்ந்து யோசித்தேன்; குமுறினேன்; அழுதேன்.

ஆனால் அந்தக் குழப்பத்துக்கு மத்தியிலும் 'அவரு'டைய அடக்கமான, குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்த காட்சி என் மனக் கண்முன் மின்னிக் கொண்டே இருந்தது.

"பாவம்! ஊமையாகப் பிறந்தது அவருடைய தவறா! எந்தப் பெண்ணும் மனமொப்பி அவரை மணந்து கொள்ளாவிட்டால் அவர் வாழ்வு என்னாகும்! தான் 'ஊமை' என்ற எண்ணம் எவ்வளவு தூரம் அவர் இதயத்தைப் புண்படுத்தியிருந்தால் அப்படி வேதனையால் வெம்பித் தலை கவிழ்ந்திருப்பார்! நான் ஏன் அவர் வேதனையைத் துடைத்து அவருடைய குனிந்த தலையை நிமிர்த்தக் கூடாது! அதுவும் ஒரு தியாகந்தானே!" என்ற எண்ணங்கள் என் உள்ளத்தில் குபுகுபு வென்று பொங்கி என்னைத் திணற அடித்தன. அந்த வெள்ளத்தில் நான் மூழ்கியேபோனேன். ஆம்; அவரையே மணந்து கொள்ளச் சம்மதம் தெரிவித்தேன்!

நான் செய்த முடிவு எவ்வளவு உத்தமமானது, தியாகத்தின் சிகரம் என்பதெல்லாம் அவருடன் நான் வாழத் தொடங்கிய பிறகுதான் நன்றாக உணர்ந்து கொண்டேன். என் மேல் அவர் தன் உயிரையே வைத்திருந்தார். அவர் மனத்தில் ஒன்றை நினைக்க வேண்டியது; மறு கணமே நான் அதைச் செயல்படுத்த வேண்டியது என்ற ரீதியில் வாழ்ந்து வந்தோம். குறிப்பறிந்து நான் நடந்து கொள்வதைக் கண்டு வியப்பினால் அவர் என்னை அன்பு கனியப் பார்க்கும் பார்வையை இப்போது நினைக்கும் பொழுதும் என் உடல் புல்லரிக்கின்றது. மகிழ்ச்சி ஏற்பட்டு விட்டால் சமிக்ஞையால் என்னை அருகே அழைத்துச் செல்லமாக என் கன்னத்தைத் தட்டுவார். அப்பொழுதெல்லாம் நான் இந்த உலகத்தையே மறந்து போவேன்.

அவர் ஆயுளில் என்னைக் கடிந்து பேசியதே கிடையாது. என்ன சிரிக்கிறீர்கள்! ஊமையான அவர் எப்படித் திட்ட முடியும் என்று! வாயினால்தான் திட்ட வேண்டுமோ! எத்தனை பேர்கள் தங்கள் கொடிய பார்வையினால், குரூரமான முக பாவங்களினால் தங்கள் மனைவிகளைக் கொல்லாமல் கொல்லுகிறார்கள்! பேச்சைவிட மௌனம் அதி பயங்கரமானதல்லவா! ஆனால் என் கணவர் முகத்தில் சதா புன்னகை தவழ்ந்து கொண்டே இருக்கும். அந்தப் புன்னகை ஒன்றே போதும் என்றிருந்தேன். ஆனால் விதி வேறுவிதமாக அல்லவா இருந்தது!

முரளிக்கு அப்போது ஐந்து வயது நடந்து கொண்டிருந்தது. ஒரே வாரக் காய்ச்சலில் அவர் என்னையும் முரளியையும் தவிக்க விட்டு விட்டுப் போய்விட்டார். நான் அலறித் துடித்தேன். பாவம், முரளிக்கு விவரம் தெரியாத பருவம். அவன் பம்பரம் விளையாடுவதற்குப் போய் விட்டான்.

"காலம்" என்ற ஒன்று அப்போதுதான் என் கவனத்தைக் கவர்ந்தது. அது ஓடிக் கொண்டே இருந்தது.

முரளி இப்போது சங்கீதக் கலையின் உறைவிடமாகத் திகழ்கிறான். காலப் போக்கிலே ஒரு திடீர் மாற்றம். கலைமகளும் திருமகளும் எங்கள் இல்லத்தை நோக்கித் தங்கள் கடைக்கண் பார்வையைத் திருப்பினர். நான் இன்று செல்வத்தில் புரளுபவள். என் கண்மணி முரளிக்கும் உயர்ந்த இடத்திலிருந்து பெண் கொள்ள வேண்டுமென்று நான் விரும்பியதில் தவறு என்ன! ஆனால் முரளியின் முடிவைப் பார்த்தீர்களா! வேதவல்லியை அல்லவா மணந்து கொள்ளப் போகிறான்! அவன் வெளியே போகும்பொழுது கூறி விட்டுப் போன சொற்கள் என் மனத்தைத் துளைக்கின்றன. நான் அவன் 'அப்பாவை' மறந்து விட்டேனாம். ஆம். உண்மைதானே! இன்றையச் செல்வ நிலையை மறந்து இறந்தகால வாழ்வை நான் எண்ணிப் பார்த்தால் வேதவல்லியை ஏழை யென்றும், கறுப்பென்றும் இளப்பமாக நினைப்பேனா!

என் பக்கக் கன்று முரளி! ஆதியில் எனக்கிருந்த தியாக புத்தி அவன் உள்ளத்தில் சென்று விட்டதோ, என்னவோ!

* * *

மறுநாள் என்றும்போல் முரளி குதூகலத்துடன் எழுந்தான். முந்திய நாள் அவன் முகத்தில் நான் பார்த்த கவலைக் குறிகளையெல்லாம் காணோம்.

"அம்மா! நேற்று ஏதோ படபடவென்று பேசிவிட்டேன். மன்னித்து விடு. உன் மனத்துக்கு விரோதமாக இனி நான் எதையும் செய்ய மாட்டேன். இப்போது திருவல்லிக்கேணி வரைக்கும் போய் விட்டு வருகிறேன்" என்றான் அவன்.

"முரளி, எல்லாம் அப்புறம் போகலாம். முதலில் நீயும் நானும் இப்போ வேதவல்லியின் வீட்டுக்குப் போய்விட்டு வரவேண்டும். பெண் பார்க்க முறைப்படி நான் போக வேண்டாமா!" என்றேன்.


மறுகணம் முரளியின் ஆனந்தக் கண்ணீர் என் பாதங்களை நனைத்தது.



அழகான தோற்றம்
ஆரோக்யமான
வாழ்க்கை
லோத்ரா
Lodhra
கர்ப்பாசய ரோக நிவாரணி
கேசரி குடீரம் லிட், சென்னை-14



தீங்கற்றது-ஏனெனில் இந்த
பார்லி டின்னில்
அடைக்கப்பட்டது
புஷ்டிமிக்க உயர்ந்த ரகத்
தானியங்களிலிருந்து தயா
ரிக்கப்படுவதால் ராபின்ஸ
ன்ஸ் பேர்ல் பார்லி நல்ல
போஷணையை அளிக்கிறது
சுலபமாக ஜீரணிக்கக்கூடி
யது. காற்றுப்புகாமல் சுகா
தார முறைப்படி டின்களில்
அடைக்கப்படுவதால் இந்த
பார்லியை குழந்தைகள்,
நோயாளிகள், பாலூட்டும்
தாய்மார்கள் முதலியவர்க
ளுக்கு முழு நம்பிக்கையு
டன் கொடுக்கலாம்.
ROBINSON'S
PEARL
BARLEY
ராபின்ஸன்ஸ் பேர்ல்
பார்லியையே
கேட்டு வாங்குங்கள்
முற்றிலும் சுத்தமானது



'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் :—




1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' இருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனஸினையே கேட்டு வாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

A. 44



தமிழ் நாட்டின் பெருமை

திரு கல்கி பொன்னியின் செல்வனில் சோழ சாம்ராஜ்யத்தின் புராதனப் பெருமைகளை எடுத்துக் காட்டித் தமிழ் நாட்டினரைப் பரவசப் படுத்தியதுபோல், திரு சோமு அவர்களின் ரவி சந்திரிகாவில் மலைப் பளிஞர்களின் வாழ்க்கையும் கிராமப் பழக்க வழக்கங்களின் பெருமையும், நம் மக்களின் புராதன தெய்வ நம்பிக்கையும் வாசகர்களைப் பெருமையடையச் செய்கின்றன. சொக்கப்பனுடன்கூட நாமும் நாக பூஜையில் இருப்பதைப் போன்ற உணர்ச்சியே தோன்றுகிறது. சாமியார்களின் கமன ஓடி சம்பாஷணையும், மிக ரஸமாகக் கையாளப்பட்டிருக்கிறது. தெய்வ நம்பிக்கையும் மதப் பற்றும் நம் தமிழ் நாட்டுக்கே பெருமையளிக்கக் கூடியது.

தஞ்சாவூர்
30—8—55 எஸ். கல்யாணசுந்தரம்

●

உயிரோவியம்

'ரவி சந்திரிகா' கதை வாழ்க்கை நிலையை வெளிப்படுத்தும் ஓர் வரலாறாகத் திகழ்கின்றது. அதில் அவ்வப்போது கூறப்படும் உபமான உபமேயங்கள் சாலப் பொருந்தியனவாக உள்ளன. அனுபவத் தன்மைகளை ஆராய்ந்து மிகவும் பாராட்டத்தக்க வகையில் எழுதுகிறார் ஆசிரியர் ஸ்ரீ சோமு அவர்கள். ஆங்காங்கு மனிதர்களுடைய தன்மையையும், பண்பாட்டையும், உள்ளக் கருத்தினையும் ஐயம் திரிபற அருமையாக விளக்குகின்றார். இந்தக் கதை ஜீவ களை ததும்பி ஓர் உன்னத உயிரோவியமாக விளங்குகிறது.

தானத்தில் சிறந்த நிதானத்தைத் தழுவ வேண்டுமென்ற கருத்தைக் கொண்டு "இயற்கையைக் கட்டுப்படுத்தி, மனசில் எழுகிற கோபத்தை அடக்கிக் கொண்டு நிதானம் தவறாமல் பேசுவதிலும் நடந்து கொள்வதிலுந்தான் மனிதன் மிருகத்தினின்று மாறுபடுகிறான்" என்று டாக்டர் சுரேஷ் கூறுவதும், மஜீத்—ஆமீனா இருவருக்கும் உள்ள தொடர்பைப் பற்றிப் பகோராவும், உஸ்தாதும் உரையாடும்போது அவரவர்களுடைய உள்ளக் கிடக்கையை உணர்த்துவதும் அருமையினும் அருமையாக இருக்கின்றன.

"எத்தனை பாசமாக இருந்தாலும் கூடப் பருவம் வரும்போது பெண்ணுக்கு அவளுடைய தகப்பனுமே அன்னியனாகி விடுகிறான். அல்லாஹூத்தாலாவின் படைப்பு ரகசியம் அது", என்று தெய்விக சக்தியை எவருக்கும் புலப்படும் வகையில் சாரமாகப் புலப்படுத்துகிறார்.

தவிரவும், "அவள் ஆரம்பத்திலேயே மஜீதிடம் கடுகடுப்பாக நடந்து கொண்டிருந்தால் விஷயம் இத்தனை தூரத்துக்கு முற்றுமா!" என்பதும் "பருவமான ஒரு பெண்ணுக்கு இம்மாதிரி யோசனைகளில் தோன்றுகிற புத்தி, ஒரு வயதான ஆண்மகனுக்குக்கூட ஏற்படாது" என்றும் விளக்குவதும் அரிய கருத்துக்கள். தவறு தன் மகளுடையதாக இருப்பினும் உண்மையைத் தெளிவுபடுத்தாமல் இருக்க முடியுமா என்று உஸ்தாத் கூறுபவை அனைத்தும் பொன் மொழிகளாகத் திகழுகின்றன.

திருவண்ணாமலை
29—8—55 ஆர். எம். கண்ணன்

●

வட இந்திய யாத்திரை

சில வாரங்களாக "கல்கி"யில் தொடர்ந்து வெளிவரும் வட இந்திய யாத்திரை என்ற கட்டுரையைப் படித்து வரும் ஆயிரக்கணக்கான நேயர்களில் நானும் ஒருவனேன். இந்தப் புதிய அம்சம் 'கல்கி'யின் சிறப்பை மேலும் உயர்த்தியுள்ளது. திரு பரதன் அவர்கள் எங்களைப் போன்ற கடல் கடந்த தமிழர்களுக்கு இக் கட்டுரையினால் ஒரு மாபெரும் தொண்டு செய்கிறார் என்றால் அது மிகையாகாது.

அவர் ரூர்க்கியைப் பற்றிச் சிறப்பாக எழுதியுள்ளார். ரூர்க்கி இருக்குமிடத்தை அறியாமலிருந்த எங்களில் சிலருக்கு அவர் அதை அறிமுகப் படுத்தி வைத்ததுடன் அங்கு கம்பீரத்துடன் திகழும் ரூர்க்கி "இன்ஜினீயரிங் கலாசாலை"யைப் பற்றி வரவேற்கத் தக்க முறையில் வரைந்துள்ளார்.

பலர் உலகில் பல இடங்களைப் பார்க்கச் செல்லுவார்கள். ஆனால், அதில் சிலர்தான் தாங்கள் பார்த்தவைகளை மற்றவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறும் முறையை உடையவர்களாக இருக்கிறார்கள். அதில் ஒருவர்தான் நம் மதிப்புக்குரிய திரு பரதன் அவர்கள். ஹாஸ்யத்துடன் அவரே கேள்வி கேட்டு அதற்கு அவரே பதிலளிக்கும் முறை ரசிக்கக் கூடியது. அத்துடன் வாசகர்களையும் தன்னுடன் மோட்டாரிலும், ரயிலிலும் அழைத்துச் செல்லும் விதம் நன்று.

வாரத்திற்கு (நான்கு அணா) இருபத்தைந்து சதச் செலவுடன், வீட்டில் சௌகரியமாக இருந்தவாறே, ரூர்க்கியைப் போன்ற பல வட இந்திய நகரங்களுக்கு எங்களை அழைத்துச் செல்லும் திரு பரதன் அவர்களுக்கு நன்றி.

இலங்கை
29—8—55 வி. சேதுரத்தினம்

படித்துப் பாருங்கள்

முதியவன் விருந்து

எத்தனையோ புஸ்தகங்கள் தினமும் வெளியாகத்தான் செய்கின்றன. அவற்றில் சிலவற்றைக் கண்ணால் பார்க்கக்கூட நாம் விரும்புவதில்லை. சில ஒரு முறை படித்துப் பார்க்கலாம் போல் தோன்றுகிறது. சில என்றென்றும் நம்மோடு வைத்திருந்து சமயம் நேரும்போதெல்லாம் படிக்க வேண்டும் போல் தோன்றுகிறது. இந்த மூன்றாவது பிரிவைச் சேர்ந்த ஒரு சில புத்தகங்களில் முதன்மையானது 'முதியவர் விருந்து'.

இது என்ன! பெயர் ஏதோ மாதிரி இருக்கிறதே! முதியவன் விருந்து!—ஏன் இளைஞர்களுக்கு விருந்தாக அமையாதோ என்றெல்லாம் எண்ணங்கள் எழலாம். ஆனால் புஸ்தகம் தோன்றிய விவரத்தைக் கேட்டால் நாமகரணம் சரியானதுதான் என்று சொல்லுவீர்கள்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஊருக்கு ஒரு புத்தகாலயம் அமைக்க வேண்டும் என்று சங்கம் அமைத்து ஒரு இயக்கமே தமிழ் நாட்டில் செல்வாக்குள்ள பெரியோர்கள் நடத்தினார்கள். அந்தச் சங்கத்தினருக்கு ராஜாஜி ஒரு யோசனை கூறினார்.

நாட்டிலுள்ள வயது வந்த பெரியவர்கள் நமது சட்டங்கள், அரசியல் முறை, பொது சுகாதாரம், பொருளாதாரம், வர்த்தகம் பத்திரிகைத் தொழில்—இப்படிப் பல விஷயங்களைப் பற்றிச் சரியான விவரம் தெரியாமலே இருக்கிறார்கள். அந்தப் பெரியவர்களுக்கு உபயோகமாகும் வகையில் ஒரு புத்தகம் வெளியிட வேண்டும் என்று யோசனை கூறினார் ராஜாஜி.

அந்த முயற்சியின் பலன்தான் 'முதியவன் விருந்து'!

இந்தப் புத்தகத்தில் முப்பத்தொன்பது கட்டுரைகள் இருக்கின்றன. விஷயங்களும் பல்வேறு வகை விஷயங்கள். எழுதியிருக்கும் ஆசிரியர்களும் பெரியோர்களும் அந்த அந்த விஷயங்களில் நீண்ட நெடுநாள் ஊறித் திளைத்து வேலை செய்தவர்கள். அதனாலேயே இந்தப் புத்தகத்தில் வெளியாகியுள்ள கட்டுரைகள் தனி வேகமும் உணர்ச்சியும் கொண்டவையாக இருக்கின்றன.

ஸ்ரீ கே. வி. கிருஷ்ண சுவாமி ஐயர் பிரபல வக்கீல். சட்ட நுணுக்கத்தைப் பற்றி அருமையான கட்டுரை வழங்கியிருக்கிறார். டாக்டர் திருமூர்த்தி வைத்திய உலகில் பெருமதிப்புப் பெற்றவர். பல காலம் வைத்தியக் கல்லூரி பிரின்ஸிபலாக இருந்தவர். பல பொது ஜன ஸ்தாபனங்களில் ஈடுபட்டு வேலை செய்தவர். அவர் வியாதிகளும் தடுப்பு முறைகளும் என்பது பற்றி ஓர் அரிய கட்டுரை வழங்கியிருக்கிறார். டாக்டர் குருசாமி முதலியார், டாக்டர் லக்ஷ்மண சுவாமி முதலியார், டாக்டர் என். விஜயராகவன் முதலியவர்கள் தொத்து வியாதிகள், வீதிகளின் சுகாதாரம், முதலுதவி முதலிய பல விஷயங்களைப் பற்றி அருமையான கட்டுரைகள் வழங்கியிருக்கிறார்கள். நமது பத்திரிகை உலகைப் பற்றி, அதிலேயே மூழ்கித் திளைக்கும் சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். சீனிவாஸன் அவர்கள் எழுதியிருக்கிறார். 'சென்னை மாகாணத்தின் வெளி நாட்டு வர்த்தகம்' என்னும் பொருள் பற்றிப் பொருளாதார நிபுணர் திரு ப. நடராஜன் பல புள்ளி விவர ஆதாரங்களுடன் ஓர் உயர்தரமான கட்டுரை எழுதியிருக்கிறார். 'குடி தண்ணீரை' எப்படிப் போற்ற வேண்டும், போற்றாவிடில் எத்தனை தீங்குகள் நேரும் என்பதை சர்க்கார் ஸானிடரி இன்ஜினீராக இருந்த ஸ்ரீ ஏ. வி. ராமன் உணர்ச்சி மிக்க கட்டுரை வழங்கியிருக்கிறார். நமது கால்நடைச் செல்வத்தைப் பற்றியும், அவற்றை எப்படிப் போஷிக்க வேண்டும், வியாதி வராமல் தடுக்க என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் ரஸமான கட்டுரை கால் நடைக் கல்லூரி பிரின்ஸ்பலாக இருந்த டாக்டர் சுவாமிநாதய்யர் எழுதியிருக்கிறார். இவை தவிர, பொழுதறிதல், பஞ்சாங்கம், மின்சாரம், ஸ்தல ஸ்தாபனம், ஜில்லா பரிபாலனம், காங்கிரஸ் வளர்ச்சி, பாங்கும் இன்ஷ்யூரன்ஸும், வாங்கலும் விற்றலும், நமது உணவு, துன்பம் அறியாக் குழந்தை, விவசாயிகளின் கடன் முதலிய இன்னும் பல விஷயங்களைப் பற்றி அறிஞர்களின் நல்ல நல்ல கட்டுரைகள் இருக்கின்றன!

தமிழ்த் தாத்தாவாகிய டாக்டர் சாமிநாத அய்யர் அவர்கள் நம் நாட்டில் நகரங்களும் ஆலயங்களும் தோன்றிய வரலாற்றை மிக அழகானதோர் கட்டுரையில் விளக்குகிறார்கள்.

கடைசியாக ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். அது இந்தத் தொகுதியிலுள்ள முதல் கட்டுரையைப் பற்றித்தான். நமது ராஜாஜியவர்கள் பொதுப் பணியிலேயே தமது வாழ்நாளைச் செல விட்டவர்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம். அவர்கள் 'பொதுப் பணி' என்னும் பொருள் பற்றி எழுதியிருக்கிறார்கள் ஓர் கட்டுரை; அதில் ஒரு பகுதி:

"பொதுநல வேலை வேறு, சுவாமி பூசை வேறு என்று எண்ணுவது தவறு. எல்லாம் ஆண்டவன் வழிபாடாகவே எண்ணி வேலையைச் செய்ய வேண்டும். கடவுள் நினைவு வைத்துக் கொண்டு வேலை செய்வது காரியத்துக்குத் தடையாகாது. எந்த வேலை செய்யும் போதும் பக்தி செய்து கொண்டே வேலை செய்வது பழக்கத்தில் மகிழ்ச்சியாகவே முடியும்; ஊக்கம் தரும்; வேலைத் திறமையும் தரும். மகாத்மா காந்தியடைந்த வெற்றிகளின் ரகசியம் இதுவே என்று நான் உறுதியாகச் சொல்வேன்."

இந்த வார்த்தைகள் ராஜாஜியைத் தவிர வேறு யார் கூற முடியும்!

"தமிழில் வெறும் கதைப் புத்தகங்கள்தான் வெளியாகின்றன. சிந்தனைக்கு அறிவூட்டுவதாயும் அன்றாட வாழ்க்கைக்குப் பயனுள்ளதாயுமுள்ள புஸ்தகங்கள் வெளி வருவதில்லையே!" என்ற குறையை இப்புத்தகம் அறவே நீக்கி விடுகிறது. முதியவர்கள் மட்டுமன்றி இளைஞர்களும் படித்தறிய வேண்டிய புத்தகம். முதியவன் விருந்து—அறிவுக்கு விருந்து! இந்த அரிய நூலைத் தயாரித்த சென்னைப் புத்தகாலய சங்கத்தார், நமது பாராட்டுக்கு உரியவர்கள். இந்நூல் கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59 பிராட்வே, சென்னை. விலை: ரூ. 3.—என். வி. என்.





KAMADHENU



சொர்ணத்தின் திருமணம்

கு. அ. ராஜாராம்

அம்மாபேட்டையை அடுத்துள்ள புத்தூர்க் கிராமம் ஏதோ ஒரு காலத்தில் பெரிய நகரமாயிருந்திருக்கலாம் என்று கல்கத்தாவிலிருந்து வந்திருந்த புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதினார்கள். ஆனால் அது இப்பொழுது ஒரு சின்னஞ்சிறு கிராமம். அந்தக் கிராமத்துக்குப் பெரிய மிராசுதார் வீருவாண்டையார்தான். அது மட்டுமின்றி அந்த ஊர் புற்றிடங் கொண்டேசுவரர் ஆலயத்துக்குச் சொத்து உண்டாக்கிச் சிறப்பைத் தந்தவரும் அவர்தான். வைகறையில் துயில் நீங்கிக் குளித்து விட்டுத் திருநீறு பூசிக் கோயிலுக்குப் போகாமல் ஒரு நாளும் இருந்ததில்லை. முதிர்ந்த அநுபவமட்டுமின்றி இனிய குணமும், நல்ல பண்பும், சீரிய ஒழுக்கமும். சொல் பிறழா நேர்மையும் ஒருங்கே பெற்றவர். தமக்கிருந்த ஐம்பது ஏக்கர் நிலத்தையும் கோயில் திருப்பணிக்கே அர்ப்பணித்து வந்தார். கோயில் உற்சவங்களுக்குத் தம் சொந்த வருமானத்திலிருந்தும் செலவு செய்வதில் தயங்க மாட்டார். அதனால்தான் வெறும் பாழடைந்திருந்த அந்த மண்டபம் கோபுரமுடைய புனிதக் கோயிலாக மாறியிருந்தது.

வாண்டையாரின் ஒரே மகன் உலகநாதன் பட்டணத்திலே படித்துக் கொண்டிருந்தான். அந்தக் கிராமத்திலேயே பெரிய நிலக் கிழாராயிருந்தாரென்றாலும் உலகநாதன் பி.ஏ. வகுப்பு தேறி முடிப்பதற்குள் அவர் பணத்துக்குப் படாதபாடுபட்டு விட்டார். உலகநாதன் பி. ஏ. வகுப்பில் முதல் மாணவனாகத் தேறித் தன் சொந்தக் கிராமமான புத்தூருக்குத் திரும்பியிருந்தான். அப்பொழுதுதான் வீருவாண்டையார் பத்தாயிரம் ரூபாய் வரை கடனை வைத்து விட்டுத் திடீரென்று இரத்தக் கொதிப்பினால் பரலோகம் போய் விட்டார்.

'சென்றதைக் கருதிக் கண்ணீர் வடிப்பதில் யாது பயன்!' என்று உலகநாதன் ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொண்டான். ஆனால் தன் அருமைத் தாய் காமாட்சியை அவ்வளவு சீக்கிரம் தேற்ற முடியவில்லை. வீருவாண்டையாரை ஊரெல்லாம் புகழ்ந்து கொண்டிருந்தாலும், தன் மகனைப் பட்டணத்துக்கு அனுப்பிப் படிக்க வைத்திருந்தாலும் இறக்கும் போது கடனாளியாகத் தானே இறந்தார் என்று நினைக்கும்போது காமாட்சி தன்னையுமறியாமல் விம்மி விம்மி அழுவதற்கு ஆரம்பித்து விடுவாள்.

"ஏனம்மா, அழ வேண்டும்! நான் இருக்கும் வரையில் நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். எனக்குக் கூடிய சீக்கிரம் எப்படியும் உத்தியோகம் கிடைத்து விடும். பிறகு நம்முடைய கஷ்டமெல்லாம் பறந்து விடும். இருக்கும் கடனுக்கு உள்ள நிலத்தை ஈடு செய்து விடலாம்" என்று சொன்னான் உலகநாதன். காமாட்சி அரும்பாடுபட்டுச் சம்பாதித்த நிலத்தை விற்பதற்கு முதலில் சம்மதிக்கவில்லையெனினும், முடிவில் ஒப்புக் கொண்டாள். காலங்கடத்தினால் வட்டிதான் ஏறிக்கொண்டே போகும் என்றறிந்த உலகநாதன் தனக்கிருந்த பத்து ஏக்கர் நிலத்தை விற்றுப் பணமாக்கிக் கருப்பய்யாக் காடவராயரின் கடனை அடைத்து விட்டான். இப்பொழுது அவனிடம் ஐந்து ஏக்கர் நிலந்தான் மிஞ்சியிருந்தது. பாக்கி முப்பத்தைந்து ஏக்கரும் என்ன ஆயிற்று என்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் தந்தை எல்லாம் கோவிலுக்கென்றே அர்ப்பணித்திருந்தாரல்லவா!

வீருவாண்டையாரின் ஏகபோகக் கோவில் நிர்வாகம் இப்பொழுது முடிவடைந்துவிட்டது. புத்தூர் புற்றிடங் கொண்டேசுவரர் பெரிய நிலச்சுவான்தார் ஆகிவிட்டார்! வாயில்லாப் பிள்ளை ஆயிற்றே கடவுள்! அந்த ஊர் பெரிய தனக்காரர் கருப்பய்யாக் காடவராயர் கோவில் டிரஸ்டியாக நியமனம் செய்யப்பட்டார். இப்பொழுது உலகநாதன், 'பெரிய மனிதர்' என்ற மெருகிழந்து சாதாரணக் குட்டி மிராசுதாராகி விட்டான்.

பக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த வடவாற்றின் இருகரைகளிலும் வரிசையாக வளர்ந்திருந்த புன்னை மரங்களும், மாமரங்களும் மெல்லினங்காற்றில் மெதுவாக அசைந்து கொண்டிருந்தன. ஒருநாள் ஆற்றுக்கு அண்மையில் அமைந்த அந்தச் சோலையிலேதான் உலகநாதனும் சொர்ணமும் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"சொர்ணம், உங்கள் கடனைத் தீர்க்கத்தான் நான் நிலத்தை விற்றுவிட்டு நடுத்தெருவில் நிற்கிறேன். உங்கள் அந்தஸ்துக்கும் செல்வாக்குக்கும் ஏற்றாற்போல்தான் உன் தந்தை உன்னை வரன் தேடிக் கட்டிக் கொடுப்பார்.

என்னை இனி மறந்து விடு. உனக்கும் எனக்கும் கல்யாணம் என்பது பகற் கனவுதான்'' என்று முடித்தான் உலகநாதன்.

"அப்படிச் சொல்ல வேண்டாம், அத்தான்! மணந்தால் உங்களைத்தான் மணப்பேன். இல்லாவிட்டால், இந்த வடவாற்றிலே விழுந்து என் உயிரையே தியாகம் செய்து விடுவேன்'' என்று உறுதியாகச் சொன்னாள் சொர்ணம்.

இந்த நேரத்தில்தான் கருப்பய்யாக் காடவராயர் பலராம் பேட்டைச் சந்தைக்குப் போய் விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். அந்தச் சோலையிலே சொர்ணத்தையும் உலகநாதனையும் எப்படியோ பார்த்துவிட்டார். சொர்ணம் மெதுவாகப் புதரிலே மறைந்து மளமள வென்று நடையைக் கட்டி விட்டாள்!

"டேய், லோகநாதா. உனக்கும் என் மகளுக்கும் கல்யாணம் என்ற பேச்சு உன் அப்பா இறந்தவுடனேயே அதுவும் மாறி விட்டது. ஜாக்கிரதை—இனிமேல் இப்படி நடந்தால் காலை ஒடிச்சிப்பிட்டுத்தான் மறு வேலை பார்ப்பேன், தெரிஞ்சுக்கோ'' என்று மிரட்டி விட்டுப் போய் விட்டார் காடவராயர்.

அதற்குப் பிறகு உலகநாதன் சொர்ணத்தைச் சந்திக்கவே யில்லை; சொர்ணம் உலகநாதனைச் சந்திக்கத் துடித்தாள். ஆனால் காடவராயர்தான் அதற்குப் பெரும் முட்டுக் கட்டையா யிருந்தார்!

அந்தக் கிராமத்தில் கருப்பய்யாக் காடவராயரைத் தவிர மற்றவர்கள் மிகச் சிறிய மிராசுதார்கள்தான். குறைவான நிலங்களை வைத்துப் பயிர் செய்வதில் வரவை விடச் செலவு மிஞ்சிப் போய்விடுவதாலும், விளைச்சல் சில சமயங்களில் குறைவுபடுவதாலும் சின்ன மிராசுதார்கள் ஏராளக் கடன் வாங்கி நாளடைவில் தங்களுடைய கொஞ்ச நிலத்தையும் கடனுக்கு அடைத்து மற்றவர்கள் நிலத்திலே பயிர் செய்யும் குத்தகைதாரர்களாக மாறி விட்டார்கள்! இந் நிலையில்தான் உலகநாதன் தன் வாழ்க்கையை நடத்த அரசாங்க உத்தியோகத்தை நம்பியிருந்தான். பிரதி வருடமும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்று வெளியேறி வேலையில்லாத் திண்டாட்டத்தில் உழன்று கொண்டிருக்கும் போது, சாதாரண ஒரு ஏழை விவசாயியான உலகநாதனுக்கு எங்கே வேலை கிடைக்கப் போகிறது!

இப்பொழுது உலகநாதனின் எண்ணத்தில் ஒருவிதப் புரட்சி ஏற்பட்டு விட்டது. படித்த உலகநாதன் பண்ணையாட்களின் துணை கொண்டு வயல்களில் வேலை செய்ய ஆரம்பித்து விட்டான். 'பி. ஏ. படித்தவன் ஏர் பிடிக்கும் வேலை செய்கிறானே!' என்று பலர் வியந்தனர். ஆனால் உலகநாதன் வேலை யில்லாத் திண்டாட்டத்திற்குச் சீட்டுக் கிழித்து விட்டான். அந்த வருஷம் சென்னை மாகாணத்திலேயே அதிக விளைச்சல் கண்டுமுதல் செய்த காரணத்தால் அவனுக்கு விவசாயப் பரிசு கிடைத்தது. அதனால் நிலச்சுவான்தார்கள் பலர் அவனிடம் வலுவிலே வந்து தங்கள் நிலங்களை யெல்லாம் குத்தகைக்கு ஒப்படைத்து விட்டார்கள்.

கருப்பய்யாக் காடவராயருக்கு உலகநாதன் மீது கல்லெண்ணம் இருந்தபோதிலும் அவன் புகழைக் கண்டு பொறாமைப் பட்டார். எப்படியாவது அவனைச் சமயம் வாய்க்கும்போது மட்டந் தட்டவேண்டும் என்று திட்டமாகக் கருதி யிருந்தார்.

உலகநாதனுக்குச் சமீபத்தில் ஏற்பட்டிருந்த புகழ், செல்வாக்கு எல்லாம் காடவராயரின் மனத்தை மாற்றி யிருக்கும் என்று சொர்ணமும் அவள் தாயாரும் எதிர்பார்த்தனர்.

ஊஞ்சலில் ஹாய்யாக உட்கார்ந்திருந்த காடவராயரிடம், "எப்படியும் சொர்ணத்துக்கும் உலகநாதனுக்குமே கல்யாணம் செய்து விடலாம்'' என்று வீரம்மாள் மெதுவாகப் பேச்சை எடுத்தாள்.

"வீரம்மா, நீ என்ன சொன்னாலும் சொர்ணத்தை, உலகநாதனுக்குத் தர முடியாது. அவன் கிடக்கிறான் ஆண்டிப் பயல். எல்லாம் வெளி வேஷம்.''

"ஏன், ஆண்டியா யிருந்தால் என்ன! அவனுக்குள்ளதைக் கொண்டு நிம்மதியாகவே காலந் தள்ளுவான். அவன் தன் கடனை எவ்வளவு நேர்மையாகத் தீர்த்தான்! நல்ல படிப்பும், நல்ல அறிவும், நல்ல அழகுமுள்ள அவனைப்போல் வேறு நம்மில் எங்கு கிடைக்கப் போகிறார்கள்! நீங்கள் அவன் தந்தை வீருவாண்டையாருக்கு அளித்த வாக்குறுதியை மறந்து விட்டீர்களா! சொர்ணம் அவன்மீது தன் உயிரையே வைத்துக் கொண்டிருக்கிறாள். எப்படியும் இந்தத் தை மாதத்திலேயே கல்யாணத்தை முடித்து விடுங்கள்!''

"வீரம்மா, வாயை மூடிக்கொண்டு பேசாமல் உள்ளே போ. உனக்கு வயதாகி யிருக்கிறதே தவிர உலகத்தைப் பற்றி என்ன தெரியும்!



பம்பாய் திரு எம். கே. மகாதேவன் அவர்களது புதல்வியும், ராஜராஜேஸ்வரி கலா மந்திரின் மாணவியுமான பேபி சாதாவின் நாட்டியம் சென்ற மாதம் பாரதீய வித்யா பவனில் வெகு சிறப்பாக நடந்தது. விழாவுக்கு பம்பாய் நகர மேயர் திரு என். ஸி. பூப்பலா தலைமை வகித்தார். பரத நாட்டியமாடிய சிறுமியை அவர் பெரிதும் பாராட்டினார்.

நமக்கு நிகரான செல்வம் உள்ள இடத்தில் வரன் கிடைத்தாலொழிய நான் சொர்ணத்தைக் கட்டிக் கொடுக்கப் போவதில்லை!"

"வேறு எங்கே வரன் தேடப்போகிறீர்கள்!"

"ஏன், பக்கத்துக் கிராமம் சாயிபுரம் சுந்தரத்தைத் தெரியுமா! அவனும் தன் குடும்பத்தில் ஒரே குழந்தை. போனவாரம் பலராம் பேட்டைச் சந்தையில் கூடப் பார்த்தேன். சரியான கட்டிளங் காளை. இருபது வேலி நிலத்துக்கும் தானே அதிபதியா யிருக்கிறான். அவர் தந்தை வீரய்யாமல்லிகொண்டார் சிறுவயதில் என்னுடன் படித்தவர். நல்ல பரிச்சயமும் உண்டு. இப்பொழுது வாய் திறந்தால் கூடப் போதும். உடனே சுந்தரம் நம் மாப்பிள்ளையாகி விடுவான். சொர்ணத்துக்குப் பிறகு யாதொரு குறைவும் இருக்காது" என்றார் காடவராயர்.

அதற்குள், "சாமி, யாரோ உங்களைத் தேடிக் கொண்டு வந்திருக்காங்க" என்றான் பண்ணையாள் முருகன்.

"உள்ளே வரச்சொல்" என்றார் காடவராயர்.

உள்ளே நுழைந்த அவர்களைக் கண்டதும் காடவராயர் உடனே எழுந்து அவர்களுக்கு ஆசனமளித்தார். அவர் சற்று முன் பேசிக் கொண்டிருந்த அதே சாயிபுரம் சுந்தரமும் வீரய்யா மல்லிகொண்டாருந்தான் அவர்கள்! காடவராயருக்கு மனத்துக்குள் மட்டற்ற மகிழ்ச்சி. என்ன நினைத்தாரோ தெரியவில்லை.

"சொர்ணம், அந்த வெத்திலைத் தட்டைக் கொண்டு வாம்மா" என்று உத்தரவிட்டார். சொர்ணமும் மெதுவாக உள்ளே யிருந்த வெற்றிலைத் தட்டை அவர்கள் முன் வைத்து விட்டு உள்ளே ஓடி விட்டாள். இப்பொழுது தான் சுந்தரத்தின் மனதில் பலவித இன்பக் கனவுகள் உருவாக ஆரம்பித்தன.

"ஏது இவ்வளவு தூரம்! பார்த்து வெகு நாளாயிற்று. அன்று சுந்தரத்தைச் சந்தையில் பார்த்த சமயம் அடையாளமே தெரியவில்லை. நீங்கள் உங்கள் உருவத்தில் எவ்வளவு மாறுதல் அடைந்து விட்டீர்கள்!" என்றார் காடவராயர்.

"நீங்கள் மட்டும் என்ன! அன்றுபோலவா யிருக்கிறீர்கள்! சொர்ணம் கூட மளமளவென்று வளர்ந்து விட்டாளே!" என்றார் மல்லி கொண்டார்.

"இதில் என்ன ஆச்சரியம்! பருவப் பயிர் செழித்து வளரத்தானே செய்யும்" என்று சிரித்துக் கொண்டே தொடர்ந்து கேட்டார்.

"நீங்கள் வந்த காரியம் என்னவோ!"

"புற்றிடங்கொண்டேசுவரரைத் தரிசித்துப் போக வந்தோம். புத்தூர் முன்னைவிட இப்பொழுது செழிப்பாகத்தா னிருக்கிறது. சுந்தரம் தங்களைச் சந்தையில் பார்த்ததாக ஞாபகப் படுத்திய பின் உங்களைச் சந்திக்காமல் போக என் மனம் இடந்தரவில்லை. என்ன இருந்தாலும் பழைய சிநேகம் என்றால் ஒரு தனியான பாசந்தான். நாங்கள் போய்வருகிறோம்!" என்று இருவரும் புறப்பட்டு விட்டார்கள்.

உண்மையில் மல்லிகொண்டார் சொர்ணத்தைப் பார்க்கத்தான் சுந்தரத்தையும் கூட

அழைத்து வந்திருந்தார். கரும்பு தின்னக் கசக்குமா! சுந்தரம் சொர்ணத்தைக் கைபிடிக்கத் தயாராகி விட்டான். அதனால்தான் மல்லி கொண்டார் காடவராயருக்கு உடனே கடிதம் ஒன்று எழுதினர்.

சுந்தரத்துக்கும் சொர்ணத்துக்கும் கல்யாணம் செய்து விடலாமா என்ற யோசனையை மல்லி கொண்டார் வெளியிட்டிருந்தார். காடவராயருக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோலாகிவிட்டது. உடனே தம் சம்மதத்தைத் தெரிவித்து வருகிற தை மாதத்திலேயே கல்யாணமும் செய்து முடித்து விடலாம் என்று குறிப்பிட்டுப் பதில் எழுதி விட்டார்!

இதையறிந்த சொர்ணத்தின் தலை சுக்கு நூருக வெடித்துவிடும் போலிருந்தது. எப்படியும் உலகநாதனைத் தவிர வேறு எவரையும் கட்டிக் கொள்ள முடியாது என்ற முடிவைத் தன் தாய் வீரம்மாளிடம் சொல்லி விட்டாள். வீரம்மாள் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் விழலுக்கு இறைத்த நீராகி விட்டது.

இந்தச் சமயத்திலேதான் ஜில்லா போர்டு தேர்தல் நடந்து கொண்டிருந்தது. கருப்பய்யா காடவராயர் அந்தத் தொகுதிக்கு அபேக்ஷகராக நின்ருர். அவரை எதிர்த்து நிற்பவர்கள் அங்கே ஒருவரும் இல்லை. ஆனல் எதிர்பாராத விதத்தில் உலகநாதன் அவரை எதிர்த்துப் போட்டி யிட்டான்!

காடவராயருக்குப் பல ஊர் பெருந்தனக்காரர்களும், வீரய்யா மல்லிகொண்டாரும் சுந்தரமும் ஆதரித்து ஒத்துழைத்தார்கள்.

"என்ன மாமா, உலகநாதனுக்கு அவ்வளவு கர்வம்! நம்மை எதிர்க்கும் அளவுக்கு வந்து விட்டானு அந்த ஆண்டிப் பயல்!" என்று கூறினுன் சுந்தரம்.

"அவன் கிடக்கிருன் வாண்டுப் பயல். ஏதோ இரண்டு கோணல் எழுத்துப் படித்துவிட்டான் என்று துள்ளுகிருன். அதுமட்டுமல்ல, நான் சொர்ணத்தை அவனுக்குக் கொடுக்க மறுத்ததுதான் அதி முக்கிய காரணம், சுந்தரம், வேறென்றுமல்ல!' என்று ஆத்திரத்தோடு சொன்னுர் காடவராயர்.

"அப்படியா, மாமா! அவனை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் பயப்பட வேண்டாம், வெற்றி நமக்குத்தான் நிச்சயமாக!" என்றுன் சுந்தரம்.

'தம் குல கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ள எவ்வளவோ பணத்தைச் செலவழித்த பின் போட்டியில் வெற்றி கிட்டாமல் இருக்குமா!' என்று மிகுந்த பெரு மிதத்துடன் இருந்தார் காடவராயர்.

உணர்ச்சிப் பெருக்கெடுத்த கிராமத்து மக்கள் ஒருமுகமாக உலகநாதனையே ஆதரித்து வோட்டளித்தனர். முடிவில் அவனே அதில் வெற்றியும் பெற்ருன்!

காடவராயரின் முகம் வெட்கத்தால் வெளுத்து விட்டது. ஆயிரம் பின்னல்கள் ஒரே யடியாக அவரைத் தாக்கின.

"அயோக்கியன், எப்படியோ தேர்தலில் சூது செய்து ஜெயித்து விட்டான். இல்லாவிட்டால் இந்தக் காடவராயரை விட்டு இந்த ஆண்டிப்





சென்னை அரசாங்க மின்சார இலாகா இன்ஜினியர் திரு B. S. அமிர்தலிங்க முதலியார் குமாரத்தி செல்வி கமலவேணிக்கும் களத்தூர் மிராசுதார் திரு. திருநாவுக்கரசு முதலியார் குமாரன் செல்வன் நரசிம்மராஜனுக்கும் 21-8-55ல் சென்னையில் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. அதையொட்டிக் களத்தூரில் ஐயாயிரம் ஏழைகளுக்கு அன்னமிட்டு ஆடைகள் வழங்கப்பட்டன.

வாழ்க கமலவேணி—நரசிம்மராஜன்.

பயலுக்கா வோட் செய்திருப்பார்கள் !'' என்று பொருமினர்.

மல்லிகொண்டார், உலகநாதன் அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று விட்டதால் காடவராயர் மனம் மாறிச் சொர்ணத்தைக் கொடுத்தாலும் கொடுத்து விடலாம் என்று பயந்து உடனே கல்யாணத்தை வைக்கும்படி காடவராயருக்கு அவசரமாக எழுதி விட்டார்.

காடவராயரும், தம்மை அவமதித்த அந்த உலகநாதனை ஜன்ம விரோதியாகக் கருதியதால், மல்லிகொண்டாரின் விருப்பப்படியே சகல ஏற்பாடுகளும் ஆடம்பரமாகச் செய்து கொண்டிருந்தார். ஊரெல்லாம் சொர்ணத்துக்கும் சுந்தரத்துக்கும் கல்யாணம் என்ற பேச்சாகவே யிருந்தது. மேற்படி கல்யாணம் புத்தூரிலேயே நடக்க இருந்ததால் ஒரு வாரமாகப் புத்தூர் அமர்க்களப் பட்டது. விடிந்தால் கல்யாணம்.

அன்று இரவு மணி பத்து இருக்கும். காடவராயர் கல்யாண ஜோலியில் இரவு தூங்கவில்லை.

அப்பொழுது வீரம்மாள் பதறிக்கொண்டே, ''சொர்ணத்தைக் காணோம் !'' என்று அலறி விட்டாள்.

''என்ன, சொர்ணத்தைக் காணவில்லையா !'' என்று விழுந்தடித்துக் கொண்டு காடவராயர் அரிக்கேன் விளக்கை ஏற்றிக் கொண்டு இரண்டு ஆட்களையும் கூட அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டார். எங்கெங்கோ தேடினர்கள், அகப்படவில்லை.

காடவராயர் அடைந்த மனவருத்தத்தைச் சொல்லி முடியாது. ஏற்கெனவே ஜில்லா போர்டு தேர்தலில் அந்த வாண்டுப் பயல் உலகநாதனிடம் தோற்க நேர்ந்ததில் அவர் அவமானமும் துக்கமும் தாங்காமல் வெளியே தலை காட்டவே வெட்கப்பட்டுக் கொண்டிருந்தார். உலகநாதனை நினைத்த போது அவருக்கு உடம்பெல்லாம் பற்றி யெரிந்தது. 'நேற்றுப் பயல் நம்மை அவமானப் படுத்தி விட்டானே ! அதுவும் நம்முடைய சொந்த ஊரிலேயே, பரம்பரையாகக் கௌரவத்துடன் வாழ்ந்த ஊரிலேயே தலைகுனியும்படியாகச் செய்து விட்டானே ! இவனுடைய கொட்டம் அடங்கும் படியாக ஏதாவது செய்தால்தான் என் மனம் ஆறுதல் அடையும். ஏற்கனவே என்னிடம் மரியாதையாக இருந்த இந்த ஊர்க்காரர்கள் எல்லோரும், தேர்தலில் நான் தோற்ற பிறகு கொஞ்சம்கூட மதிக்க மாட்டேனென்கிறார்களே !' என்று நினைத்து மன உளைச்சலினால் துடித்துக் கொண்டிருந்தார். அது போதாத குறைக்கு அவர் அருமை மகள் சொர்ணம் காணுமற்போன செய்தி அவரை எப்படி வாட்டியது என்று சொல்ல முடியாது.

காலை மணி ஐந்தாகிவிட்டது. காடவராயர் முகம் சுருங்கி மூலையில் உட்கார்ந்திருந்தார். கல்யாண வீட்டிலுள்ளவர்கள் களையிழந்து வாட்டமுற்றிருந்தனர். மாப்பிள்ளை சுந்தரமும் காணவில்லை !

அப்பொழுது பண்ணையாள் ஒருவன், ''சாமி சாமி, உலகநாத ஐயா நிலத்துப் பயிரை அப்படியே கொளுத்த ஆளுங்க திப்பந்தம் ஏந்திக்கிட்டு வந்தாங்க. அவங்களைப் பிடிச்சி மரத்தோட கட்டிப் போட்டிருக்காங்க. நம்ம சொர்ணத்தம்மா வடவாத்திலே விழப் போயிட்டாங்க, நாங்கதான் அவங்களைப் பிடிச்சிக் கொண்டாந்திருக்கோம்'' என்று கூறி நிறுத்தினான்.

காடவராயருக்கும் வீரம்மாளுக்கும் போன உயிர் திரும்பி வந்து விட்டது. சொர்ணத்தைப் பத்திரமாகப் பார்த்துக் கொண்டார்கள் என்ற செய்தி திருப்தி யளித்தது. 'அட பாவிப் பயல்களா, என் நிலமும் அவன் நிலத்துக்கிட்டத்தானே யிருக்கு, என் நிலத்துப் பயிரும் அப்படியே கருகிப் போயிடுமே' என்று பதறினர். அந்தத் திருட்டுப் பயல்களைப் பார்க்க ஊரிலுள்ளவர்கள் எல்லோருமே அந்த மரத்தடிக்கு வந்து விட்டார்கள். காடவராயரும் அவசரமாக வந்தார். உலகநாதனும் வந்தான்.

''பாருங்க, சாமி, இந்த அயோக்கியப் பயல்தான்'' என்று தலைமயிரைப் பிடித்துத் தொங்கியிருந்த தலையை நிமிர்த்தினான் வேலாண்டி.


பக்காத்திருடன் போல் காட்சியளித்த அந்த அயோக்கியன் வேறு யாருமல்ல . காடவராயரின் மாப்பிள்ளையாவதற்கிருந்த சுந்தரம்தான் !

'' அயோக்கிய ராஸ்கல். பணம் இருந்து என்ன பயன் ! குணம் இல்லையே ! பயிரையே கொளுத்தத் துணிந்தவன் நாளை கொலைகூடச் செய்யத் தயங்க மாட்டாயே. தூ......!'' என்று காறி உமிழ்ந்தார் காடவராயர்.


உலகநாதனிடம் காடவராயர் தம் கோபத்தை யெல்லாம் மறந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். எப்படியும் சொர்ணத்தை அவன்தான் காப்பாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதே நாளில் நிச்சயமாக்கப்பட்ட முகூர்த்தத்தில் சொர்ணத்துக்கும் உலகநாதனுக்கும் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

'டும் டும்' என்று முழங்கிக் கொண்டிருந்த நாதஸ்வர கான வெள்ளம் புத்தூர் முழுவதும் சிங்காரம் செய்தது.


ஆர்டர் கொடுக்கும் போது ரூ. 5/- முன் பணம் மணியார்டரில் அனுப்பவும்.
ORRLION
THE KING OF ALARM CLOCKS
ரூ. 15/8
பாகிங், தபால் செலவு இலவசம்
P.ORR & SONS LTD.
Madras (Estd. 1849) Ootacamund


'பிராங்கைடிஸினுல் என் சுவாசப்பைகள் நெருப்பைப்போல் தகித்தன'
ஆனல் பெப்ஸ்
அடைப்பைப்போக்கி, எரிச்சலையும் உடனே தணித்தது.
பெப்ஸ் தொண்டை மற்றும் மார்புவலி நிவாரண மாத்திரைகளில் சமன கூட்டி குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும் போதே, இந்த ரசங்கள் ஆவியாக மாறி, உங்கள் சுவாசத்துடன் தொண்டை, சுவாசக் குழாய் மூலமாக சுவாசப்பைக்குச் செல்லும். ஆகவே கோளாறின் ஆரம்பஸ்தானத்திற்கே சென்று வேலை செய்கின்றன. அதனால்தான் பெப்ஸ் கைகண்ட ஔஷதமாயும், உலக பிரசித்தி பெற்றும் விளங்குகிறது. பெப்ஸ் இருமலை நிறுத்தி தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து, அடைப்பை நீக்குவதுடன் இன்புளுயன்ஸா மற்றும் பிராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.
பெப்ஸ் தொண்டை, மார்பு வலி நிவாரண மாத்திரைகள் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்
PEPS
PPY-28-TAM
மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்


ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்திரவாதமான
ஸ்டெய்ன்லஸ்
ஸ்டீல்
பாத்திரங்கள்
உயர்ந்தரகம்-நேர்த்தியான தயாரிப்பு
ஹாத்திபாய் துள்ஸிதாஸ் அண்டு ஸன்ஸ், பம்பாய்-2



10. அவன் கதை

அந்தப் பையன் பதில் எதுவும் கூறவில்லை. தேம்பித் தேம்பி அழுதான். கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. அவனுடைய கண்ணீர் மதுரநாயகத்தின் கால்களில் விழுந்து நனைத்துக் கொண்டிருந்தது.

அவனுடைய பரிதாப நிலையைக் கண்டு மதுரநாயகமும் கலங்கிப் போய் விட்டார். முதலாளி மோகனரங்கம், சப்-இன்ஸ்பெக்டர், 753 இவர்கள் எல்லோருக்கும் ஒன்றும் புரியவே இல்லை. சிறிது நேரம் அப்படியே அசையாமல் திகைத்துப் போய் இருந்தார்கள்.

பிறகுதான் அந்தப் பையன் பேச ஆரம்பித்தான். மதுரநாயகத்தின் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டே, "ஐயோ! நான் ஒரு குற்றமும் செய்ய வில்லையே! என்னைத் திருடன் என்கிறார்களே!" என்று கண்ணீர்விட்டுக் கதறிய படி கூறினான்.

உடனே முதலாளி மோகனரங்கம், "டேய், நீ திருடன் இல்லாமலிருக்கலாம். ஆனால், கடிகாரமும் பேனாவும் உனக்கு எப்படிக் கிடைத்தன? அந்த ரமணிப் பயல்தானே உன்னிடம் தந்து விற்கச் சொன்னான்?" என்று கேட்டு விட்டு, சப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "சார், அந்த ரமணிப் பயல் நீங்கள் சொன்ன மாதிரி பெரிய ஆளேதான், சார். என் கடிகாரத்தையும், மதுரநாயகத்தின் பேனாவையும் விற்பதற்குக் கூட்டாளி ஒருவனைப் பிடித்து அனுப்பியிருக்கிறான்" என்றார்.

உடனே சப்-இன்ஸ்பெக்டர், "அப்படியானால் இவன் ரமணி இல்லையா! அவன் கூட்டாளிதானா!" என்று சந்தேகத்துடன் கேட்டார்.

"ஐயையோ! ரமணியா? அவன் யார்? சத்தியமாகச் சொல்லுகிறேன், அவனை எனக்குத் தெரியவே தெரியாதே!" என்று தேம்பிக் கொண்டே கூறினான் அந்தப் பையன். அவன் கண்கள் பொலபொல வென்று கண்ணீரைச் சொரிந்தன.

இவ்வளவு நேரம் மௌனமாயிருந்த மதுரநாயகம் கீழே குனிந்து அவன் கைகளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினார். "ஆனந்தா, அழாதே! நீ திருச்சியிலிருந்து எப்படி வந்தாய்? பேனாவும் கடிகாரமும் உனக்கு எப்படிக் கிடைத்தன? ஒன்றும் புரியவே இல்லையே!" என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் இந்நேரமாக ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்த சப்-இன்ஸ்பெக்டர், "என்ன மிஸ்டர் மதுரநாயகம், உங்களுக்கு இந்தப் பையனை முன்பே தெரியுமா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

"தெரியாமல் என்ன? இவன் என் சொந்த அக்காளுடைய பிள்ளையே தான்!" என்றார் மதுரநாயகம்.

"அடடே, உங்கள் அக்காள் மகனா? ...ஆமாம், திருட்டுப் போன பேனாவும், கடிகாரமும் இவனிடம் எப்படி வந்து சேர்ந்தன?" என்று வியப்புடன் கேட்டார் மோகனரங்கம்.

"அதுதானே தெரியவில்லை!" என்று கூறிவிட்டு அந்தப் பையனைப் பார்த்து, "ஏண்டா, ஆனந்தா! பேனாவையும் கடிகாரத்தையும் உனக்கு யார் கொடுத்தது? உண்மையை ஒளிக்காமல் சொல்" என்றார் மதுரநாயகம்.

"சொல்லுகிறேன், மாமா! கேளுங்கள். ஒரு வருஷத்துக்கு முன்பு நீங்கள் திருச்சிக்கு—எங்கள் வீட்டுக்கு வந்தபோது, தங்க மூடி போட்ட 'எவர்-ஷார்ப்' பேனா ஒன்றைக் கொண்டு வந்தீர்களே, ஞாபகம் இருக்கிறதா? அதைப் பார்த்ததும், 'எனக்கும் இதே போல் ஒரு பேனா வேண்டும்' என்று நான் உங்களைக் கேட்டேன். அதற்கு நீங்கள், 'இது நம் நாட்டில் கிடைக்காது. கிடைத்தாலும், யானை விலை, குதிரை விலையாக இருக்கும். இது சிங்கப்பூரில் இருந்தல்லவா வந்திருக்கிறது? என் பெரியப்பா பிள்ளை சேகர் வாங்கி எனக்கு அன்பளிப்பாக அனுப்பியிருக்கிறார்' என்று சொன்னீர்கள். இதுவும் உங்களுக்கு நன்றாக நினைவில் இருக்கும். நீங்கள் திருச்சியை விட்டுப் போனது முதல், எனக்கும் அந்தமாதிரி ஒரு பேனா வேண்டுமென்று தினமும் அம்மாவை நச்சரிக்க ஆரம்பித்தேன். என் தொந்தரவு பொறுக்க முடியாமல், அம்மா உடனே சேகர் மாமாவுக்கு ஒரு கடிதம் போட்டாள். கடிதம் போட்ட ஒரு மாதத்தில், அங்கிருந்து கப்பலில் வந்த ஒருவர் மூலம் சேகர் மாமா பேனாவை அனுப்பி வைத்தார். அது நீங்கள் வைத்திருந்தது போலவே இருந்தது. உங்கள் பேனாவின் மேல் எழுதியிருந்தது போலவே அந்தப் பேனாவிலும் 'சேகர் அன்பளிப்பு' என்று எழுதியிருந்தது."

ஆனந்தன் இதைக் கூறிக் கொண்டிருக்கும்போதே, முதலாளி மோகனரங்கம் குறுக்கிட்டு, "அப்படியானால் அந்தக் கடிகாரம் எப்படி வந்தது?" என்று கேட்டார்.

உடனே ஆனந்தன், "அதையும் சொல்லி விடுகிறேன். நான் எட்டாம் வகுப்புப் பரீட்சை எழுதியிருந்தேன். பரீட்சையில் தேறினால், ஒரு கைக் கடிகாரம் வாங்கித் தருவதாக என் அப்பா சொல்லியிருந்தார். கைக் கடிகாரத்தை எப்படியும் வாங்கி விட வேண்டுமென்று ஆசைப் பட்டேன். அந்த ஆசையில் ஒரு குற்றம் செய்து விட்டேன். அன்று பரீட்சை முடிவை அறிவித்தார்கள். அந்த முடிவுப்படி நான் தேறவில்லை; தோல்வியே அடைந்தேன்! ஆனாலும், வீடு சென்றதும், அப்பாவிடம் உண்மையைக் கூறவில்லை. சிரித்துக் கொண்டே, 'அப்பா! நான் 'பாஸ்' ஆகிவிட்டேன்' என்று புளுகினேன். அப்பா அதை நம்பி விட்டார். உடனே என்னைக் கடைக்கு அழைத்துப் போய் எனக்குப் பிடித்த ஒரு கைக் கடிகாரத்தை வாங்கித் தந்தார். வீடு வந்ததும், என்னைப் பார்த்து, 'ஆனந்தா! நீ தேர்ச்சி பெற்றதை ஆனந்தமாகக் கொண்டாட வேண்டுமல்லவா? அதற்காக இன்று இரவு ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்யச் சொல்லியிருக்கிறேன். நீ இப்போதே போய் உனக்கு மிகவும் வேண்டிய நண்பர்களிடம் சொல்லி வைத்து விடு. இரவு அவர்களுடன் குதூகலமாகச் சாப்பிடலாம்' என்றார். அதைக் கேட்டதும், எனக்குப் 'பகீர்!' என்றது. 'நண்பர்களை அழைத்து வந்தால், என் 'குட்டு' வெளிப்பட்டு விடுமே!' என்று பயந்தேன். அழைத்து வரா விட்டாலும், அப்பா விடமாட்டார். என்ன செய்வது? தர்ம சங்கடமான நிலையில் நான் சேர்த்து வைத்திருந்த ஐந்து ரூபாயை எடுத்துக் கொண்டு அன்று இரவே ரயில் ஏறி இங்கு வந்து சேர்ந்து விட்டேன்......"

ஆனந்தன் முழுவதையும் கூறி முடிக்கவில்லை. அதற்குள், முதலாளி மோகனரங்கம், "அப்படியானால், நீ வைத்திருந்தது என் கடிகாரம் இல்லையா!" என்று மிகுந்த ஏமாற்றத்தோடு கேட்டார்.


உடனே சப்-இன்ஸ்பெக்டர் மேஜை அறைக்குள்ளிருந்த கடிகாரத்தை எடுத்து மேஜைமேல் வைத்தார். அதை எடுத்துப் பார்த்து விட்டு, "ஊஹூம், இது இல்லை. இது சைமன் வாட்ச். என்னுடையது ஹோமர் வாட்ச்! இதை விட விலை அதிகம். அது அந்த ரமணியிடம்தான் இருக்கும்" என்று சொன்னார் மோகனரங்கம்.

"சரி, ஆனந்தா, இங்கே வந்ததும், நீ என்ன செய்தாய்? ஏன் என் வீட்டுக்கு வரவில்லை? விலாசம் தெரியாதா?" என்று கேட்டார் மதுரநாயகம்.

"வீட்டு விலாசம் தெரியாத போனால் என்ன? நாடக சபா பெயர்தான் தெரியுமே! விசாரித்துக் கொண்டு வந்துவிட மாட்டேனா, மாமா? ஆனாலும், ரயிலை விட்டு இறங்கியதும், உங்களிடம் வர யோசனையாகவே இருந்தது. நான் ஏன் வந்தேன் என்று நீங்கள் கேட்பீர்கள். நடந்ததைச் சொன்னால், நான் செய்தது உங்களுக்குப் பிடிக்காது. கோபித்துக் கொள்வீர்கள். ஏதேனும் ஒரு பொய்யைச் சொல்லி ஏமாற்றினாலும், ஒன்றிரண்டு நாளில் உண்மை தெரிந்து போகும். என்னைக் காலே

என்றும் நினைவிலிருக்கக் கூடிய அரும் தருணத்தைப் படம் பிடியுங்கள்





நீங்கள் எப்பொழுதுமே நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகள் பல உள. இன்றும், நாளையும் என்றுமே மறக்க முடியாதவாறு தெள்ளத் தெளிவான போட்டோக்களை வீட்டிலும், வெளியிலும் எடுக்க கேவாபான் 33 பிலிமை உபயோகியுங்கள்.

கேவாபான் 33°

இலவச விபரத்திற்கும் கேவார்ட் எக்ஸ்போஷர் கால்குலேட்டருக்கும் எழுதுங்கள்:


Allied Photographics Limited

அல்லீட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்


(மெயிலிங் டிபார்ட்மெண்ட்), கஸ்தூரி பில்டிங்ஸ், ஜாம்ஷெட்ஜி டாடா ரோடு, பம்பாய்-1

பிரதி வெள்ளி இரவு 8 மணிக்கு ரேடியோ சிலோனில் (31.48 மீட்டரில்) ஏ.பி.எல் ஸ்தாபனத்தாரால் வெளியிடப்படும் "போட்டோ பேண்டஸி" (PHOTO-FANTASY) என்ற நிகழ்ச்சியைக் கேட்டு ஒரு பரிசு பெறுங்கள்.

சிறுவர்கள் சித்திரப்போட்டி



1



2



3

ரூபாய் ஐந்து பரிசு பெற்றவர்கள்: 1. வி. எஸ். லலிதா, (இரண்டாம் வகுப்பு) கிருஷ்ணாபுரம், கடையநல்லூர் P. O. திருநெல்வேலி ஜில்லா. 2. வி. நித்தியானந்தன், வயது 10, கல்வயல், சாவகச்சேரி, இலங்கை. 3. டி. என். சுப்பிரமணி, வயது 11½, திட்டித் தோட்டம், பெரம்பூர், சென்னை-11.

மென்று அப்பா உங்களுக்குத் தந்தி கொடுத்து விட்டால், என் ஏமாற்று வேலை தெரிந்து போகுமே! அப்போது நீங்கள் கோபித்துக் கொள்வதுடன், மறு ரயிலிலே என்னை ஊருக்குத் திருப்பி அனுப்பி விடுவீர்கள். ஜாலியாக ஊரைச் சுற்றிப் பார்க்க முடியாது என்றுதான் வீட்டுக்கு வரவில்லை. ரயில் கட்டணம் போக மீதமிருந்த சில்லறையும் இரண்டு நாளில் கரைந்து விட்டது. மூன்றாவது நாள் — அதுதான் இன்றைக்குக் காலையிலே 'பணத்துக்கு என்ன செய்வது?' என்று யோசித்தேன். உடனே, என் கையிலிருந்த கடிகாரமும், பையிலிருந்த பேனாவும் நினைவுக்கு வந்தன. கடிகாரத்தை விற்க என் மனம் இடம் கொடுக்க வில்லை. அது அப்பா காசு கொடுத்து வாங்கித் தந்தது. அதனாலே அதை விற்று விட்டால், அப்பாவுக்கு விஷயம் தெரியும் போது அதிகமாக ஆத்திரப்படுவார். ஆனால், பேனா இலவசமாக வந்தது தானே! அதனாலேதான் அதைக் கொண்டு போய் ஒரு மார்வாரி கடையிலே விற்கப் போனேன். அந்தச் சமயம் பார்த்து ஒரு போலீஸ்காரர் வந்து என்னைத் திருடன் என்று நினைத்துப் பிடித்துக் கொண்டார். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவர் கேட்கவில்லை. நல்ல வேளை; மாமா, நீங்களாவது இப்போது வந்தீர்கள். இல்லாத போனால், ஜெயிலிலே கிடந்து செத்தே போயிருப்பேன்" என்று கண் கலங்கக் கூறினான் ஆனந்தன்.

"ஆனந்தா, அழாதே! கண்ணைத் துடை. உன் அப்பா எவ்வளவு நல்லவர்! அவரையே நீ ஏமாற்றப் பார்த்தாய். அதனால்தான் இந்தத் துன்பமெல்லாம். இனிமேல் இப்படிச் செய்யாதே!" என்று எச்சரித்தார் மதுரநாயகம்.

"மாமா, சத்தியமாய்ச் சொல்லுகிறேன். இனி, இப்படிச் செய்யவே மாட்டேன். செய்ய நினைக்கவும் மாட்டேன்" என்று உணர்ச்சியுடன் கூறினான் ஆனந்தன்.

பிறகு மதுரநாயகம் சப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "சார், இவன் கூறியதெல்லாம் உண்மைதான். இவனைத் தயவு செய்து விட்டு விடுங்கள். எல்லாம் அந்த ரமணியால் வந்த தொல்லைதான்!" என்று அலுத்துக் கொண்டார்.

(தொடரும்)

TH. 1517



உங்கள் கூந்தலில் அமைந்திருக்கும் சுருள்களை எழிலோங்கச் செய்யுங்கள்

யாவரும், சுருண்டு வளைவுகளோடிருக்கும் கூந்தலைக் கண்டு போற்றுகின்றனர். ஏதாவதொரு கெட்டியான எண்ணெயை உபயோகித்து சிக்குப் பிடிக்கும் விதத்தில் கூந்தலை படிய வைக்கக் கூடாது. கூந்தலுக்கான டாம்கோ வாசனைத் தேங்காய் எண்ணெயை உபயோகித்து உங்கள் கூந்தலின் இயற்கையான வளைவுகளை நிலைக்கச் செய்யுங்கள். உயர்ந்த பாணியில் பரிசுத்தப்படுத்திய இந்த லேசான எண்ணெய், மல்லிகை, ரோஜா, லெவண்டர் ஆகிய மூன்று நேர்த்தியான வாசனைகளில் கிடைக்கிறது.



A TATA PRODUCT

25 வருஷங்களாக இந்தியாவின் மிகவும் விரும்பப்பட்ட கூந்தல் தைலம்.



வாரத்திற்கொருமுறை கூந்தலுக்கு டாம்கோவின் தேங்காய் எண்ணெய் ஷாம்பூவை உபயோகித்து ஸ்நானம் செய்யுங்கள். இதனால் உங்கள் கூந்தல் மிருதுவாயும் இயற்கையான சுருள்களுடனும் இருக்க உதவும்.

டாம்கோ

கூந்தலுக்காக வாசனைத் தேங்காய் எண்ணெயும் ஷாம்பூவும்

இ டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்



23. ஓட் அவுஸ் குடும்பம்

மாடியில் நாகரத்தினம் எக்கச்சக்கமாக அடைபட்டுக் கிடந்தவாறு கீழே என்ன நடக்கிறதென்று பார்த்துக்கொண்டிருந்த சமயம், உஸ்தாத் மீரானும், லிலி ஓட் அவுஸும், அவளுடைய தந்தையும், அவர்களோடு கூட ஒரு சிறுவனும் ஒருமித்து நின்ற காட்சியைக் கண்டு திகைத்தான் அல்லவா? இப்பொழுது அந்த ஓட் அவுஸ்களும் அச் சிறுவனும் உஸ்தாதும் ரெயில்வே ஸ்டேஷனுக்கு எப்படி வந்து சேர்ந்தார்கள்?

இந்தச் சிக்கலுக்குக் காரணமாக அமைந்த சம்பவம் மெய்யாகவே ஒரு பெருஞ் சிக்கலாகத்தான் இருந்தது. எல்லாம் அந்த 'ஜிங்கிட ஜம்' செய்த வேலை!


திருச்சி டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் வேலை பார்த்து வந்த லிலி ஓட் அவுஸுக்கு இரண்டு சகோதரர்கள். ஒருவன் பெயர் ஜான். மற்றவன் பெயர் ஹென்ரி. ஜான் லிலிக்கு அண்ணன். ஹென்ரி லிலியின் தம்பி—சிறு பையன்.

மிஸ்டர் ஓட் அவுஸின் குடும்ப வாழ்க்கை ஒரு கனகாம்பரப் பூ மாதிரி. வெளிப் பார்வைக்கு அழகாக இருக்கும். ஆனால் அதில் வாசனை இல்லை. பாவம், மனைவியின் ஒத்தாசை அதிகமாகத் தேவைப் படுகிற ஐம்பதாவது வயதில் ஓட் அவுஸை நிர்க்கதியாய் விட்டுவிட்டு அவன், இந்த உலகினின்று பிரிந்தான்.

அதன்பின் ஓட் அவுஸின் வாழ்க்கையில் சோகம் அதிகரிக்க ஆரம்பித்தது. "அழுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று ஏசுநாதர் சொன்ன வார்த்தைப்படி பார்த்தால், ஓட் அவுஸ் மிக மிக பாக்கியவான்தான். ஏனென்றால் வாழ்க்கையில் மனைவியின் மரணத்திற்குப் பிறகு அவர் கண்ணீர் வடித்த சந்தர்ப்பங்கள் எத்தனை எத்தனையோ! ஆனால் ஆண்டவனுடைய திருக்குமாரரின் அருள் வாக்கிலே உள்ள "அழுகை" அந்த வகையான அழுகை அல்லவே! உள்ளம் உருகி உருகிக் கரைகிற புனித ஏக்கம் அல்லவா ஏசுநாதர் குறிப்பிட்டது! அந்தப் புனிதமான பரிசுத்த ஏக்கத்திற்கு இடமில்லாமல் ஓட் அவுஸின் ஏக்கம் பூராவதையும் தானே வாங்கிக்கொண்டான், அவருடைய புத்திர பாக்யம் ஜான். அவனுடைய நடத்தைகளை நினைந்து நினைந்துத்தான் கண்ணீர் வடித்தார் தந்தை ஓட் அவுஸ்.


ஜான் அப்படி என்ன அக்கிரமம் செய்தான்? நடத்தைப் பிசகு அவனிடம் இருந்ததா? கெட்டவர்களோடு சகவாசம் பண்ணிக்கொண்டு, அயோக்கியனாக நடந்தானா அவன்? இல்லை. பின் ஏன் ஓட் அவுஸ் அவனுக்காகக் கவலைப்பட்டார்?

ஜானுக்குச் சிறு வயதிலிருந்தே ரேகை சாஸ்திரத்தில் ஒரு பைத்தியம். பள்ளிக்கூடத்துப் பாட புஸ்தகங்களைப் படிக்க மாட்டான். "கீரோவின் ரேகை சாஸ்திரம்" "உலகப் பெரியார்களின் கைகள்", "ரேகைகளின் நுட்ப விளக்கங்கள்", "உன்னங் கையிலே உன்னுடைய விதி" என்றெல்லாம் பலபல தலைப்பிலே நூற்றுக் கணக்கான ஆங்கிலப் புஸ்தகங்கள்





ஜானின் அலமாரியிலே இருந்தன. ஒரு நாள் ஓட் அவுல் தம்முடைய சீற்றத்தில் அந்தப் புஸ்தகங்களை யெல்லாம் எடுத்து மூட்டை கட்டினார். அப்படியே வண்டி வாடகை கொடுத்து அந்த மூட்டையை ஏற்றிப் போய்ப் பழைய புஸ்தகக்காரனிடம் இலவசமாகக் கொடுத்து விட்டு வந்து விட்டார்! ஆனாலும் அதன் பிறகாவது ஜானின் பைத்தியம் நின்றதா? இல்லை! யாரோ ஒருவர் நாடி சோதிடம் பார்க்கிறார் என்று கேள்விப்பட்டு, அவரிடம் போய்த் தினமும் நோட்டு நோட்டாக எதிர்காலப் பலன்களை எழுதி வர ஆரம்பித்து விட்டான் ஜான்! அவனுடைய சொந்த எதிர்காலத்தில் ஆரம்பித்த நாடி சோதிடம், படிப்படியாக வளர்ந்து அவர்கள் வீட்டில் வளருகிற "மடி" நாய்க் குட்டியின் எதிர்காலம் வரை நோட்டு நோட்டாகக்குவிய ஆரம்பித்தது! உண்மையில், அவர்கள் வீட்டுப் பூனைக் குட்டிக்குக்கூட ஒரு நோட்டு தனியாக எழுதி வைத்திருந்தான் ஜான்! அந்தப் பூனைக்குட்டி நித்தம் எத்தனை எலிகளைத் தாக்கும் என்றுகூட அதில் ஒரு கணக்கு எழுதி வைத்திருந்தான் அவன்! இதை யெல்லாம் கண்டு, ஓட் அவுலுக்கு ஆவேசமே வந்து விட்டது! ஆனால் இந்தத் தடவை அவர் அந்த நோட்டுகளைப் பழைய புத்தகக் கடைக்கு எடுத்துப் போகவில்லை. மகன் வெளியே போயிருந்த நேரம் பார்த்து அவற்றில் ஒன்றை எடுத்துப் படித்துப் பார்க்கலாம் என்று புரட்டினார். அந்தக் குறிப்புப் புஸ்



தகம் ஜானின் வாழ்க்கை ஏடு!

ஓட் அவுஸுக்குச் சாதாரணத் தமிழ் எழுத்துக்களை வசனம் கூட்டிப் படிப்பதே சிரமம். திருச்சியில் நீண்ட நாள் இருந்ததன் பயனாக ஏதோ கொஞ்சம் தடவிப் பார்த்து வாசிப்பார்! அவ்வளவுதான். ஆனால் இப்பொழுது நோட்டிலிருந்த பலன்களோ ஒரே செய்யுளாக இருந்தன! ஆனாலும் ஓட் அவுஸ் முயற்சியைக் கைவிடவில்லை. முதலாவது பாடலை எடுத்துத் தைரியமாக எழுத்துக் கூட்டிப் படித்தார்.

ஏதோ விசுவாமித்திரரும் வசிஷ்டரும் அந்தக் கை ரேகைக்கு "உடமஸ்தனு"ன மனிதனைப்பற்றித் தர்க்கம் பேசுவதாக எழுதியிருந்தது. அதை யெல்லாம் புரட்டிக் கொண்டு மேலே விஷயத்துக்கு வந்தார்.

"இவன் நாமம்
முழுத்தில் பாதி:
இவன் தந்தை
என்பான் மரவீடு"

என்று எழுதி இருந்தது. இதைப் பார்த்ததும் அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. தலை சுற்றியது. சுற்றிய தலைக்குள்ளே போய்க் கோபமும் 'குபீர்' என்று ஏறியது. "ஜான் வரட்டும்! இன்று இரண்டில் ஒன்று பார்த்து விடுகிறேன்! முழமாம். பாதியாம். மர வீடாம். என்ன அக்கிரமம்!" என்று முடிவு கட்டினார்.

அன்று மாலை ஜான் வந்ததும் ஓட் அவுஸுக்கு ஆவேசம் வந்தது. ஆவேசத்தில் பெரிய பெரிய இங்கிலீஷ் வார்த்தைகளைப் போட்டு மகனைத்திட்டினார். எப்பொழுதுமே அவருக்குக் கோபம் அதிகமானால், வார்த்தைகளும் நீளம் நீளமாகவரும். முழம் முழமாக வரும்! ஆனால் ஜான் இவற்றைப் பொருட்படுத்துவதில்லை. பொருட்படுத்த முயன்றாலும் அவற்றின் பொருள் அவனுக்குப் புரிவதில்லை! பெரிய சௌகரியம் அது! அப்பாவைப் பேச விட்டு விட்டு, அவன் பேசாமல் கேட்டுக் கொண்டே இருப்பான்! இடை இடையே 'கூல்', 'பூல்' என்று எளிய சொற்கள் — எல்லாருக்கும் புரிகிற வார்த்தைகள்—வரும். அப்பொழுது மட்டும் நிமிர்ந்து உட்கார்ந்து கொள்வான். ஆனால் இன்றைக்கோ அப்பாவின் கோபத்தில் ஆங்கிலச் சொற்களோடு பெரிய பெரிய லத்தீன் சொற்களும் வர ஆரம்பித்தன. முறைத்துப் பார்த்தான். சொன்னான்:

"அப்பா! இந்த நோட்டுப் புத்தகத்தில் உங்களுடைய பெயர் கூட வந்திருக்கிறது தெரியுமா! எல்லாம் என் கை ரேகையைப் பார்த்து, ஒரு பழைய ஓலைச் சுவடியிலிருந்து எடுத்து எழுதிய பாட்டு!" என்று பெருமையோடு சொன்னான்.

"ஓலைச் சுவடியா?" என்று சீறுகிற ஆங்கிலத்திலே கேட்டார் ஓட் அவுஸ்.

"ஆமாம்! என்னுடைய பெயர் 'முழத்தில் பாதி' என்று வந்திருக்கிறது. ஒரு முழத்தில் பாதி ஒரு ஜாண் அல்லவா! என்னுடைய பெயர் ஜான்தானே! அதனால் தான் முழத்தில் பாதி என்று அந்த ஏட்டிலே சொல்லியிருக்கிறது. உங்களுடைய பெயர் ஓட் அவுஸ் அல்லது உட் அவுஸ். அதை மர வீடு என்று சொல்லியிருக்கிறது, அப்பா!" என்று பையன் விளக்கம் கொடுத்தான்.

தகப்பனுக்குக் கோபம் வந்தாலும் ஒரு பக்கம் ஆச்சரியமும் சேர்ந்து வந்தது!

"என்னடா, ரேகையைப் பார்த்துப் பெயரைக் கூடச் சொல்கிறதா?" என்று கேட்டார்.

"என் பெயரை மட்டுமா? மம்மியின் (அம்மாவின்) பெயர் கூடச் சொல்லியிருக்கிறன் அப்பா. 'வயலெட்' என்பதை,

"நிறம் ஒரு பெயராம்
இவன் தாயொரு செந்நீலி!"

என்றே சொல்லியிருக்கிறது. நம்முடைய லிலியை என்ன சொல்லியிருக்கிறது தெரியுமா?

'இவன் தங்கையும்
தானே அல்லி எனும்
தாமரைப் பூம் பெயர்
கொண்டாள் மாதோ!'

என்று லிலி என்பதை விளக்கிச் சொல்லியிருக்கிறது!''

மகன் இப்படிச் சொன்னதும் ஓட் அவுஸுக்கு ஒன்றுமே ஓடவில்லை.

"தம்பி, இத்தனை தமிழ் நீ எங்கே படித்தாய்?'' என்று வியப்போடு கேட்டார்.

"எல்லாம் நாடி சோதிடரிடந்தான்!'' என்றான் பையன். தகப்பனார் இறங்கி விட்டார். இதைக் கண்டதும் மகனுக்கு உற்சாகம் வந்து விட்டது.

"என்னுடைய எதிர்காலம் இந்த ஏட்டில் ரொம்பவும் உயர்வாகச் சொல்லி



யிருக்கிறது. அப்பா! நீங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள்?'' என்று தகப்பனாருக்குப் புத்திமதி சொல்ல ஆரம்பித்தான் ஜான்!

இதன் பிறகு ஓட் அவுஸ் தம்முடைய மகன் விஷயத்தில் அதிகமாகத் தலையிடுவதை நிறுத்தியதோடு, அடிக்கடி அழுவதையும் கோபப்படுவதையும் குறைத்துக் கொண்டார். ஆனால் பையனுடைய எதிர்காலம் என்னவோ, இறந்த காலத்தைப் போலவே தான் இருந்து வந்தது. "உயர்வை''க் காணோம்!

"நாடி சோதிடத்தில் பெயர் சரியாக இருக்கிறது. கழிந்தகாலம் சரியாக இருக்கிறது. ஆனால் எதிர்காலம் வரும்போது தான் ஒருமாதிரி உதைக்கிறது!'' என்று ஒரு புதிய சமாதானம் சொல்ல ஆரம்பித்தான் ஜான். அவனுடைய மனத்திலும் உண்மையிலேயே இப்பொழுது குழப்பம் ஏற்பட ஆரம்பித்தது.

உத்தியோகம் இல்லாமல் சும்மா இருக்க இருக்க, ஜானின் உள்ளம் எதிர்காலப் பலன்களை ஆராய்வதிலேயே சென்றது. இதன் பயனாக ஒரு பெரிய மெஸ்மெரிஸ நிபுணருடைய சிநேகமும், அவர் மூலம் பகேரானுடைய தொடர்பும் ஏற்பட்டன ஜானுக்கு. சிறு பையன்களை மெஸ்மெரிஸத்தினால் மயங்கி விழச் செய்து, அவர்கள் மூலம் நமது எதிர்காலத்தைப் பற்றிய கேள்விகளுக்கு விடை தெரிந்து கொள்ளலாம் என்று முயற்சிக்க ஆரம்பித்தான் ஜான். பழக்கம் அதிகமாக அதிகமாகத் தனது தம்பி ஹென்ரி என்ற சிறுவனையே இந்த மெஸ்மெரிஸப் பையனாகத் தயாரிக்க முனைந்தான் ஜான். 'அப்பாவுக்குத் தெரியக் கூடாது!' என்றுமட்டும் ஆங்கில முறையிலே ஒரு 'ப்ராமிஸ்' வாங்கிக் கொண்டான், தம்பியிடம்!

லிலி ஓட் அவுஸின் அண்ணன் ஜானும், தம்பி ஹென்ரிச் சிறுவனும் பகேரானுடைய வீட்டிலேயே வாசம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இப்படி இரண்டு மாதம் கழிந்தது. இதற்குள் ஓட் அவுஸ் கல்கத்தாவுக்கு ஒரு நடை சென்று வந்து, தம்முடைய எட்டிய உறவினரான ஆங்கிலோ இந்திய துரை ஒருவர்மூலம் கல்கத்தா ரெயில்வே நிலையத்தில் மகனுக்கு 'பயர்மன்' வேலை சம்பாதித்துக் கொண்டு வந்தார். ஜானும் வேறு வழியில்லாமல், பகேரானிடம் பிரியா விடை பெற்றுப் பிரிந்தான். ஆனால் தன்னுடைய ஸ்தானத்தில் தனது தம்பி ஹென்ரியை நியமித்து விட்டுத்தான் கல்கத்தா புறப்பட்டான் ஜான்!

இந்த நிலைமையிலேதான் பகேரான் தன்னுடைய மெஸ்மெரிஸ ஆராய்ச்சியை அந்தச் சிறுவன் ஹென்ரியை வைத்துக் கொண்டே இப்பொழுது தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தான்.

ஹென்ரிக்குத் தமிழ் அதிகமாக வராது. ஆங்கிலோ இந்தியர்கள் பேசுகிற வழக்கமான வீட்டுச் சொற்களைத் தவிர, வேறு அதிகமான தமிழ் வார்த்தைகள் அவனுக்குத் தெரியாது. உருது, ஹிந்துஸ்தானியெல்லாம் அவனுக்குத் தொலைதூரம். இந்த நிலையில் தமிழ் மொழியில் உள்ள வல்லினங்களை 'கசடதபற' என்று ஒரு தரம் உரக்க உச்சரித்து விட்டாலே நடுநடுங்கி மயக்கம் போட்டு விழுந்து விடுவான் ஹென்ரி. இப்பொழுது "ஙஞணநமன''மும் சேர்ந்து விட்டால் சொல்லவா வேண்டும்! சந்தேகமேயில்லை; ஒரே மெஸ்மெரிஸ மயக்கந்தான்!

மெஸ்மெரிஸம் இப்படிக் கோலாகலமாக நடந்து கொண்டிருந்த சமயந்தான்



சரியாகத் தையுங்கள்!
KHATAU MILLS
PALKHI
பல்கி பிராண்டு
KHATAU MILLS BOMBAY
PEACOCK
மயில் பிராண்டு
தி கட்டாவ்
மகான்ஜி ஸ்பின்னிங் &
வீவிங் கம்பெனி லிமிடெட்.
மில்ஸ்: பைகுளா, பம்பாய்.
தையல் நூல்
SISTA'S-KMS-139-TAM

நாகரத்தினம் பகோரானுடைய வீட்டுக்குள்ளே நுழைந்தது!

உஸ்தாத் மீரான் பகோரான் வீட்டுக்கு வரவேண்டிய காரணந்தான் ஆமினா—மஜீத் காதல்! ஆனால் இந்த ஓட் அவுஸ் களும் அங்கே வருவானேன்?

மூத்த மகன் ஜான் கல்கத்தாவுக்குப் போனதிலிருந்து பள்ளிக்கூட லீவு நாட்களில் ஹென்ரி 'பாலக்கரைக்குப் போகிறேன்' என்று வீட்டிலிருந்து கிளம்பினால், சாயந்திரம் இருட்டிய பிறகுதான் வீடு திரும்புவான். இப்படிப் பல நாட்கள் நடக்கவே தகப்பனாருக்கு இது கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை.

"பாலக்கரையில் யார் வீட்டுக்கு?" என்று கேட்க ஆரம்பித்தார் தகப்பனார். ஒவ்வொரு லீவு நாளிலும் ஒவ்வொரு விதமாக விலாசம் கொடுத்தான் ஹென்ரி. அதட்டிக் கேட்டால் கண் இமைகளைக் கூட மூடாமல் அப்படியே கல்லுளி மங்கனாக நின்றான்! ஓட் அவுஸுக்கு இது கவலை தந்தது.

ஒருநாள் தன் மகனைப் பார்த்து அவர் சொன்னார்: "உன் அண்ணன் கல்கத்தாவில் உதவிக்கு ஆளில்லாமல் தனியாக இருக்கிறான். நீ அங்கே போகிறாயா?"

"ஊஹூம்" என்று ஒரே இழுப்பாக இழுத்தான் ஹென்ரி.

"ஏண்டா, அப்படியென்ன என்னையும், உன் அக்காளையும் பார்க்காமல் நீ இருக்க முடியாதா?" என்று கேட்டார்.

"அதுக்கு இல்லை, ஆனாலும் மாட்டேன்!" என்று சொன்ன பையன் அதற்கு மேல் ஒன்றுமே பேசவில்லை. கேட்டாலும் மௌனமாக இருந்தான்! இமையைக் கொட்டவில்லை!

ஜான் விஷயத்தில் முன்பெல்லாம் அழுதார் தந்தை! இப்பொழுது ஹென்ரி விஷயத்தில் அவர் அழுவதில்லை. யோசிக்க ஆரம்பித்தார். தன்னிடமும் லிலியிடமும் இல்லாத அளவுக்கு அந்தப் பாலக்கரையிலே இந்தச் சிறுவனுக்கு என்ன அத்தனை பாசம் என்று யோசனை செய்ய ஆரம்பித்தார். இதன் பயனாக ஒரு நாள் மகன் வீட்டிலிருந்து கிளம்பியதும் அவனைப் பின் தொடர்ந்தார். பாலக்கரையில் எந்த வீட்டுக்குள்ளே போகிறான் என்று கண்டு பிடித்துவிட்டு மௌனமாகத் திரும்பினார். திரும்பி வந்து அக்கம் பக்கத்தில் அந்த வீட்டுக்கு உடையவன் யார் என்று விசாரிக்க ஆரம்பித்தார்.

ஓட் அவுஸ் தீவிரமாகத் துப்பு விசாரித்ததின் பயனாக, பகோரானைப் பற்றிய விவரங்கள் தெரிய வந்தன. அவன் உஸ்தாத் மீரானின் பிரதம சிஷ்யன் என்றும், சிலம்ப விளையாட்டில் தீரன் என்றும் சொன்னார்கள். ஆனால் யாருக்கும் ஒரு விஷயம் சரியாகத் தெரியவில்லை. அதாவது பல நாட்களில் ஒரு சிறு பையனை வீட்டுக்குள்ளே அழைத்துப் போய் அறைக்குள்ளே ஏதோ செய்கிறான் பகோரான்; அப்பொழுது ஊதுவத்தி வாசனை வருகிறது. சில சமயங்களில் ஏதோ, 'ஜங்கிட ஜிங்கிட' என்று ஒரு உச்சாடனம் கேட்கிறது. மற்றப்படி விவரம் சரியாகத் தெரியவில்லை—என்று அண்டை அயல் வட்டாரங்களில் சொன்னார்கள். ஓட் அவுஸுக்குப் புத்தி பெரிதும் குழம்பியது.

ஒரு நாள் மகன் ஹென்ரியையும், லிலியையும் அழைத்துக் கொண்டு "பாலக் கரையில் ஒரு நண்பரைப் பார்த்து விட்டு வரலாம்!" என்று ஒரு சிறு சாமர்த்தியப் பொய்யைச் சொல்லிக் கொண்டு கிளம்பினார் ஓட் அவுஸ். மகள் லிலியிடம் மட்டும்



சூசகமாக விஷயத்தைச் சொல்லியிருந்தார். பகோரானையே நேரிலே பார்த்து விடுவது என்று தீர்மானம்!

பாலக்கரை நெருங்க நெருங்கப் பையனுடைய நடை வேகமாக ஆரம்பித்தது. அக்பர் சதுக்கத்திலே திரும்பிய போது, தகப்பனார் தன்னோடு வருகிறார் என்பதைக் கூட மறந்துவிட்டு, 'விறு விறு' என்று நடக்க ஆரம்பித்தான் ஹென்ரி. இதை ஓட் அவுஸ் நன்கு கவனித்தார். லிலியும் ஆச்சரியப்பட்டுப் போனாள்.

பகோரான் வீடு வந்ததும் பையன் சற்றும் கூச்சமின்றி உள்ளே நுழைந்தான். ஓட் அவுஸும் மகளும் உடன் சென்றார்கள். ஆனால் அங்கே உஸ்தாத் மீரான் நின்றுகொண்டிருந்தார்!

ஓட் அவுஸுக்கு உஸ்தாத் மீரானை நன்றாகத் தெரியும். காஜா மலையில் முன்பு திருட்டுப் பயம் அதிகமாக இருந்த காலத்

தில், இரவு நேரங்களில் 'ரோந்து' சுற்றுவதற்காக உஸ்தாதின் ஒத்தாசையைப் பெற்றதுண்டு ஓட் அவுஸ். அதிலிருந்து உஸ்தாத் இப்பொழுதும் என்றைக்காவது அந்தப் பக்கம் வந்தால் கன்டோன்மென்டில் கோர்ட்டுக்குப் பக்கத்திலே இருந்த ஓட் அவுஸின் வீட்டுக்கு வரத் தவறுவதில்லை. இப்பொழுது உஸ்தாதைக் கண்டதும் இருவரும் மிக்க மரியாதையோடு சலாம் செய்தார்கள்.

"உஸ்தாத்! எத்தனை அருமையான சந்திப்பு இது!" என்றார் ஓட் அவுஸ்.

"எல்லாம் அல்லா ஹூத்தாலாவின் செயல். எந்தச் சந்திப்பையும் ஆண்டவன் அர்த்தத்தோடுதான் கூட்டுவிக்கிறான்!" என்றார் உஸ்தாத்.



"உஸ்தாத்! நீங்கள் சொன்னது நூற்றில் ஒரு வார்த்தை. நான் பகேரானிடம் நேரில் சில விஷயங்கள் பேசித் தெரிந்து போக வந்தேன். ஆனால் நீங்கள் இங்கே இருப்பதைப் பார்த்தால் உங்களிடந்தான் முதலில் அதைத் தெரியப்படுத்த வேண்டும் என்று கர்த்தரின் கட்டளைபோலும்!" என்றார் ஓட் அவுஸ்.

"சரி; அப்படியானால் வாருங்கள் பேசிக்கொண்டே நம்முடைய வீட்டுக்குப் போவோம்! நான் இங்கே வந்து வெகு நேரம் ஆகி விட்டது!" என்றார் உஸ்தாத்.

"சரி" என்று சொல்லித் திரும்பினார்கள் ஓட் அவுஸும் லிலியும்.

"உங்கள் பையன் வந்தானே எங்கே காணோம் அதற்குள்ளே!" என்று கேட்டார் உஸ்தாத்.

"பகேரானுடைய அறைக்குள்ளே ஓடியிருக்கிறான். பரவாயில்லை. நாம் போகலாம். பயல் பிறகு வருவான் தானாகவே!" என்றார் ஓட் அவுஸ்.

"என்ன இவ்வளவு அலட்சியமாகச் சொல்கிறீர்கள், பையனைப் பற்றி!" என்று கேட்டார் உஸ்தாத்.

"அலட்சியமில்லை உஸ்தாத். அது அவனுடைய வழக்கமாகப் போய் விட்டது. அதைச் சொல்லத்தான் வந்தேன் இங்கே!" என்று கவலையோடு சொன்னார் ஓட் அவுஸ்.

மூவரும் நடக்க ஆரம்பித்தார்கள். இப்படி அவர்கள் நடந்துசென்று, விஷயங்களை அலச ஆரம்பித்ததன் பயனாகத்தான் உஸ்தாதும் ஓட் அவுஸுகளும் அன்று காலையில் திருச்சி ஜங்ஷனுக்கு வர நேர்ந்தது. ரயில் புறப்படும் நேரத்துக்கு முன்பே அவர்கள் கந்தப்பன், டாக்டர் சுரேஷ், அப்புலிங்கம்—மூவரையும் எதிர் பார்த்துப் பினாட்பாரத்தில் காத்துக் கொண்டிருக்கவும் நேர்ந்தது!

"உஸ்தாத்! நாங்கள் வந்து சேரக் கால தாமதம் ஆகிவிட்டது. இப்பொழுது ரயில் புறப்படும் சமயம். ஓட் அவுஸ்களை அறிமுகம் செய்வதற்குத்தான் நேரம் இருக்கிறது. வேறு ஒன்றும் பேச நேரமில்லை. முக்கிய விஷயத்தை மட்டும் சொல்லி விடுங்கள்!" என்றார் டாக்டர் சுரேஷ்.

உஸ்தாத் பேசினார்: "கந்தப்பா! உன்னை எனக்கு நேரிலே அதிகம் பழக்கமில்லை. என்றாலும் உன்னைப் பற்றி எனக்குப் பூரணமாகத் தெரியும். தயவு செய்து நீ திரும்பும்போது உங்களுடைய ஊரிலே இருந்து இந்தக் காகிதத்தில் எழுதியிருக்கிற சாமான்களை மட்டும் தயவு செய்து கொண்டு வா. பாக்கி விஷயம் எல்லாம் நீ வந்த பிறகு பேசிக் கொள்ளுவோம்!" என்று சொல்லி ஒரு காகிதத் துண்டைக் கொடுத்தார் உஸ்தாத்.

ஓட் அவுஸையும் அவருடைய மகளையும், அப்புலிங்கத்துக்கும் கந்தப்பனுக்கும் அறிமுகம் செய்வித்தார் டாக்டர் சுரேஷ். இதற்குள் ரயில் ஊதிவிட்டது. உஸ்தாத் சலாம் செய்தார். மேனாட்டு முறையிலே "பைபை" என்றார்கள் ஓட் அவுஸ்கள்.

ரயில் நகர்ந்தது.

"டாக்டர் ஸார், இந்த ஓட் அவுஸ்களை உங்களுக்கு நன்றாகத் தெரியும் போலிருக்கிறதே!" என்று கேட்டான் கந்தப்பன்.

"அது மட்டுமில்லை. இவர்கள் இங்கே இப்பொழுது வருவார்கள் என்றுமே டாக்டருக்குத் தெரியும் போல் இருக்கிறது!" என்றான் அப்புலிங்கம்.

டாக்டர் சுரேஷ் சிரித்தார். "இவர்களை எனக்கு நன்றாகத் தெரியாது. ஆனால் இவர்கள் இப்பொழுது இங்கு வருவார்கள் என்பது மட்டும் நன்றாகத் தெரியும்! அத்தனை பெரிய ஆனைமுகத்து விநாயக மூர்த்திக்கு மூஞ்சூறு வாகனமாக இருக்கிறது போல, தம்பி கந்தப்பன் சிறு பிள்ளையாக இருந்தாலும் ஒரு மகத்தான காரியத்துக்கு ஆதாரமான கருவியாக அமைகிறான்!" என்றார் டாக்டர் சுரேஷ்.

சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு டாக்டர் மேலும் சொன்னார்:

"சொல்லப் போனால் பியானோவில் 'கீ நோட்' என்கிறார்களே அப்படிப்பட்ட ஆதார சுருதியே கந்தப்பன்தான். சந்திரிகாவின் வாழ்க்கைப் பாடல், ஜீவகானம், எப்படி எதிர்காலத்தில் ஒலிக்கப் போகிறது என்பதை எண்ணிப் பார்த்தால் எனக்குக் கந்தப்பனை வேறு விதமாக வர்ணிக்கத் தோன்றவில்லை."

இப்படி டாக்டர் சொன்னபோது அப்புலிங்கம் திகைப்பும் ஆவலும் மேலிட்டவனாக அவரையே பார்த்தான். (தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor: Mi. Pa. Somasundaram


ஹிமாலயா புக்கே
உபயோகித்து அதன்
அதிகப்படியான
புதுப்பொலிவை
உணருங்கள்
—நாள்முழுவதும்!
வதனத்திற்கு ஹிமாலயா
டாய்லெட் புக்கே
பவுடர் ஒரு சிறந்த தின
சரி அழகு சாதனம்—
மணமுள்ளது,
மிருதுவானது,
குளிர்ச்சியானது.
ஹிமாலயா
புக்கே
டாய்லெட் அண்டு டால்கம்
பவுடர்ஸ்
சிவப்புக் கோடிட்ட ஹிமாலயா புக்கே
டாய்லெட் பவுடர் டின் ஒரு பவுடர்
பேடுடன் கூடியது.
HBF. 13A-50 TM இராஸ்மிக் கம்பெனி லிட்., லண்டனுக்காக இந்தியாவில் செய்தது.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

